மன்றம்

ஆசிரியர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

1 – 8 – 56

★

அணு 4

★



புகைவண்டி போயிற்று!—பிறகு டிக்கட்டு வந்தது!

பொதுவாகப் போட்டி போட்டு மல்லுக்கு நிற்பது, இடித்துப் புடைத்துக் கொண்டு மேல்விழுந்து செல்வது, நெருக்கடியில் சிக்கித் தாககுவோரைத் தள்ளிக் கொண்டு மேற்செல்வது போன்ற பண்புகளை அறிஞர் அண்ணா அவர்களிடம் அறவே காண முடியாது.

அடிபிடி சண்டையோர், மக்கள் கூட்டத்தின் நெரிசலோ காணப்பட்டால் அண்ணா அவர்கள் அவற்றில் தாம் சிக்கிக் கொள்ளாமல், ஒதுங்கித் தப்பிப்போகவே பார்ப்பார்கள். புகைவண்டியிலோ, அல்லது நிலவூர்தியிலோ (பஸ்ஸிலோ) கூட்டம் மிகவாக இருந்து நெரிசல் காணப்பட்டால், அவைகளில் ஏறுமல் நின்று விடுவார்களே ஒழிய, எப்படியும் போய்த் தீருவது என்று இடித்துப் புடைத்துக்கொண்டு ஏறுவது கிடையாது.

அண்ணாவின் இந்தப் பண்பு பெரியார் அவர்களுக்குத் துவக்கக் காலத்தில் புலப்படவில்லை. பெரியாரும் அண்ணாவும் சிலபொழுது சேர்ந்து சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் ஈடுபடுவது உண்டு. அந்த நாட்களில், நீண்ட தொலைவிலுள்ள புகைவண்டி நிலையத்திற்கு ஒரேமுறையாக டிக்கட்டு எடுப்பதைவிட, இடையிலுள்ள சில நிலையங்களில் இறங்கி இறங்கி எடுத்துக்கொண்டு சென்றால், அதன்மூலம் சிறிதளவு கட்டணத் தொகை மிச்சப்படுவது வழக்கம். பெரியாரும், அண்ணாவும் ஒருமுறை ஈரோட்டிலிருந்து திருச்சி செல்லும்படி நேரிட்டது. சிறிது பணம் மிச்சமாகும் என்று கருதிக்கொண்டு கரூர் வரையில் இருவர்க்கும் டிக்கட்டு வாங்கிக்கொண்டு, கரூரில் இறங்கித் திருச்சிக்கு மீண்டும் வாங்கிக் கொள்ளலாம் என்று பெரியார் எண்ணினார்கள். ஒரேயடியாக திருச்சிக்கே டிக்கட்டு வாங்குமபடியும், கரூரில் இறங்கித் தம்மால் டிக்கட் வாங்க இயலாமற் போகும் என்றும் அண்ணா அவர்கள் பெரியாரிடம் கூறிப் பார்த்தார்கள். ஆனால் பெரியார் அவர்கள் அதற்கு இணங்காமல் கரூருக்கே டிக்கட்டு வாங்கினார்கள்.

கரூர் நிலையம் வந்ததும், அண்ணாவிடம் பணத்தைக் கொடுத்துத், திருச்சிக்கு டிக்கட்டு வாங்கும்படி பெரியார் அவர்கள் கூறினார்கள். அண்ணா அவர்கள் டிக்கட்டு வழங்கும் சாளரத்தின் அருகே போய்ப் பார்க்கும்போது மிகவான கூட்டம் இருக்கவே எல்லோர்க்கும் பின்னால் போய் வழக்கப்படி நின்று கொண்டார்கள். நீண்டநேரம் ஆகியும் அண்ணாவைக் காணவில்லை என்றவுடன் பெரியார் அவர்கள் எட்டி எட்டிப் பார்த்துத் தவித்துக்கொண்டிருந்தார்கள். எல்லோரும் டிக்கட்டு வாங்கி அண்ணா அவர்கள் டிக்கட்டு வாங்குவதற்குள் வண்டி புறப்பட மணி யடித்தாகிவிட்டது. அண்ணா அவர்கள் டிக்கட்டு வாங்கிக்கொண்டு, புகைவண்டி நிலையத்திற்குள் நுழைவதற்குள் வண்டி புறப்பட்டுவிட்டது. அண்ணாவும் வரவில்லை, வண்டியும் புறப்பட்டுவிட்டது என்றவுடன் பெரியார் அவர்கள் அவசர அவசரமாகப் பெட்டி, படுக்கை முதலிய சாமான்களைக் கீழே தள்ளிவிட்டுத் தாமும் கீழே குதித்துவிட்டார்கள். பிறகு அண்ணா அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

“ஏன் இவ்வளவு நேரம்? என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?” என்று பெரியார் அவர்கள் ஆத்திரத்துடன் அண்ணாமீது சீறிவிழுந்தார்கள்.

“இப்பொழுதுதான் டிக்கட்டு கொடுத்தார்கள்!” என்று அண்ணா அவர்கள் அமைதியாகக் கூறினார்கள்.

“இந்த டிக்கட்டு வாங்க முடியவில்லை உங்களால்! இப்பொழுது இரயில் போய் விட்டதே, இனி என்ன செய்வது?” என்று பெரியார் அவர்கள் சினந்து கொண்டார்கள்.

“நான்தான் அப்பொழுதே சொன்னேனே, திருச்சிக்கே டிக்கட்டு எடுங்கள் என்று! நீங்கள்தானே கேட்கவில்லை!” என்று அண்ணா அவர்கள் கூறினார்கள்.

பிறகு வேறு வழியின்றிக் கரூரிலேயே தங்கியிருந்துவிட்டு அடுத்த புகைவண்டியில் திருச்சிக்குச் சென்றார்கள். அதுமுதல் டிக்கட்டு வாங்கும் வேலைக்குப் பெரியார் அவர்கள் அண்ணாவை அனுப்புவதே யில்லையாம்.

மன்றம்
இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.
மலர் 5 ★ (1—8—56) ★ இதழ் 7

டில்லி தேவதை !

"ஆதிதேவியே!"

"ஆயிரங் கண்ணுடையாளே!"

"பத்ரகாளி! பராசக்தி!"

"பக்தர்களின் தாயே!"

"ஆயிமகமாயி!"

"அகிலாண்டகோடி, ஆனந்த நாயகி!"

"உலகமாதா, உமையானவளே!"

"இன்னமும் பாராமுகம் ஏனம்மா?"

பக்தன் பரவசத்துடன் பாடுகிறான், பூசைகள் போடுகிறான், ஆனந்தக்கண்ணீர் பெருக்கி ஆடுகிறான், தனக்குள்ள குறைகளைச்சொல்லி, அழுது புலம்புகிறான்.

ஆனால் விழித்தகண் மாறாமல் தேவி பார்த்தபடி இருக்கிறாள், பக்தனின் குறைகள் தீரவில்லை, வளர்ந்தபடி இருக்கின்றன. மாதாமுன் மண்டியிட்டு அவன்—அந்த ஏழை துடிக்கிறான், கதறுகிறான், காளியின் புன்னகை மாறவில்லை. ஆயிரங் கண்ணுடையாள் ஒரு கண்ணால்கூட அவனைப் பார்த்துக் குறைகளைத் தீர்க்க மறுக்கிறாள்.

பக்தி கோபமாக மாறுகிறது, பூசை அலங்கோலமாகிறது, பரவசத்துடன் புகழ்ந்தவன் கோபக்கனலை வீசுகிறான், மலர்தூவி அடிபணிந்த பக்தன், அதே கைகளால் அந்தக் கூடத்தைச் சின்னாபின்னப்படுத்துகிறான்.

அதிகமான அளவு பக்தி காட்டுபவர்கள், பலன் கிடைக்கவில்லையென்றதும், மாதாவின் கருணை தங்களுக்கில்லை யென்றதும், வேறெவரையும் விட அதிகக்கோபம் காட்டுபவர்களாக ஆகிவிடுவார்கள்.

அண்ணா எழுதிய "வேலைக்காரி" நாடகத்தில் ஆனந்தன் அந்தக் கட்டத்தில் ஒருமுறை நிற்கிறான்.

அத்தகையதொரு கட்டம், இந்திய அரசியலில் உருவாகியிருக்கிறது.

"இந்திய மாதாவே! ஆசியாவின் ஜோதியே!" என்றெல்லாம் டில்லி ஆட்சி பீடத்தை நோக்கி அர்ச்சித்தவர்களெல்லாம் கோபாவேசத்துடன் பார்க்கிறார்கள், ஆத்திரம் கொப்பளிக்கப் பேசுகிறார்கள்.

அண்மையில் மத்திய அரசாங்கத்தின் போக்கைக் கண்டிக்கும்பொழுது, "டில்லி தேவதை!" என்று ஒருவர் கோபத்துடன் பேசியிருக்கிறார்.

மத்திய ஆட்சிபீடத்திற்கு இந்தப் பெயரைத்தந்தவர், திராவிட முன்னேற்றக்கழகத்தவரல்ல, தென்னாட்டவருமல்ல. வடநாட்டைச் சேர்ந்தவர்தான், பீகார் மாநிலத்தைச் சார்ந்தவர், புனிதமான காங்கிரசில் முக்கியமானவர், இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர். காங்கிரசின் பக்தர்—பாரத மாதாவின் தவப்புதல்வர்களில் ஒருவர்தான் டில்லி ஆட்சி பீடத்தைப்பார்த்து "டில்லி தேவதை!" என்று அர்ச்சித்திருக்கிறார்.

பத்திரிக்கைகள் அந்த அளவுமட்டும்தான் செய்தியைத் தந்திருக்கின்றன. அவர் எவ்வளவு நேரம் பேசினார், என்னென்ன சொன்னார், கோபத்தில் குமுறியெழுந்த சொற்கள் எவை, செய்தி திரட்டுபவர்கள்மிகச் சுலபமாக விட்டுவிட்டார்கள். சொல்லியவரின்—மனம் வெறுத்துப் பேசிய பக்தரின் பெயர்கூடச் சொல்லப்படவில்லை. "டில்லி தேவதை என்று ஒருவர் பேசினார்." அந்த அளவுமட்டும்தான் அவர்களால் குறிப்பெடுக்க முடிந்தது. அந்த "ஒருவர்" மட்டுமல்ல, மிகப்பலர் "டில்லி தேவதையின்" அலங்கோல ஆட்சிபற்றிப் பேச முன்வந்து விட்டார்கள்.

ஏன் இந்த நிலை ?

மாற்றுக் கட்சியினர் பேசுவதில் குற்றம் கண்டுபிடிக்கலாம். ஆனால் தேசியக் காங்கிரசுக் கட்சியினரே டில்லி ஆட்சிபீடத்தின்மீது கடுஞ்சொற்களை வீசுகிறார்கள்.

இந்திய மாதாவின் தவப்புதல்வர்களே, மாதாவின் கோயிலாகக் கருதப்படும் டில்லி மீது கற்களை எடுத்து வீசுகின்றனர்.

இந்தியாவின் ஒற்றுமை, அதற்காக எவ்வளவு தியாகமேனும் செய்ய வேண்டும் என்று

உபதேசம் செய்தவர்கள் தங்களுக்குள் கடும் போரிட்டுக் கொள்ளுகிறார்கள், காரசாரமாகப் பேசுகிறார்கள்.

"மண்ணாசை பிடித்த ஏகாதிபத்தியவாதிகள்!" இவ்வாறு பீகார் மாநில காங்கிரசுக்காரர் வங்காள மாநிலக் காங்கிரசுக்காரரைத் தூற்றுகிறார். ஆங்கில ஆட்சியின்போது "மண்ணாசை பிடித்த ஏகாதிபத்தியம்" என்று அதைத் திட்டியதுபோய், பக்கத்து மாநிலத்தைப் பார்த்து அதே கடுஞ்சொற்களால் அர்ச்சிக்கிறார்கள்.

"கிடையவே கிடையாது. நாடு பிடிக்கும் ஆசை எங்களிடம் இல்லை. எங்களுடைய உரிமையை வங்காளத்திற்கு உரிய தாயகத்தைக் கேட்கிறோம்." என்று வங்காள மாநிலத்தவர்கள் பதில் சொல்லுகிறார்கள்.

"பீகார் மாநிலத்திற்கு நீதி வழங்கப்படாவிட்டால், மிகப் பயங்கர நிலைமைகள் உண்டாகும்!" என்று பீகார் பிரதிநிதி எச்சரித்திருக்கிறார். பயங்கர நிலைமை என்றால் எப்படிப்பட்ட தன்மையது என்றும் அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார். "அயர்லாந்தில் ஏற்பட்டது போன்றதொரு கிளர்ச்சிநிலை இங்கும் உண்டாகும்." வரலாற்று ஏட்டைப் புரட்டி, அங்கு நடைபெற்ற கிளர்ச்சிகளை அவர் ஞாபகமூட்டுகிறார்.

இந்தக் காரசாரச் சொல் வீச்சுக்களிடை, "டில்லி தேவதை!" என்று ஒரு உறுப்பினர் மாநிலங்களிடை சச்சரவுகளை மூட்டி, சமாதானப்படுத்தத் தெரியாமல் அல்லற்படுத்தும் டில்லி ஆட்சிபீடத்தைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார்.

பீகாருக்கும் வங்காளத்துக்கும் மூண்டுள்ள சச்சரவு, எல்லையைப் பொறுத்தல்ல, டில்லி ஆட்சிபீடம் தரும் தொல்லையால்தான் என்று அந்த பிரதிநிதிக்குத் தோன்றியிருக்கிறது, எனவே பக்திப் பரவசத்துடன் இதுகாறும் பூசைசெய்துவந்த பக்தர் "டில்லி தேவதை"யைப் பார்த்துக் குமுறலுடன் பேசியிருக்கிறார்.

"டில்லி தேவதை" என்று பெயர் சூட்டப்பட்டது. பக்தி நிலை போய் கண்டனக் குறி தலை தூக்க ஆரம்பித்துவிட்டது என்று அர்த்தம்.

எந்த லோகமான்ய திலகருடைய நூறுவது பிறந்த நாளை இந்தியா கொண்டாடி மகிழ்ந்ததோ, அந்த லோகமான்ய திலகர் கட்டிக் காத்த மராட்டியரின் சுதந்திர உணர்ச்சி இன்று டில்லி ஆதிபத்தியத்தை எதிர்த்து நிற்கிறது. மராட்டியத் தலைவருக்கு நாடுகளிலெல்லாம் வாழ்த்து! மராட்டியத்துக்கு மாபெரும் துரோகம் இழைக்கப்பட்டுவிட்டது, என்று மராட்டியத்திலிருந்து மட்டுமல்லாமல், மற்ற மாநிலங்களிலும் பேச்சு! மராட்டியம் இந்தியாவிற்குத் தந்த இணையற்ற சுதந்தர வீரன்—திலகரின் சிறந்த ஓவியம் உள்ளே—சட்டமியற்றும் மாளிகையின் அணிமண்டபத்தில் மாட்டப்பட்டிருக்கிறது. சட்டமியற்றும் மண்டபத்தின் வெளியே, மராட்டியத்தின் உரிமைக்காக அறப்போர் தொடுத்த 1500 வீரர்கள் கைது!

உள்ளே ஒரு மாவீரனின் ஓவியத்துக்கு மாலை சாத்தப்படுகிறது, வெளியில் அவன் வழிவந்த வீரர்கள் 1500 பேர்களுக்கு விலங்குகள் பூட்டப்படுகின்றன. ஓவியத்தின் பார்வை—அதன் முகத்தின் ஒளிவிடும் புன்னகை மண்டபத்திலுள்ள தொழுதிடும் பதவியாளர்களைக் காண்பதற்கல்ல—வெளியில் அடிதடிக்கு ஆளாகி, உரிமைக்குப் போராடும் வீரர்களுக்காக ஏற்பட்டதாகும்.

டில்லியை நோக்கிக் கரம் கூப்பித் தொழுதவர்கள், இன்று கரத்தை உயர்த்தி முழக்கமிடுவானேன்?

வாழ்த்துக் கூறி—கோயிலை வலம் வர வேண்டிய பக்தர்கள் கூட்டம், இன்று போர்க் கோலத்துடன் எதிர்ப்பு ஊர்வலங்கள் நடத்துவானேன்?

டில்லியைப் பார்த்துப் பூரிப்படையவேண்டியவர்கள், இன்று "டில்லி தேவதை." என்று அதை ஏசிப் பேசுகிறார்கள்.

பக்தர்களுக்கு இருந்த பூஜா மனப்பான்மை மாறியதுகூட ஆச்சரியமில்லை. அதிகமான பக்திப்பிரவாகத்தில் மூழ்கியிருப்பவர்கள் தாங்கள் கோரிய பலன் கிடைக்கவில்லையென்றதும், "தாயே!" என்று கும்பிட்டசிலையைப் பார்த்து "பேயே!" என்று கூறுமளவுக்கு வெறுப்பு வளர்ந்துவிடுவது இயல்பு. கடுமையான பக்தி, கடுமையான வெறுப்புக்கும் வழி செய்கிறது. கோவிலைச் சுற்றிவரும் பக்தர்கள் மட்டுமல்ல, கோவிலுக்குள் இருக்கும் தர்மகர்த்தாக்களில் ஒருவரேவெளியில் வந்து அங்கு நடக்கும் அக்கிரமங்களைப் பற்றிச் சொல்லுகிறார்.

மத்திய அரசாங்கத்தில், தாம் வகித்துவந்த நிதிமந்திரி பதவியை உதறித்தள்ளி வெளியேறிய தேஷ்முக் அவர்கள், தாம் விலகிவந்த

தற்கான காரணங்களைத் தரும்பொழுது நேரு பண்டிதர் ஆட்சியில் நடைபெறும் எதேச்சாதிகாரத்தை அவர் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார். மந்திரி சபையைக் கலக்காமல், சட்ட வரம்புகளைப் பார்க்காமல், மக்களின் வேண்டுகோளை மதிக்காமல், தான்தோன்றித்தனமாக டில்லி ஆதிபத்தியக் காவலர் நேருபண்டிதர் முடிவுகளை—மாநிலங்களையும் இந்திய உபகண்டத்தையும் பொறுத்த பெரிய முடிவுகளை எடுத்துவிடுகிருர் என்று தேஷ்முக் குற்றஞ் சாட்டியுள்ளார். "பிரமதரும் மூன்று பேரடங்கிய துணைக்குழுவும் தங்களுக்கில்லாத அதிகாரங்களை, தான்தோன்றித்தனமாக எடுத்துக் கொண்டார்கள்" மிகக்கடுமையானசொற்களில் அவர் தெரிவித்துள்ளார். சுற்றிவளைத்து வராமல், நேரிடையாக பிரதமர் நேருவின் மீது முன்னுள் மந்திரியின் குற்றச்சாட்டுகள் வீசப்பட்டுள்ளன.

டில்லி ஆட்சி பீடத்தின் எதேச்சாதிகாரப் போக்கு ஒரு தனிப்பட்ட மனிதரின் ஆணவப் பிடிப்பில் அடங்கியிருக்கிறது, அரசியல் அகராதிப்படிச் சொல்லவேண்டுமானுல், சர்வாதிகாரத்தனம் உண்டாகியிருக்கிறது!

பிரதமர் நேரு பண்டிதர் தரும் முடிவுகளைப் பற்றி—இல்லை தரும் தீர்ப்புகளைப்பற்றி தேஷ்முக் குறிப்பிடும்பொழுது "ஆணவத்துடன், அரசியல் சட்டமுறைகளுக்கு முரணுனவகையில் முடிவுகள் எடுக்கப்படுவதற்கு மாநிலச் சீரமைப்புத் திட்டம் ஒரு உதாரணம்" என்று கூறியுள்ளார். ஆகப்பலப்பலமுடிவுகள் எதேச்சாதிகாரப் போக்கில் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்றுதான் மாநிலச் சீரமைப்புத் திட்டம். அம்பலத்திற்குவந்த "ஆணவ, சட்டமுறைக்குப் புறம்பான" முடிவுகளில் ஒன்று!

டில்லி தேவதை! அதன் ஏகபோகமுதல் பிரதிநிதி எதேச்சாதிகாரிகளில் தலைசிறந்தவராக விளங்குகிருர்!

டில்லி தேவதை! அதற்குத்தரப்படும் காணிக்கை கொஞ்சநஞ்சமா! மக்களின் வரிப்பணம் கோடிக்கணக்கில் அரிக்கப்பட்டு, கொட்டப்படுகிறது! மாநிலங்கள் தம் வருவாய்முழுவதையும் மாதாவின்உண்டியலில் போட்டுவிட்டு, தேம்பித்தவிக்கின்றன! அன்றாட உணவுக்கும் மடியேந்தி நிற்கவேண்டியிருக்கிறது! மாதாவோ அங்கே ஆனந்தநடனத்தில் ஈடுபட்டிருக்கிருள்!

டில்லி தேவதை! அதற்குத் தரப்பட்ட பலிகள் எண்ணிலடங்காதான! டில்லி தேவதையின் கட்டளையை நிறைவேற்ற, பம்பாயில் 2500 முறை துப்பாக்கிப்பிரயோகங்கள் நடைபெற்றிருக்கின்றன. இறந்தவர்கள் தொகை எண்பதுக்குமேல். ஐநூறுபேர்கள்வரை படுகாயத்துக்காளானுர்கள்! சிறையில் தள்ளப்பட்டவர்கள் தொகை பதினுயிரத்துக்கு மேலிருக்கும் பயங்கரப் பலிபீடங்கள் மாநிலங்கள் தோறும் எழுப்பப்பட்டுள்ளன! தரப்படும் பலிகளுக்கு, சிந்தப்படும் இரத்தத்துக்கு அளவில்லை.

டில்லி தேவதை! ஆலயமணி அங்கே ஒலிக்கிறது, அர்ச்சனைகள் பலமாக நடைபெறுகின்றன, வருவோர் போவோர்கள் வாழ்த்து வழங்குகிருர்கள், பத்மபூஷணி பாட, பாதலோசனிகள் ஆட, விருந்து வேடிக்கைகள் ஏராளமாக இருக்கின்றன! டில்லி தேவதையின் புகழை வெளிநாட்டில் பரப்ப, பல லட்சக் கணக்கில் பணம் வாரியிறைக்கப்பட்டது! மாதா அங்கே மகிழ்கிருள், நாட்டு மக்கள் வேதனைப்புயலில்சிக்கித் தவிக்கின்றனர்! டில்லியில் ஒளி, தெற்கே இருள்; அங்கே மகிழ்ச்சி கோலாகலம், இங்கே சோகம், அழுகுரல்!

"டில்லி தேவதை!" என்று பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கோபக்குரல் எழுப்பினுரே அதே குரல்தான் தென்னுட்டில் நாம் எழுப்பினேம்! தூற்றப்பட்டோம், நாட்டுத் துரோகிகள் என ஏசப்பட்டோம்! அதேகுரல், கொந்தளிப்புடன் எழுகின்றது, மற்ற மாநிலங்களிலிருந்து!

டில்லி ஏகாதிபத்தியம் வளர்ந்து வருகிறது, அதன் எதேச்சாதிகாரப் போக்குக் கண்டிக்கப்படுகிறது, அருகிலிருப்போரால், மந்திரி சபையில் பணியாற்றிய பொறுப்பு வாய்ந்த மந்திரிகளால்! "தேஷ்முக் அவர்களின் அறிக்கை பலருக்கு அதிர்ச்சியைத் தந்தது" என்று பத்திரிக்கை நிருபர் எழுதுகிருர். "சாந்தமும் நிதானமும் மிகுந்த நிதியமைச்சர் இவ்வளவு கடும் குற்றச்சாட்டுகளை தமது அறிக்கையில் அடக்கி யிருப்பார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை" என்று நிருபர் தொடர்ந்து சொல்லுகிருர். தேஷ்முக் அறிக்கைக்கு நீண்ட தலைப்பைக்கொடுத்துவிட்டு, ஆரம்பிக்கும்பொழுதே "மிகக் கடுமையான—பட்டதும் சுட்டெரிக்கத்தக்கக்குற்றச்சாட்டுகளை, இதுவரை அவருடன் வேலைபார்த்துவந்த சகமந்திரி ஒருவர் இன்று நேருமீது வீசினுர்" என்று கூறுகிறது. தேஷ்முக்கின் குற்றச்சாட்டு கடுமையானதாக இருக்கிறதாம். அந்தக் குற்றச்சாட்டுகளை நேருக்குநேர் நேருபண்டிதர் மறுக்கவில்லை. எல்லாவற்றுக்கும் தாம் பொறுப்பேற்பதாகவும், பிரியும் சமயத்தில் கோபச்சொற்கள்

வேண்டாமெனவும் பண்டிதர் அமைதிகாண முயன்ருரேயன்றி கடுங்குற்றச்சாட்டுகளுக்குப் பதில் தரவில்லை. குற்றச்சாட்டுகள் கடுமை யானவைதான், ஏனென்ருல் அவர் புரிந்துள்ள குற்றங்கள் அவ்வளவு கடுமை யானவை!

"ஆணவப் போக்கு" "தான்தோன்றித் தனம்" "அரசியல் சட்ட முறையை அழிப்பது' "ஏதேச்சாதிகாரம்" "டில்லி தேவதை" இவை களெல்லாம் இன்று வளர்ந்துள்ள ஒரு குறிப்பிட்ட நிலையை உணர்த்தவில்லை. அடிப்படையில் இருக்கிற சிக்கல் டில்லியில் ஒரு ஏகாதிபத்தியம் உருவாக இந்திய அரசியலமைப்பு வழியமைத்துள்ளது. இன்னும் சொல்லப்போனல் டில்லியில் வளர்ந்த ஒரு ஏகாதிபத்தியம் தனக்கேற்ற அரசியலமைப்பை உண்டாக்கிக்கொண்டது. மாநிலங்களை வரளச்செய்து, பெரும்பாலான வரிகளை யெல்லாம் மத்திய சர்க்காரிடம் ஒப்படைத்து, அதிகாரக் கயிற்றை டில்லியிடம் தந்துவிட்டது அரசியலமைப்பு! டில்லி ஆட்டினல் மாநில அரசுகள் ஆடவேண்டும்! நிறுத்தினல் இங்கும் நிற்கவேண்டும்! இந்தப் பொம்மலாட்ட வேலை நீண்டகாலம் நடைபெருது, காரணம் கட்டுவது கயிருக இருந்தாலும் கட்டப்பட்டிருப்பது மனிதர்களை! எவ்வளவு நாளைக்கு அவர்கள் அடங்கி இருப்பார்கள்! ஒன்று கயிறுகள் அறுந்துவிடும், அல்லது நான்கு திக்கிலும் இழுக்கப்பட்டு மத்தியபீடம் சிதைக்கப்படும்!

இந்திய அரசியலமைப்பு டில்லியில் பலத்த ஏகாதிபத்திய—சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்திய நாட்டுக்கு ஒரு தலைமைபீடம்—அது ஏகாதிபத்திய அமைப்பில்தான் பெறமுடியும். ஏனென்ருல், இந்தியா ஒரு நாடல்ல, பல நாடுகள், பல மொழி பேசும் தனியினங்கள் இருக்கின்றன. இல்லாவிட்டால், பீகாருக்கும் வங்காளத்துக்கும் எல்லைத் தகருறு ஏற்படுமா? மராட்டியத்துக்கு குசராத்துக்கும், மோதுதல் உண்டாகுமா? பிரெஞ்சு நாட்டுக்கும் செர்மன் நாட்டுக்கும் எல்லை வகுப்பதில் எவ்வளவு சச்சரவு மூளுமோ அதற்குக் குறையாத அளவு உணர்ச்சியும் ஆவேசமும் கொண்ட சச்சரவு இங்கு மூளுகிறது.

பக்தனுக்கு ஏமாற்றம் ஏற்பட்டால் கோபம் தலைதூக்குவதைப் பார்க்கிருேம். அத்துடன் பக்தி சிரத்தையோடு வழிபட்ட தனக்கு தேவி வரம் தராதது மட்டுமல்ல, வஞ்சகனெருவனுக்கு தேவிவரம் தந்துள்ளாள் என்று கேள்விப்பட்டால் பக்தனின் நெஞ்சம் எவ்வளவு குமுறும்! தனக்கு அருள் புரியாததுமட்டுமல்ல, வேதாசல முதலியாருக்கு மாதா அருள்புரிந்து விட்டாள் என்றதும்தான் ஆனந்தன் ஆவேசத்துடன் கிளம்பினன், தேவியைப் பார்த்துத் தீப்பொறி பறக்கப் பேசினன்? அதே பக்திசிதறிய நிலைதான் இந்திய மாநிலங்களுக்கு உண்டாயிருக்கிறது!

டில்லி தேவதைக்கு மக்கள் தந்த காணிக்கைப்பொருள் ஏராளமானது! ஆனல் அதன் அருள் "வேதாசல முதலியார்" போன்ற மேட்டுக்குடியினருக்கு மட்டுமே கிடைக்கிறது! ஏழைகள் தாழ்ந்து போகின்றனர், பணம் படைத்தோர் வளர்ந்தபடி இருக்கின்றனர். பம்பாய் மராட்டியத்துடன் சேர்க்கவேண்டுமென்று மக்கள் கேட்கவில்லையா? பலமாகக் கேட்டார்கள், பல உயிர்களைப் பலி தந்து கேட்டார்கள்; மக்களின் வேண்டுதலை டில்லி தேவதை ஏற்றுக்கொண்டதா? இல்லை, "பம்பாய் மராட்டியத்துடன் சேராது" என்று கடுங்குரலில் சொல்லிவிட்டது. ஏன் சொல்லியது? பம்பாயில் உள்ள சில பணமூட்டைகளுக்குச் சாதகமாக. நெஞ்சொடிய பாடுபட்டு, தேடிவந்த காசைக்கொண்டுத் தீபம் எரித்து, தேனபிஷேகம் பொங்கல் தினமும் படைத்து, வழிபட்ட பரமபக்தர்களான மக்களுக்கு டில்லி தேவதை அருள்புரியவில்லை. பணமூட்டைகளுக்குச் சாதகமாக—உரிமையுள்ளவர்கள் சிலர் உதவிக்காக டில்லிதேவதை அருள் புரிந்துவிட்டது.

ஏழைகளின் இரத்தம், ஏமாளியின் கண்ணீர், பாட்டாளியின் வியர்வை—எல்லாம் வீண்! டில்லி தேவதையின் அருள் பாமரர்களுக்குக் கிடைக்கவில்லை, கிடைக்கவும கிடைக்காது. பலன்தராத தேவதையின்முன் பாமரர்கள் நெடுநாள் மண்டியிட்டுக்கிடப்பதில்லை. ஒரு சமயம் விழிப்புறுவார்கள். பின் விழிப்புற்ற பாமரர்களின்முன் தேவதைகள் நிற்பதில்லை!

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

இலங்கைக்கு வி. பி. மூலம்

ஆண்டுக் கட்டணம் 7—8—0

அரசியல் மொழிப் பிரச்சினை

[சி. இராசகோபாலாச்சாரியார்]

['இந்தி' தான் இந்தியாவின் பொதுமொழியாகவும், அரசியல்மொழியாகவும், தேசியமொழியாகவும் இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்தி அதனை வலுக்கட்டாயமாகப் புகுத்த கடும் நடவடிக்கைகளை ஒரு காலத்தில் எடுத்த தோழர் சி. இராசகோபாலாச்சாரியார், அந்தக் கருத்தை முற்றிலும் மாற்றிக்கொண்டு, 'ஆங்கிலமே' இந்தியாவின் பொதுமொழியாகவும், அரசியல்மொழியாகவும் தொடர்ந்து எப்பொழுதும் இருந்து வரலாமென்றும், அந்தந்தப்பகுதியில் வழங்கும் அந்தந்த வட்டாரமொழியே அந்தந்தப் பகுதியின் தேசியமொழியாக வழங்கலாம் என்றும் வற்புறுத்தத்தொடங்கியிருக்கிருர். திராவிட முன்னேற்றக் கழகம் இதுகாறும் மேற்கொண்டுவரும் நோக்கத்திற்கு அருகில் தோழர் ஆச்சாரியார் மெல்லமெல்லத் தாமாகவே நகர்ந்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். தோழர் ஆச்சாரியார் அண்மையில் இந்திபற்றி 'இந்துஸ்தான் டைம்ஸ்' என்ற இதழில் எழுதியிருந்த கட்டுரைதான் கீழே தரப்படுகிறது. படித்து மகிழ்க! [ஆ-ர்.]

என்னைப்பற்றித் தவருக நினைத்துக்கொண்டாலும் பரவாயில்லை; நாட்டிற்கு நாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்தாகவேண்டும் என்ற உணர்ச்சியுடன் இதனை எழுதுகிறேன். முற்றிலும் நட்புரிமையுடனேயே இதனை எழுதுகிறேன்.

ஏற்கனவே அன்னியர்ஆட்சியுடன் ஆங்கில மொழி சம்பந்தப்பட்டிருந்தது என்பதற்காக அதைக் கண்டால் சிலருக்குப் பிடிக்கவில்லை; இந்த வெறுப்புக்குக் காரணகாரியமில்லை. இது உண்மையான நாகரிகத்தின் அறிகுறியாகாது. நமது சர்வதேசக் கொள்கைக்கும் இது ஏற்றதல்ல.

அரசாங்க மொழிக்குழு விரைவில் தனது அறிக்கையைத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசியல் சீரமைப்புக்குழு அறிக்கை வெளியானவுடன் நாடு முழுவதும் ஏற்பட்ட தொல்லைகளை நினைத்துப் பார்க்கும்போது மிகுந்த கவலை ஏற்படுகிறது. டில்லியிலுள்ள அதிகார பீடம் செய்த உண்மையான தவறுகள், கற்பனைத் தவறுகளைப்பற்றி குற்றம் சொல்லுபவர்கள் கொடுக்கக் கூடிய பட்டியலில் இந்தியை இந்தியாவின் அரசியல் மொழியாக்குவது என்ற முடிவுதான் மிகப் பெரிய தவறு என்று சொல்லவேண்டும்.

இந்தியாவில் எந்தப் பகுதியில் இருப்பவர்களாயிருந்தாலும், அரசாங்கநடவடிக்கைகளில் பங்குகொள்ள முடியும் என்ற நிலைமையிலுள்ள யாவர்க்கும் தெரிந்த ஒரே மொழி ஆங்கிலமே. இரண்டு நூற்றுண்டுகளாகப் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் கற்றுவந்திருக்கிருேம். படித்தவர்களின் குடும்பங்களில் இந்த ஆங்கிலக் கல்வியின் முத்திரை பரவியிருக்கிறது. அதற்குப் பதிலாக நாம் இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இப்போது சொல்லுகிருர்கள். கூடியவரையில் சரளமாகவும், கச்சிதமாகவும் இந்திமொழியை நாம் பயன்படுத்துவதற்கு இனிமேல்தான் கற்றுக்கொள்ளவேண்டும். இந்தி மொழியைப் பேசுபவர்கள் கூட அதிலுள்ள சொற்களைப் பற்றி ஒருமித்த கருத்துடையவர்களாயில்லை. ஆங்கிலச் சொற்களை பயன்படுத்துவதுபோல், அதை அவ்வளவு கச்சிதமாகப் பயன்படுத்தத் துவங்கவுமில்லை. நிறையப்பேசுவது வேறு; ரண சிகிச்சை செய்யும் ஒருவைத்தியர் தன்னுடைய கருவிகளைப் பயன்படுத்துவதுபோல் ஒரு மொழியைப் பயன்படுத்த முடிந்திருப்பது வேறு.

ஆங்கிலம் நமக்குச் சம்பந்தமில்லாதது, அது அடிமைத்தனத்தின் சின்னம் என்ற மனமயக்கம் நமக்குப் பெருத்த இழப்பை விளைவிக்கிறது. ஆட்சிநடத்தும் கொடுங்கோலனுடன் அல்லது நாட்டை வென்றவனுடன், இப்பொழுது ஒரு சம்பந்தமில்லாத ஒருமொழியைப் பயன்படுத்துவதில் ஒன்றும் அவமானம் இல்லை என்பது உணரப்படவில்லை. ஆனல் தாய் மொழியல்லாத ஒன்றை அரசியலாரே முன்வந்துமக்கள்மீது சுமத்துவதற்குப் பெரும்பான்மை எண்ணப்படிதான் நடக்கவேண்டும் என்ற கொள்கையைத் தவிர வேறு வகையில் நியாயமில்லை. இதனல் வெளியார் அதிகாரத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டியிருக்கிறது. எசமானர்கள் மாறியிருக்கிருர்களே ஒழிய விடுதலை ஏற்

படவில்லை என்ற ஒருமாதிரியான உணர்ச்சி ஏற்படு கிறது.

இந்த இந்திக் கொள்கை தவறான உணர்ச்சி காரணமாக எழுந்த ஒருமிகப் பெரிய அரசியல் தவறு என்பதே என்னுடைய தாழ்மையான எண்ணம். *தான் ஆட்சி நடத்தும் வகுப்பினர்மீது ரஷ்யா எப்படித் தன் மொழியை அமுல் நடத்திவருகிறது என்பதை அறிந்து வருவதற்காக மொழிக்குழுச்செயலாளர் மாஸ்கோவிற்குப் போகப் போகிறாராம்.* **இந்த இந்திக் கொள்கையும் சர்வாதிகாரத்தன்மை வாய்ந்ததே என்ற உணர்ச்சியைத்தான் இது அதிகப் படுத்தும்.**

இந்தியாவில் வாணிகம், வருகை, போகை ஆகியவை காரணமாக மிகவிரைவில் வட இந்தியாவின் மொழி தென் இந்தியாவிலும், தென் இந்தியாவின் மொழி வட இந்தியாவிலும் இயற்கையாகவே புகுந்துவிடும். இதில் அரசியலார் கண்டிப்பு என்றகசப்பு இராது. எந்த விதமான முரண்பாடும் இல்லாமல் காலக் கிரமத்தில் இது நிகழ்ந்துவிடும். ஆனால், இப்போது வட இந்தியா, தென்இந்தியா இரண்டையும் சம நிலையில் வைத்துள்ள ஆங்கிலத்திற்கு எதிராக முற்றுகைத் தளங்களை ஏற்படுத்துவது, இந்தியை அரசியல் சர்வாதிகாரம் வாய்ந்ததாகச்செய்துவிடும். இது அவசியமுமில்லை; விரும்பத்தக்கதுமில்லை. பொதுவாகப் படித்தவர்கள் யாவர்க்கும் தெரிந்ததும், இப்பொழுது சௌகரியமாக அரசாங்க அலுவல்களை நடத்துவதற்குப் பயன்படுவதுமான மொழியை அரசாங்க மொழியாக வைத்துக்கொள்வதே நலம்......*அதற்குப் பதிலாக அதிகாரபூர்வமாக இந்தியையே அரசியல் மொழியாக அமுல்நடத்துவதுதான் கொள்கையாக இருக்கப்போகிறதென்றால், அது வெளி ஆட்சியின் அறிகுறியாகிவிடுகிறது. தெற்கே யுள்ளவர்களுக்கெல்லாம் ஒரு புது மாதிரியான அரசியல் கீழ்ப்படிதலாகம் ஆகி விடுகிறது. ஒவ்வொரு அரசும், அங்குள்ள ஒவ்வொரு மாவட்டமும் அந்தப் பகுதியில் வழங்கும் மொழியில்தான் தன் உத்தியோக அலுவல்களை நடத்தும்; ஆனால் மத்திய அரசியலாரின் அரசியல் மொழி அடைகாக்கும் கோழியைப்போல் உட்கார்ந்துகொண்டிருக்கும்; அப்போதும் கூட அது மாற்றாந் தாயாகத்தானிருக்கும்.*

தென்னிந்தியாவிலுள்ளவர்கள் சிறுமொழி மாறுதல்களால் சிறுஅரசுகளாகப் பிளவுற்றிருக்கிறார்கள். சிற்சில வேறுபாடுகளிருந்தாலும், வட இந்தியாவிலுள்ளவர்கள் யாவரும் இந்தி விஷயத்தில் ஒன்றுபட்டிருக்கிறார்கள். தென்னிந்தியாவில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் முகமறியாதவர்களைப்போல் இருக்கவேண்டியிருக்கின்றன. விந்தியமலைக்குத் தெற்கே உள்ள அரசுகள் மொழிவேறுபாடுகளால் ஒருவரோடொருவர் சம்பந்தமில்லாமல் தனித்தனியாய் இருப்பார்கள். இந்திபேசாத இவர்கள் தமது சக்திகளை ஒன்று சேர்த்து, ஒருபொது நிலையை எடுத்துக் கொள்வதை வளர்ப்பதற்கான உதவி எதுவுமில்லை. *தட்சிணப் பிரதேசம் ஏற்பட்டால் பரஸ்பர உதவி என்ற அடிப்படையில் ஒருநம்பிக்கை ஏற்படும். ஆனால் தென்னிந்தியா மொழிவாரியாகப் பிரிந்திருக்கும்வரையில், விவேகமற்ற இந்த மத்திய அரசியலாரின் கொள்கையை அரசியல் ரீதியில் எதிர்ப்பதற்கு வழியில்லை. (மொழி வழிபிரிந்து இனவழி ஒன்றுபட்ட திராவிடம் தனி சுதந்திர சுயேச்சை நாடாக ஆவதுதான் ஏற்றவழியாகும் என்று தி. மு. கழகம் கருதுகிறது—ஆ-ர்) மனிதஉணர்ச்சிகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் மத்திய அரசியலார்க்கு ஒரு அரசியல் வெற்றி ஏற்படுவதில் எந்த மதிப்பும் இல்லை. இதன்பலன் இந்தியா முழுமைக்குமே கெடுதலாயிருக்கும்.*

ஆங்கிலம் அரசியல் மொழியாக இருந்ததால் இந்த ஒன்பது ஆண்டுகளாக அரசாங்க அலுவல்கள் எவையாவது பாதிக்கப்பட்டனவா? ஏதோ ஒரு சக்தி இந்தி பேசுவோர் மீது தமிழை அரசியல் மொழியாகச் சுமத்தினால், அவர்களுடைய உணர்ச்சி எப்படியிருக்கும்? "தமிழ் மிகவும் பழமையான மொழி; அழகிய இலக்கியச் செல்வம் உடையது; முற்றிலும் இந்த நாட்டின்மொழி" என்றெல்லாம் வாதம் செய்தால், இந்தி பேசுபவர்களுக்கு ஆறுதல் ஏற்பட்டுவிடுமா? தென்னிந்தியாவிலுள்ள ஆறுகோடி பேர்களுக்கும் இந்தி ஒரு அன்னிய மொழியே. அவர்களுக்கும் இந்திபற்றி இந்த உணர்ச்சிதான் ஏற்படும் என்பது புலப்படவில்லையா? இந்திபேசுவோர்க்கு இந்திமொழியிடம் உள்ள அன்பு, தமிழர்க்குத் தமதுமொழியிடத்து உண்டு. *அப்படியானால், அரசியலமைப்பில் விதிக்கப்பட்டிருப்பதை என்ன செய்வதென்று கேட்கலாம். முடிவாக இந்திக்கொள்கை அதில் விதிக்கப்பட்டு விடவில்லையா?*

அரசியலமைப்பிலும் தவறுகள் இருக்கின்றன. அனுபவத்தின் மீதும் சிந்தனையின்மீதும் இவற்றைத் திருத்தியாகவேண்டும். அரசியலமைப்புக்கு மரியாதை காட்ட வேண்டியதுதான். ஆனால், மரியாதை என்றால், தவறுகள் நம்மை நாசத்தில் கொண்டுபோய்விடுவதை அனுமதித்துக்கொண்டிருக்கவேண்டும் என்று அர்த்தமில்லை.

......இதையெல்லாம் கடிந்து பேசும் தோரணையில் நான்சொல்லவில்லை. எச்சரிக்கையாகவே விடுகிறேன். நான் எந்த நோக்கத்துடன் இதைச்சொல்கிறேன், என்பதை எல்லோரும் உணருவார்கள் என்றே நம்புகிறேன்.

இரப்பரின் வளர்ச்சி

(நஞ்சை இளம்மதி)

நம் அன்றாட வாழ்க்கையில் நாளுக்குநாள் தேவைகள் மிகவாகின்றன. ஆனால் 200 ஆண்டுகளுக்குமுன் இத்தேவைகள் மிகக் குறைவு. இன்று பெரும்பாலும் ஒவ்வொருவர் கையிலும் கடிகாரமிருக்கிறது! ஆனால் அந்தக்கடிகாரத்தின் பகுதிகள்சுவிட்சர்லாண்டில் செய்தவையென்பது எத்தனைப்பேருக்குத் தெரியும்? இன்று மின்சாரமில்லையென்றால் உலகம் ஒரு விநாடிகூட இயங்காது என்ற நிலமை. ஆனால் அந்த மின்சாரத்தை முதன் முதல் 19ம் நூற்றாண்டில் இதாலியைச் சேர்ந்த வோல்டா என்பவர் கண்டுபிடித்தார். பின் வந்த ஆல்வா எடிசன் போன்றோர் அதைவளர்த்தார்களென்பதைப் பலர் தெரிந்துகொண்டிருக்கமாட்டார்கள்! கேள்விகேட்டால் படித்தவர்களே பதில் சொல்லத்தயங்குவர்! பின் எப்படி மற்றையோர் தெரிந்துகொள்ளமுடியும்? இன்றைய நமது தேவைகளுள் மிகமுக்கிய அங்கம் வகிப்பது "இரப்பர்" (Rubber) இதன் வளர்ச்சியை நாம் தெரிந்துகொள்வது நலம்.

புதிய உலகமான அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ்தான் இரப்பரையும் உலகுக்கு அறிமுகப்படுத்தினார். அமெரிக்காவின் பழங்குடிகள் (சிகப்பு இந்தியர்) இரப்பரை உருண்டைகளாகச் செய்து விளையாடுவதைக் கண்டார். இச்சிறு உருண்டைகள் சிலவற்றைக் கொலம்பஸ் தன்னுடன் ஸ்பெயினுக்குஎடுத்து வந்து தன் நண்பர்கள் சிலருக்குக் கொடுத்தார். சிகப்பு இந்தியர்கள் இவ்வுருண்டையைப் "பாட்டோஸ்" (Batos) என்றும். இதன் மரத்தை "கவ்சவ்க்" (coutchouc) என்றும் அழைத்தனர். பாட்டோஸ் என்றால் பந்து என்றும், கவ்சவ்க் என்றால் கண்ணீர்மரம் என்றும் பொருள். இதற்கு இரப்பர் (Rubber) எனப் பெயர் ஏற்பட்டது ஒரு வேடிக்கை. உலகுக்குப் பிராணவாயுவை (Oxygen) கண்டுபிடித்து தந்த அறிவியல் அறிஞர் ஜோசப் பிரிஸ்ட்லிஎன்பார் ஒருநாள் தன்மேஜையிலிருந்த உருண்டையை உருட்டிக்கொண்டே சிந்தித்துக்கொண்டிருந்தார். பின் தற்செயலாக இவ்வுருண்டை எழுத்துக்களை அழிப்பதைக் கண்டார். அவர்தான் இதற்கு ஆங்கிலத்தில் இரப்பர் (Rubber) எனத் தொழிலாகு பெயரைச் சூட்டினார்.

1736 ல் பிரெஞ்சு அறிவியல் கழகம் ஒரு அறிவியலறிஞரை இரப்பர் ஆராய்ச்சி செய்ய அமெரிக்காவிற்கு அனுப்பியது. அவர் இரப்பரினால் பல உபயோகப் பொருள்களைச் செய்யலாமெனக்கண்டுபிடித்தார். பின் சார்லஸ் மகின்டோஷ் (Charles Makintosh) என்பார் செருப்பு செய்யக் கண்டுபிடித்தார். 1839ல் சார்லஸ் குட் இயர் (Charles Good Year) என்பார் இரப்பரை 'வல்கனைசிங்' (Vulcanizing) செய்யுமுறையைக் கண்டுபிடித்தார். இன்றும் இவர் பெயரைக்கொண்டு பல கம்பெனிகள் குட் இயர் டயர்களை உற்பத்தி செய்கின்றனர். வல்கனைசிங் என்ற சொல் ரோம்நாட்டின் மாஜிக்கடவுளர்களுள் நெருப்பு கடவுளாகிய "வல்கன்" (Vulcan) என்பதிலிருந்து வந்தது.

1870 ல் தான் இரப்பர் தொழில் ஒரு நிலையை அடைந்தது. அமெரிக்காவில் ஓஹியோ என்ற மாகாணத்தில் அக்ரான் எனற இடத்தில் டாக்டர் பென்சமின் பிராங்க்லின் குட்ரிச் என்பவர் ஒரு இரப்பர் தோட்டத்தையும் ஒருஇரப்பர் தொழிற்சாலையையும் உலகிலேயே முதன் முதல் நிறுவினார். இன்று இதுதான் உலகிலேயே மிகப்பெரிய இரப்பர் தொழிற்சாலை. 1896 ல் தான் முதன் முதல்' மோட்டார் கார் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த மோட்டார்களுக்கு டயர்கள் முதன் முதல் இக்கம்பெனிதான் செய்தது. இரப்பருக்கு மிகப்பெரியஎதிரிகள் காற்றிலிருக்கும் 'ஓசோன்' (Ozone) எனும் வாயு; சூரிய ஒளி, வெப்பம் - மற்றும் எண்ணெய்ப் பொருள்களுமாகும். இவைகளிலிருந்து காப்பாற்ற ஆராய்ச்சிகள் 'தேவைப்பட்டன. அவற்றுள் 'ஆக்ஸிலரேட்டர்ஸ், (Accelerators), 'ஆண்டி அக்ஸிடண்ட்' (Anti-Oxident) 'ஏஜஸ் ரெஸிஸ்டோர்ஸ்'(Ages Resistors) போன்ற முறைகளை அறிவியலறிஞர்கள் கண்டுபிடித்தனர். இவைகள் இரப்பர் தொழிலுக்கு மிகவும் உதவின.

1876 ல் ஆங்கில அரசு சர் ஹென்ரி விக்ஹாம் என்பவரை இந்த இரப்பர் விதைகளைக் கொண்டுவர அமெரிக்கா அனுப்பியது. இவர் கொண்டுவந்த விதைகளை இங்கிலாந்து க்யூ தோட்டத்தில் (Kew Garden) விதைத்தனர். பருவநிலை ஒத்துவராததால் பின் இவ்விதைகளை ஆங்கில அரசுக்கு அடிமையாகியிருந்த

மலாயா, கிழக்கிந்திய தீவுகள், சிலோன், மற்றும் திராவிடத்தின் மேற்குக்கரையோரங்கள் ஆகியபகுதிகளில் பயிரிட்டனர். இரப்பருக்குப் பருவநிலை இங்கே சாதகமாக இருந்ததால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 10 லட்சம் டன் இரப்பர் இவ்விடமிருந்து கிடைத்தது. இவ்வாறு வளர்ந்த இரப்பர் உலகத்தேவைகளுள் மிக முக்கிய நிலை அடைந்தது. உலகத்தேவை 1870 ல் சுமார் 10000 டன்னுகவும், 1896 ல் சுமார் 35000 டன்னுகவும், 1900 ல் சுமார் 200000 டன்னுகவும், 1926 ல் 1800000 டன்னுகவும், 1941 ல் 500,0000 டன்னுகவும், 1955 ல் சுமார் 800,0000 டன்னுகவும் வளர்ந்துவந்தது. இரப்பர் தொழிற்சாலைகள் பெருகின. ஆனல் போதுமான இரப்பர் வளர்ச்சி இன்னமும் ஏற்படவில்லை.

1941, டிசம்பர், ஆங்கில அரசுக்குச் சோதனை காலமாக இருந்தது. சிங்கப்பூர் வீழ்ச்சி, ஹாவாய் தீவுகள் வீழ்ச்சி, ஜப்பானியருக்கு வெற்றிமேல் வெற்றி. நேச நாடுகள இரப்பர் விளையும் பெரும் பகுதியை இழந்துவிட்டன. இதற்கு ஈடு செய்ய வழிதெரியாமல் திண்டாடினர். யுத்தகாலக்கார்கள், லாரிகள், மோட்டார் வண்டிகள், ஆகாயவிமானம், இவைகளெல்லாம் இரப்பர் டயர்களின்றி, நகரா. இப்படிப்பட்ட நெருக்கடியில் நேசநாடுகளின் தேவையைபூர்த்தி செய்தது பெருமளவு திராவிடத்தின் இரப்பர்தான். அப்பொழுது ஓடிய டயர்கள் திராவிடத்தின் இரப்பரால் பம்பாயிலும், கல்கத்தாவிலும தொழிற்சாலைகளில் செய்யப்பட்டவை. இன்று உலகில் உருளும் சுமார் 70 கோடி கார்கள், மோட்டார் வண்டிகள், பஸ்கள் மற்றும் பலகோடி சைகிள்கள் முதலியவைகளுக்குத் தேவைப்படுவன இரப்பர் டயர்கள். இன்றைய நவீன மோட்டாரில் சுமார் 34 இடங்களில் இரப்பர் தேவைப்படுகிறது. விமானத்தில் சுமார் 41 இடங்களில் தேவைப்படுகிறது. சைகிள், இராணுவ தளவாடங்கள், மற்றும் மருத்துவச்சாலை, விஞ்ஞானம் முதலியவைகள் இரப்பர் இல்லாமல் உருவாகா. இந்த அளவுக்குத் தேவைப்படும் இரப்பர் போதுமான அளவு இன்று உலகில் உற்பத்தியாகவில்லை. அதனல்தான் இன்று டயர்களின் விலை மிகவும் உயர்ந்து டயர்கள் கிடைப்பதே அரிதாக இருக்கிறது.

இரப்பர் வளர்ச்சிக்குத் திராவிடம் சிறந்த இடமாகும். நல்லமுறையில் நாம் இரப்பரைப் பெருமளவு பயிரிட்டால் நல்ல பயன் கிடைக்கும். ஒரு இரப்பர்மரம் சுமார் 30 ஆண்டுகள வரை பலன் கொடுக்கும். இப்பொழுது திராவிடத்தில் நீலகிரியில் சுமார் 340 ஏகர் நிலத்திலும், வளம் கொழிக்கும் மேற்குக்கடற்கரை ஓரத்திலும், மேற்கு மலைத்தொடரின் பக்கத்திலே தெற்கு வடக்காக சுமார் 400 மைல் நீளத்துக்கும் இடையிடையே இரப்பர் காடுகள் நிறைந்துள்ளன. இருந்தும் இரப்பர் இன்னும் தேவைப்படுகிறது. உலகத்தின் இரப்பர்தேவை அதிகமிருப்பதாலும் நம் திராவிடத்தின் பருவநிலை இரப்பர் வளர்ச்சிக்குச் சரியானதாக இருப்பதாலும் நாம் இன்னும் அதிகமாக இரப்பரை பயிரிடலாம். வடநாட்டு இரப்பர் தொழிற்சாலைகள் தென்னுட்டு இரப்பரை மிகவும் எதிர்பார்க்கிறது. நம்மிடம் உற்பத்தியாகும் இரப்பர் வடநாட்டுத் தொழிற்சாலைகளில் சென்று பின் இரப்பர் பொருளாக நம் மார்க்கட்டில் விற்பனையாகின்றது. நாமும் வாங்குகிறோம், வாங்கிக்கொண்டே இருக்கிறோம். நாமும் நல்லமுறையில் இரப்பரை வளர்த்துத் தொழிற்சாலைகளையும் நிறுவினல் நாம் இன்னும் அதிக இலாபம் பெறலாம். எதிர்காலத்திராவிட அரசுஇயங்கக்கிடைக்கும் வருவாய்களுள் இரப்பரும் முக்கியமான ஒரு பொருளாகும்.

புதிய வெளியீடுகள்

ஆசிரியர்: இரா. செழியன், எம்.ஏ.

போராட்டம் —(ஓரங்க நாடகங்கள்)

அண்டசராசரம் —(முதற்பகுதி)

(மற்றும் பல நூல்களும் தயாராகிக்கொண்டிருக்கின்றன)

விவரங்கட்கு;

மன்றம் அலுவலகம்: 26, நைனியப்பன் தெரு, சென்னை-1

ஆணும் - பெண்ணும்

ஆண் தன்மை வீரத்திற் சிறந்தது; பெண் தன்மை அன்பிற் சிறந்தது.

ஆடவர் உடம்பு போருக்கும், வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்தேடுவதற்குப் பொருத்தமாக ஊக்கமும் உறுதியும் அமையப் பெற்றுள்ளது. பெண்டிருடம்பு தன்னைப் பாதுகாக்கும் ஆடவருளங் கவரும் அனபும் அழகும் அமையப்பெற்றது.

பொதுவாக, 'ஆண்மை' எதிர்க்கும் இயல்பிற்று; 'பெண்மை' பணியும் இயல்பிற்று. ஆண்மை வலியச் சண்டைக்குப்போவது. பெண்மை வந்த சண்டையைப் போக்குவது ஆடவர் உள்ளம் வன்மையா யிருக்கும், பெண்டிர் உள்ளம் மென்மை பொருந்தியிருக்கும். ஆண்பிள்ளைக்குத் துணிவு உண்டு; பெண்பிள்ளைக்கு உறுதி யுண்டு. ஆண்பிள்ளைக்கு எடுப்பு உண்டு; பெண்பிள்ளைக்கு அமைதியுண்டு. ஆண் பிள்ளை ஆள்கின்றான்; பெண்பிள்ளை அளனை அன்பால் வயப்படுத்துகின்றாள்.

ஆண்மகன் சொற்களால் நயப்படுத்துகின்றான்; பெண்மகள் பார்வையாலும் இணக்கத்தாலும் நயப்படுத்துகிறாள். ஆண் பிள்ளையின் சட்டங்களைப் பார்க்கிலும் பெண்பிள்ளையின் பார்வை வலிமையுடையதாகும். ஆண்பிள்ளையின் வாதத்தைப் பார்க்கிலும் பெண்பிள்ளையின் கண்ணீர் மிக்க வலிவுடையதாகும். (வழக்கு மன்றங்களிற் சான்று பகரச் செல்லும் பெண்கள் குறுக்குக் கேள்விகளால் மயங்குவதில்லை.)

முற்காலத்திற் பிள்ளைப்பேறு மிகுதியாக இருந்தமையாற் பெரும்பாலும் வீடு அடங்கி இருக்கவேண்டிய பெண்மை ஏற்பட்டது. பெண்பாலுக்குள்ள தாய்மையின் இயற்கைத் தன்மையானது முற்றிலும் அடங்கியிருத்தலையும். தன்னயம் மறுக்கும் ஊழியத்தையும் வேண்டற்பாலதாயிருக்கின்றது. ஆண்பிள்ளை பிறர் சார்பின்றிஇருத்தல் கூடும். ஆனால் பெண்பிள்ளை அப்படியிருக்க வொண்ணாது. அவள் தன் விருப்பத்தாலும் முயற்சியாலும் தன் சாயலில் மற்றோர் உயிரை உண்டாக்கிப் பாதுகாக்க வேண்டியவளாயிருக்கிறாள்.

பெண்கள் பிறர் உணர்ச்சியை உடனே அறிந்துகொள்வார்கள். ஈகை யியல்பு பெண்மக்களுக்கே சிறந்தது. இவர்கள் இன்பத்தையும் மிகுதியாய் நுகர்வார்கள். அப்படியே துன்பத்தையும் மிகுதியாய் ஏற்பார்கள். பெண்கள் பிறர் வருத்தத்தை விரைவில் அறிந்துகொள்வார்கள், அவர்கள் சிறிய குறிகளாற் பிறர் உள்ளத்திலிருப்பதைக் கண்டுகொள்வார்கள். ஒருவன் நலமாயிருக்கின்றானா நலமின்மையாயிருக்கின்றானா, மகிழ்ச்சியுடனிருக்கின்றானா, கவலையுடனிருக்கின்றானா, தோல்வியுற்றிருக்கின்றானா வெற்றியுற்றிருக்கின்றானா; இன்னுந் தன்னை விரும்புகின்றானா முதலியவற்றை யெல்லாம் முகப்பார்வையிலேயே தெரிந்துகொள்வார்கள். இப்படி உய்த்துணர்தலாகிய சிறந்த காட்சியும் மிகுந்த இரக்கமும் சேர்ந்துதான் பெண்களை வாடி வதங்கிய நோயாளிகளுக்குச் செவிலித்தாயாகும் நிலைக்கு ஆளாக்குகின்றது.

ஆண்பிள்ளைகளைப் பார்க்கிலும் பெண்கள் மிகுந்த ஆர்வ முடையவர்களாகவும், ஆழ்ந்த உணர்ச்சியுடையவர்களாகவும் இருப்பதால் ஏற்பட்ட பழைய வழக்கங்களிற் பற்று விடாதவர்களாகவும், எதிலும் மாறுதலை விரும்பாதவர்களாகவும் இருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தோடு வளர்ந்த எவரேனும் எதுவேனும் பிரிந்திருக்கப் பொறார்,

ஆடவர் நடத்துவர்; பெண்டிர் துணைசெய்வர்

பெண்கள் பொதுவாகத் துடுக்கான மாறுதல்களையும், புதிய விதிகளையும் சட்டங்களையும் வெறுப்பதுமன்றிச் சாதி வேற்றுமையும் பாராட்டுவார்கள். ஆனால் ஆடவர்களோ எந்த நிலைமையில் உள்ளவர்களானாலும் ஒன்றுசேர்வார்கள். மிகவுங் கணக்காயும் கண்டிப்பாயுமிருக்கின்ற பெண்டிர்களைப்போலிருக்கமாட்டார்கள்.

ஆடவரின் பிழைகள் வலிமையால் ஏற்டும்; பெண்டிரின் பிழைகள் வலிவின்மையால் ஏற்படும். இணைவிழைச்சியின் மயக்கத்தால் வரும் முரட்டியல்பு மெல்லினல்லாரின் உணர்ச்சியைப் பகுத்தறியுந் தன்மையதன்று. தங்கள் உடல் வலியில் குறைவுளது என்னும் எண்ணமானது, பெண்களிற் பெரும்பாலார்க்

குத் தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளுதற்கான வசதிகட்கு இடமாயிருக்கின்றது.

ஆடவருக்கு உறுதியான போக்குண்டு. பெண்கள் விரைவான போக்குடையவர்கள். உடலில் அவனளவு வலிமையுடையவளல்லள் ஆகையால் அவள் தன் சினத்திற்குப் புகலிடமாக முரடின்றி அடுக்கும் மொழிகளால் மொழிந்து வெளியிடல் கூடும். இதன் பொருட்டாக மூன்று அங்குல நாவுடைய பெண் வெறிகொண்ட இடத்தில் ஆறு அடி உயரமுள்ள ஆடவனைக் கொல்லக் கூடுமென்று பழமொழியும் விளங்குகின்றது. ஆடவர்களுக்குச் சினம் மிகுதியாயிருப்பதனாலும், பிழைப்புக்கு வேண்டிய செயல்களில் ஈடுபட்டிருப்பதனாலும் அடிக்கடி மிகுந்த குற்றவாளியாகின்றார்கள்.

ஆண்பிள்ளைகள், குறைபாட்டை மிகுதியாய் உற்று நோக்குவார்கள். பெண்கள் வல்லமையிற் சிறந்தவர்கள். ஆண்பிள்ளைகள் சட்டம் ஏற்படுத்துவார்கள். பெண்டிர் விநயம் பாராட்டுவார்கள்; அழகைப்பற்றி மிகுதியாய் நோக்குவார்கள். பெண்கள் நயத்தையே நாடுவார்களென்பது பொதுவான கொள்கை. அவர்கள் உள்ளத்தைக் கொண்டு நல்லதைச் செய்வார்கள். புறஅழகிற் பற்றுடையவர்கள்.

பெண்கள் பொதுவாக இரக்கத்தோடு செயல் புரிவார்கள். ஆனால் எண்ணத்தில் எப்பொழுதும் அப்படி இல்லை. ஆண்பிள்ளை ஒன்றில் விருப்பமாயிருப்பான் அல்லது விருப்பமில்லாதவனாயிருப்பான். பெண்பிள்ளை ஒன்றை விரும்புவாள் அல்லது வெறுப்பாள்.

ஆண்பிள்ளை விரைந்த போக்கிலே அவாக் கொள்வான்; பெண்பிள்ளையின் அவா அழுத்தமானதாயிருக்கும். தன்னால் விரும்பப் பெற்ற ஆடவர்களித்தில் யாதொரு குற்றமுங் காணப்பொருள். வேண்டாதாரிடத்தில் நன்மையுள்ளதெனினும் மதியாள். தன்னால் விரும்பப் பெற்றவர்களிடத்திற்கானுங் குற்றங்கட்குத் தக்கவாறு அமைதி செய்துகொள்வாள். அதன் பொருட்டாகவே நெஞ்சறிந்த பொய்யை அவள்சொல்வதாகக் கருதுவதில்லை. ஏனெனில் தான்சொல்வதற்கு முன்னமே தான்சொல்வது மெய்யென உறுதி செய்துகொள்கின்றாள். ஒருத்தி தன் தீவினைகளை ஒப்புக்கொள்வாள்; குற்றங்களை ஒப்புக்கொள்வது அரிது. ஒருவன் தன் பிழையை ஒத்துக்கொள்வான்; ஒருத்தி தன் பிழையைத் தவறுத லென்பாள்—நாம் மன்னிப்போம்.

பெண்கள் தங்கள் மறை பொருள்களில் அடக்கமுடையவர்களாயிருப்பார்கள்; ஆனால் பிறர் மறைபொருள்களிலப்படி இருப்பதரிது.

ஆண்பிள்ளை விதி ஏற்படுத்துகின்றான்; பெண்பிள்ளை ஆள்கின்றாள். அவன் தலைமை பூணலாம்: அவள் நடத்துவாள்; அவன் ஆய்ந்தறிந்து உத்தி சொல்வான்; ஆனால் அதனை உறுதிபடுத்துபவள் அவளே. அவன் அவளை அடக்க முயல்வான்; ஆனால் அவள் அவனை வயப்படுத்திக்கொள்வாள்.

ஆடவன் குடும்பத்துக்குத் தலையாயிருக்கலாம். அவள் இதயமாய் இருக்கின்றாள். அவன் அறிவு உணர்ச்சியில் வயப்படும்; அவள் உணர்ச்சி அறிவில் வயப்படும். அவள் இயற்கை அன்பின் வழியது. அவனது இயற்கை அத்தகையதன்று. அவள் அவனிடத்தில் அன்பாயிருக்கின்றாளென்பதற்கு அவனுக்கு வேறு சான்று வேண்டுவதில்லை; அவள் அடங்கி நடத்தலே போதுமானதெனக் கொள்வான்; ஆனால் அவன் அவளிடத்தில் அன்புடையவனாயிருப்பதற்கு நாள்தோறும் வெளிப்படையான சான்றுகள் சொல்லிலுஞ் செயலிலுங் காட்டப்படல் வேண்டும்.

ஆர்வமுள்ள ஆடவன் விரைவுடையனாயிருப்பான்: அவன் தனது நெஞ்சம் திரிபோன போக்கின்படியெல்லாம் உடனே சீர்திருத்தத் துணிவான். அவள் ஒவ்வொரு நிலைமையிலும் நேரத்தைக் கடத்துவாள். அவன் விரும்புவது சிறிது, அவள் விருப்பம் மிகுந்ததாயினும்' அவள் இணங்குவது அரிது; ஆண்பிள்ளை தன் ஆவலை நிறைவேற்றும் பொருட்டுத் தன் இன்னுயிர்க் காதலியையும் இணக்கத் துணிவான்; அவள் காதலுள்ளவரையிலுந் தன்கணவனை இடைவிடாது காதலிப்பாள். அவனோ அவ்வாறு செய்வதில்லை. இதற்குஏது என்னவென்றால் அவளைப் பார்க்கிலும் அவனுக்கு ஏற்பட்டிருக்கின்ற வேலைகள் மிகுதி; வாழ்நாட் போக்கில் அவன் ஈடுபட்டிருக்கின்ற வேலைகள் பல; ஆகையால் இல்வாழ்க்கையில் அவன் விருப்பத்தின்படி நினைவைச் செலுத்துதல் இயலாது.

கொடுத்தலும் எடுத்தலும்

ஆண்பால் பெண்பால்களுக்குப் பிறப்பியல் பாயமைந்துள்ள ஒற்றுமை வேற்றுமை நயங்களை இருபாலாரும் நன்கறிந்துகொள்வரேல், இருவரும் மெய்யன் புடையவர்களாயும் உண்மைக் காதலர்களாயும் வாழ்வார்களென்பதில் ஐயமில்லை. இல்லறத்திற்குரிய பெரும்பயன் ஆணும் பெண்ணும் இணங்கி வாழ்வதேயாம். கொடுத்தலும் எடுத்தலுங் கொள்கையாக அமையக்கடவது; ஆனால் இஃது அவரிருதிறத்தாரின் நினைவொருமையின்றி அமைவதரிது.

[பெர்நார்டு ஆலண்டர் M. D. ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் மொழிபெயர்ப்பு இது]

✶ பெருவாழ்வு ✶

முயற்சியுள்ள வினையாளன் தடைகளான் தளர்வானல்லன். ஆனால் அவற்றை மேற்கொள்ளும் வழி எதுவென்பதையே நாடமுனைகிறான். அஃதேபோல் உயர்நிலையடைய இடைவிடாது முயற்சி செய்வோனை, அவா அடக்கிவிடமுடியாது. ஆனால் அவன் தன் உளத்தினை எவ்வாறு காத்துக்கொள்வதென்றே ஆழ்ந்த நினைவிலிருக்கிறான். ஏனெனில் அவாவை மூட்டுவோன் ஓர் கோழையையொப்பாவான். தளர்வும் நலிவும் ஏற்பட்டபோழ்துதான் அவன் முந்துறுகிறான். அவா மூட்டப்படுபவன அவாவின் தன்மையையும் பொருளையுங் கூர்ந்து ஆராயவேண்டும். ஏனெனில் அதனை அறியும்வரை, அதனை மேற்கொள்ள முடியாது. அவாவினை மேற்கொள்ள விருப்பவன் அஃது எவ்வாறு அவன் அறிவீனத்திலும் தவறிலுமே வெளிப்படுகிறதென்பதை அறியவேண்டும். தன்னையே ஆராய்ந்தும், ஆழநினைந்தும் எவ்வாறு மடமையையகற்றி, தவற்றைப் போக்குவதென்பதை உணர்ந்துகொளல்வேண்டும். உண்மையை யறிந்துகொள்ளவேண்டுமாயின், ஒருவன் தன்னையே அறிந்துகொளல்வேண்டும். தண்னையறிந்துகொளல் தன்னை வெற்றி கொள்ளுதற்கு வழி.

உயர்நிலையடையப் படிப்படியாய் மேலேறுவது, சிலவற்றைப் பின்னாகவும், கீழேயும் விட்டுப் போவதாம். தாழ்ந்ததை யொழித்தாற்றான் உயரியதை யடையமுடியும். தீமையை யகற்றி விட்டாற்றான் நலத்தையடைதல் கூடும். அறியாமையை யழிக்கும்போதே அறிவையடையப் பெறுவது. நாம் பெறும் ஒவ்வொன்றுக்கும் விலையுண்டு. விலையனைத்தையுங் கொடுத்தே யாகவேண்டும். ஒவ்வொரு விலங்கினமும், ஒவ்வொரு ஊர்ந்து செல்லும் சிற்றுயிரும் ஏதாவதோர் சிறந்த குணத்தைப் பெற்றே யிருக்கின்றன. உயர்நிலை நாடிச்செல்லும் மகனோ அதைவிடச் சிறந்த குணத்தையோ, அன்றி வலிமையையோ பெறுமாறு அதனை அவற்றிற்கு விட்டுவிடுகிறான். தன்னலப் பற்றுக்கொண்ட வழக்கங்களைப் பற்றிநிற்பதால் மக்கள் பெரும் நலங்களை யெல்லா மிழந்துவிடுகிறார்களே! நாம் தாழ்ந்தவற்றை எத்துணையகற்றி விடுகிறோமோ, அத்துணை அறிவும் ஒளியும் பெறுகிறோம். அறிவும் ஒளியும் பெற்றவன் தவறி வீழ்ந்து விடாமல் தன்னைக் காத்துக்கொள்க. அற்பக் கருமங்களிலும் அவன் கருத்துடனும், தீவினை யவனைப் பற்றிக் கொள்ளாதவாறு தனக்கு அரண் செய்துகொண்டு மிருக்கட்டும்.

மக்கள் வாழ்வில் பலதிறப்பட்ட செயல்களெல்லாம், மக்களின் நெஞ்சத்திலேயே வேரூன்றிக் கிடக்கின்றன. அவை தமக்கு வலிமை பெறுவதும் ஆண்டிருந்தே. துன்பத்துக்கும் இன்பத்துக்கும் ஏது மக்கள் வாழ்க்கையின் புறச்செயல்களிலில்லை. ஆனால் நெஞ்சத்தினுடையவும், உளத்தினுடையவும் அகச்செயல்களிலேயே பதிந்துகிடக்கிறது. புறச்செயல் ஒவ்வொன்றும் மக்கனின் நடையினின்றுந்தான் உயிர்பெற்று வாழ்கின்றது.

தன் தவறுகளையும் குறைகளையும் வெளிப்படுத்தப் பொறாதவன், ஆனால் அவற்றை மறைக்க முயலுபவன உண்மைநிலையை யடைய அருகனல்லன். அவாவுடன் போர் செய்து அஃதினை மேற்கொண்டுவிட அவன் இன்னும் தயாராகவில்லை. தன் தாழ்ந்த நிலையைப் பயமின்றி எதிர்த்துப் போராடமுடியாத ஒருவன் நீத்தார் நிலையை யடைவது முடியாது.

எடுத்த கருமங் கைகூடப் பெறாமையினால் சோர்வடைந்து விடல்வேண்டா. அத்தவறுதலினின்றும் நீ அடையப்பெறும் ஓர் விதப் பெருமையும், அறிவும் உள. தவறினால் நீ பெறும் அனுபவத்தைவிட பிறிதொரு ஆசான் அத்துணை உறுதியாய்த் துரிதமாய் உனக்கு அப்பெருமையையும் அறிவையும் அளித்துவிடமுடியாது. நீ தவறிழைக்கும் போதெல்லாம், தீவினையில் விழும்போதெல்லாம் நீ அறிந்துகொள்ள முயற்சித்தால் சாலவும் முதன்மையான பாடம் மிளிர்ந்துகொண்டிருக்கிறது. அரித்துவிடுந் தகையதான கேடுகளினும் நலத்தைக் கண்டுகொள்வோன் அமிழ்ந்துவிடான், மேலேறிவிடுவான். தன் தவறுகளையெல்லாம் இறுதியான சீரிய வெற்றிக்குக்கருவிகளாய்க் கொள்வான்.

மூடர்களே தங்குற்றங்களுக்கும் தீவினைகளுக்கும் பிறரைப்பழிக்கிறார்கள். ஆனால் உண்மையை நாடுவோன் தன்னையே பழிக்கட்டும். தன் நடைக்குத் தானே பொறுப்பாளியென்பதை ஒப்புக்கொள்ளட்டும்.

புதியன தோன்றுமுன், பழையன கழிதல் வேண்டும். புதிய மாளிகை நிறுவப்படுமுன் அவணிருந்த பழைய குடிசை அழிக்கப்படல் வேண்டும். புதிய உண்மை துலங்குமுன் பழைய பிழை நீக்கப்படல்வேண்டும். புதிய மகனாய் நிலவுமுன் ஏற்கனவே பீடித்திருந்த 'நான்' என்பதை நீத்தல்வேண்டும். கோபம், பொறுமையின்மை, பொறாமை, அகந்தை, தூய்மையின்மையாகியவைகளா லாக்கப்பட்ட 'நான்'என்பது நசித்தபின்னர், அஃதிருந்தவிடத்தே அன்பு, பொறுமை, நல்லெண்ணம், அடக்கம், தூய்மையாகிய புதிய மகன் தோன்றுகிறான். தீவினையும், துன்பமுமாகிய பழைய வாழ்க்கை ஒழிக, நேர்மையும் மகிழ்ச்சியுங் கூடிய புதிய வாழ்க்கை தோன்றுக பழைய அழுக்கடைந்தனவெல்லாம் அப்பொழுது புதியதாய் அழகுபெற்று விளங்கும்.

இக்கொள்கையை உணர்ந்து, அடையப் பெறுவதுதான் மேலுலகத்தையடைவதாகும். நிலையான பெருவாழ்வுக்கு அதுவே வழி வீடுமஃதேயாம்.

[ஜேம்ஸ் ஆலன் என்ற ஆங்கில நாட்டுப் பெரியார் இயற்றிய அறிவுரைகளினின்றும் மொழிபெயர்க்கப்பட்டது]

பெண் பார்க்க வந்த பையன், பெண் எதிர்பார்த்ததைவிட மிகவும் அழகாயிருப்பதைக் கண்டான். எப்படியும் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று முடிவு செய்துகொண்டான். பெண்ணின் தந்தையார், பையனைத் தனியாக ஒரு அறைக்கு அழைத்துப்போனார். ஏதோ முக்கியமான விஷயமாக இருக்கவேண்டும் என்றும், சரியான முறையில் பதில் பேசவேண்டும் எனறும் எண்ணிக்கொண்டு பையன் பின்தொடர்ந்தான்.

அறைக்குள் சென்றதும் பெண்ணின் தந்தையார் கதவைத் தாளிட்டு விட்டு, "தம்பி! உன்னிடம் மிகவும் முக்கியமான விஷயத்தைப்பற்றிக் கேட்கப் போகிறேன்." என்று ஆரம்பித்தார். முக்கியமான விஷயம் பணவிஷயமாகத்தான் இருக்கும் என்று யூகித்த பையன், "நீங்க என் சொத்து விஷயத்தைப்பற்றித் தெரிந்துகொண்டிருப்பீர்கள். அதுவல்லாமல் யாருக்கும் தெரியாத வகையில் பாங்கியில் இருக்கும் எனது தாயார் பணம் ரூ. 50000மும் எனக்குத்தான் கிடைக்கும். இன்னும்......" என்று கூறும்போது பெரியவர் இடைமறித்தார்.

"நான் கேட்பது அதுவல்ல! நீ பல பெரியஇடத்துப் பையன்களோடு தொடர்பு வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன்!"

"உண்மைதான். ஆனால் அவர்கள் எல்லோரும் மதிப்புவாய்ந்தவர்கள்"

"இருக்கலாம்! ஆனால் அவர்களிள், அறிவைவிட பணம் அதிகம்படைத்த சிலரோடு நீ நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாக அறிந்தேன்!"

"ஓ,...! அதுவெல்லாம் உண்மையல்ல. ஆனால் உங்கள் மகளை நான் திருமணம் செய்துகொண்டால் பிறகு அவர்களை ஏறெடுத்தும் பார்க்க மாட்டேன்.!"

"இரு...இரு...கொஞ்சம் பொறு! விஷயத்துக்குத்தானே வந்துக்கொண்டிருக்கிறேன்! அவர்களை இங்கு அழைத்துவந்து நீ அறிமுகம் செய்துவைக்க வேண்டும். ஏனெனில் என்னுடைய மற்ற மூன்றுபெண்களுக்கும் திருமணமாக வேண்டும்"

ஒப்பியல் இலக்கணம்

திரு. ஞா. தேவநேயப்பாவாணர், எம். ஏ.

★

பொருள்வரையறை

ஒப்பியல் இலக்கணமாவது, மொழிகளின் இலக்கணங்களை ஒன்றோடொன்று ஒப்பு நோக்கி, அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை அறிதல். இந்நாடு திரவிடநாட்டின் கூறான தமிழ்நாடாதலானும், இக்கட்டுரை மதுரைத்தமிழ்ச்சங்கப் பொன்விழா மலரிதழாதலானும், ஒப்பியல் இலக்கணமென்பது திரவிடமொழிகளின் இலக்கணவமைதிகளை ஒப்பு நோக்குவதையே ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கும். ஆயினும், பல்வேறு மொழிகட்கும் ஏதேனுமொருவகையில் தொடர்போ ஒப்புமையோ இருத்தலானும், ஒருகுடும்பமொழிகளை ஒப்புநோக்குவது போன்றே பலமொழிக் குடும்பங்களையும் ஒப்புநோக்குவதும் ஒப்பியல் இலக்கணமேயாதலானும், இக்கட்டுரையிறுதியில், திரவிட மொழியமைதி ஆரியமொழியமைதியொடும் ஒருசிறிது ஒப்புநோக்கப் பெறும். கால்டுவெல் கண்காணியாரும் இம்முறையை விரிவாகக் கடைப்பிடித்திருத்தல் காண்க.

ஒப்பியற்சிறப்பு

ஒப்பியல் என்பது, எல்லாக் கலைத்துறைகளிலும் உண்மையைக்காண்பதற்கு இன்றிமையாதமுறையாம். ஆகவே, ஒப்பியல் என்று பெயரும்வாய்ந்த கலைகட்கும் நூல்கட்கும் அதன் இன்றியமையாமையைச் சொல்லவேண்டுவதில்லை. கால்டுவெல் ஐயர் ஒப்பியலின் தேவையைத் தம் இலக்கணமுகவுரையில் (ப. 10) பின்வருமாறு வற்புறுத்துகின்றார்.

"அவர்கள் (திரவிடர்) தங்கள் மொழிகளைப் பிறவற்றுடன் ஒப்புநோக்க ஒருபோதும் முயன்றதில்லை; தங்கள் மொழிக் குடும்பத்தைச்சேர்ந்த பிறமொழிகளுடன் கூட ஒப்பு நோக்கியதில்லை. மொழிக் குடும்பம் என ஒன்றுண்டு என்னும் கருத்தைக் கூட அவர்கள் மனம்பற்றியதில்லை. இதனால், அவர்கள் தங்கள் மொழியைப்படிப்பதில் எடுத்துக்கொண்ட அக்கறையானது, மதிநுட்பத்தோடும் பகுத்துணர்வோடும் கூடியதாயிராமல், நேர்மையாக எதிர்பார்த்த அளவிற்கு மிகக்குறைவானபயனை விளைத்துள்ளது. அவர்கள் மொழிநூல், அப்பெயராற் குறிக்கப்படக்கூடுமாயின், நம் காலம் வரையும், ஊழிகட்கு முன்னிருந்தவாறே தொடக்கநிலையிலும் துண்டுதுணிக்கையாகவும் இருந்து வந்திருக்கின்றது. ஒப்பியல் தன்மையில்லாமையால் அது அறிவியல்திறமும் முன்னேற்றமும் அடையவில்லை. ஒப்பியற் கல்வியெவ்வோர் அறிவியல் துறையிலும் ஐரோப்பாவில் பெருநலம் பயத்திருக்கின்றது. இந்தியாவிற்கும் அது பெரிதுதவும் என்று எதிர்பார்க்கக் கூடாதா? தென்னிந்தியமக்கள், தங்கள் சொந்தமொழிகளை ஒப்புநோக்கிப்படிப்பதிலும் 'பொதுவாக ஒப்பியல்மொழி நூலிலும் விருப்பங்கொள்வராயின் அது, அவர்களின் தனியிலக்கணக்கல்வி இதுவரை பயன்பட்டதைவிட மிகமிகப் பல்வேறுவகைகளிற் பயன்படும் என்பதைக் காண்பார்கள். அவர்கள் செய்யுள் நடைப்பட்ட பிதிர்களையும் இன்னோசைப்பட்ட வெற்றனத் தொடுப்புகளையும் உருபோட்டுப் படித்துப் பொந்திகை (திருப்தி) கொள்வதை விட்டுவிடுவார்கள்.

வரலாற்றடிப்படை

எல்லாக்கலைகளும் நூல்களும் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன வென்பது, எவரும் அறிந்த உண்மை. வரலாற்றொடுமுரணும் எந்நூலும் நூலாகாது. ஆதலால், மொழிநூலும் அதனை அடிப்படையாகக் கொள்ளல்வேண்டும்.

தென்னாட்டுவரலாறு உண்மையானமுறையில் இதுவரை எழுதப்பெறவில்லை. இந்திய வரலாற்றைத் தெற்கிலிருந்து தொடங்க வேண்டுமென்று சென்றநூற்றாண்டே சுந்தரம்பிள்ளையும் வின்செண்டு சிமித்தும் கூறிப்போயினர். ஆயினும், இன்னும் அம்முறை கையாளப் பெறவில்லை. இதற்குமாறாகத் தென்னாட்டு வரலாறுதிறமையுடன் மறைக்கப்பட்டேவருகின்றது. இதனால், மகன் தந்தைக்கும், பேரன்பாட்டனுக்கும் முந்தியவர் என்பது

போல் தலைகீழாகத் தமிழ்வரலாறும், தமிழ் நாட்டு வரலாறும், இருந்து வருகின்றன.

இந்துமாவாரியில் மூவேறுகடல் கோளால் முழுகிப்போன (குமரிLemuria)நாட்டுச் செய்தியே தென்னிந்திய அல்லது தமிழக வரலாற்றுத் தொடக்கம். குமரிநாட்டுண்மை,

"முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே
(9-9-11)

என்னும் புறநானூற்றடிகளாலும்,

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி"
(11-9-22)

என்னும் சிலப்பதிகார அடிகளாலும்

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த
கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த்தென்னவன்"

என்னும் முல்லைக்கலித் தரவாலும் (104)

அக்காலத்து அவர் (தலைச்சங்கப்பாண்டியர்) நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னு மாற்றிற்கும் குமரியென்னுமாற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவததவாறும்-நாற்பத் தொன்பதுநாடும்-பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலாற் குமரியாகிய பௌவ மென்றூ ரென்றுணர்க."

என்னும் அடியார்க்கு நல்லார் உரைப்பகுதியாலும் (சிலப், சாமிநாதையர்பதிப்பு பக்.230)

"...... தலைச்சங்கமிருந்தார் ...... தமிழராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரையென்ப" என்றும்,

......இடைச் சங்கமிருந்தார் ...... தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப," என்றும்,

இறையனாகப் பொருளுரை கூறுவதாலும் (பக். 6, 7), பிறவற்றாலும் அறியப்படும்.

திரவிட ரெனப்படுவார் தென்னாட்டுப்பழங் குடிமக்களே யென்று, இராமசந்திர தீட்சிதர் எழுதியுள்ள **வரலாற்று முன்னைத்தென்னிந்தியா** (Pre-Historic South India), **தமிழரின் தோற்றமும் பரவலும்** (Origin and spread of theTamils) என்னும் நூல்களிலும், P. T. சீனிவாசையங்கார் எழுதியுள்ள **இந்தியக் கற்காலம்** (Stone Age of India)என்னும் நூலிலும் பரக்கக்கூறியிருத்தல்காண்க.

குமரி நாட்டு உண்மையை அறிந்தால் தான் தமிழர் தெற்கேதோன்றி வடக்கேசென்று திரவிடராய்த்திரிந்தா ரென்றவுண்மையையும், திரவிடர் மீண்டும் வடமேற்கேசென்று ஆரியராய்த்திரிந்தாரென்றவுண்மையையும், தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமாகும் என்ற வுண்மையையும் உணர்தல் இயலும்.

"தென்னாட்டு மொழிகளுக்குள் தமிழ்மிகத் தொன்மையான தென்றும், என் கருத்தின்படி அது திரவிடத்தாய்என்றும் நம்புவதற்கு ஒரு பாணிப்பும் தேவையில்லை" என்று **தமிழரின் தோற்றமும் பரவலும்** என்ற நூலிலும்,

"தமிழேனும் வேறு எத்தென்னிந்திய மொழியேனும் சமற்கிருதத்தினின்று தோன்றியதன்று என்பது மட்டுமன்று; நாம்நெருங்கி ஆயுங்கால், திரவிடமொழிகள் சமற்கிருதத்திடத்தும் வேதமொழிக்கிளைகளிடத்துங் கூடமிகுந்த அளவு செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன என்னும் எம்கொள்கையை வலியுறுத்த மிகுந்த ஒப்புமைகள் காண்கின்றோம்" என்று **திரவிடமுன்னைத் தென்னிந்தியா** என்னும் நூலிலும், இராமசந்திர தீட்சிதர் கூறியிருப்பதைக் கவனிக்க.

திரவிடமொழிகள் ஆரியமூலமொழிக்கு மிக நெருங்கியவை என்று கால்டுவெல் தம் ஒப்பியல் இலக்கணத்தில் ஆங்காங்குக் கூறியிருப்பது, ஆழ்ந்துநோக்கத் தக்கது.

திரவிட மொழிகளின் உறவியல்வரிசை

திரவிட—மொழிகள் :

(1) தமிழ்
(2) மலையாளம்
(3) தெலுங்கு
(4) கன்னடம்
(5) துளு (துளுவம்)
(6) குடகு (குடகம்)

எனத்திருந்தியவை ஆறும்,

(1) தோடா (தொதுவம்)
(2) கோட்டா
(3) கோண்டு (கோண்டி)
(4) கூ

(5) ஒராஒன்

(6) அரசமகால் (ராஜமஹால்)

எனத்திருந்தாதவை ஆறும்,

ஆகமொத்தம் பன்னிரண்டு எனக்கூறினர் கால்டுவெல் ஐயர். இவற்றுடன் பிராகுவீ, பர்சி (பர்ஜி) என்னும் இருதிருந்தா மொழிகளும் சேர்க்கப்பெறும்.

திருந்திய திரவிடமொழிகள் ஆறும், தூய்மைபற்றிய இறங்கு வரிசையிற் பின்வருமாறு அமையும்:

(1) தமிழ்
(2) மலையாளம்
(3) கன்னடம்
(4) துளுவம்
(5) குடகம்
(6) தெலுங்கு

திரவிடம் எனப்பெறும் எல்லாமொழிகளும் இன்று ஒரேபெயரால் வழங்கினும், தமிழொழிந்தவையெல்லாம் சிறிதும் பெரிதும் ஆரியத் தன்மையடைந்து விட்டமையால், அவற்றைத் தமிழும் திரவிடமும் எனப்பிரித்துக் கோடலே தக்கதாம். அவ்விருபாற்கும் தமிழியம் (Tamulic)என்பதைப் பொதுப் பெயராகக்கொள்ளலாம்.

தமிழினின்று திரிந்த திரவிடமொழிகளுள் மலையாளமும் ஒன்றாகக் கொள்ளப்பெறினும், அது நெருக்கத்திலும் தூய்மையிலும் பிற திரவிடமொழிகளிலும் வேறுபட்டு, தமிழுக்கும் திரவிடமொழிகட்கும் இடைப்பட்ட நிலையிலுள்ளதாகக் கொள்ளல்வேண்டும். தொன்றுதொட்டுப் பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை சேரநாட்டுச் செந்தமிழாகவும், அதன்பின் 16-ஆம் நூற்றாண்டுவரை கேரள நாட்டுக் கொடுந்தமிழாகவும், இருந்துவந்த மொழியைப் பிற திரவிடமொழிகளோடொப்பக்கொள்வது எவ்வகையினும் பொருந்துவதன்று.

பொதுவாக, திரவிடம் தெற்கே செல்லச் செல்லத்திருந்தி விரியும் என்றும், வடக்கே செல்லச் செல்லத்திரிந்து சுருங்குமென்றும் அறிதல் வேண்டும்.

திரவிடமெல்லாம் ஒருமொழி

திரவிடமொழிகள் இன்று பதினான்கெனக் கணக்கிடப்பட்டிருப்பினும், அவையனைத்தும் ஒருகாலத்தில் ஒரே மொழியாய் வழங்கியமை பின்வரும் சான்றுகளால் உணரப்பெறும்:

(1) திரவிட மொழிகளெல்லாம், முதற் காலத்தில், வேறுபாடின்றி அல்லது வேறுபடுக்கப் படாது தமிழம் அல்லது திரவிடம் என ஒரே பெயரால் அழைக்கப்பெற்றமை.

(2) திரவிட மொழிகட்கெல்லாம் அடிப்படைச் சொற்றொகுதி பெரும்பாலும் ஒத்திருத்தல்.

(3) எல்லாத்திரவிட மொழிகட்கும் இலக்கண அமைதி ஒன்றாயிருத்தல்.

(4) திரவிடமொழிகளுள் ஒவ்வொன்றையும் செவ்வையாய் அறிய ஏனையவற்றின் அறிவு இன்றியமையாமை.

(5) தெலுங்கு கன்னடம் மலையாளம் முதலிய திரவிடமொழிகள் ஒவ்வொன்றும் தமிழினின்று பிரிந்துபோனமை வரலாற்றாலும் மொழிநூலாலும் அறியப் பெறுதல்.

(6) தமிழல்லாத பண்டைத் தாய்மொழிகளும் பிற்காலத்துப் பல்வேறுகிளை மொழிகளாய்ப் பிரிந்துபோனமை.

திரவிடத்தாய்

திரவிடமொழிகட்கெல்லாம் தாய் தமிழே. இதற்குச் சான்றுகளாவன:—

(1) தமிழின் தொன்மையும் அது குமரிநாட்டில் தோன்றியமையும்.

(2) தமிழின் ஒலி யெளிமை.

(3) வடமொழியும் பிறமொழியும் கலவாத் தூய்மையில் தமிழ் சிறந்திருத்தல்.

(4) தமிழின் சொல்வளம்.

(5) தமிழின் சொற்செம்மை.

(6) திரவிடத்திற்குச் சிறப்பான இலக்கியம் தமிழிலேயே இருத்தல்.

(7) தமிழம் என்னும்பெயரே (த்ரமிளம்-த்ரமிடம்-த்ரவிடம்) திரவிடம் எனத்திரிந்தமை.

(8) கடைச்சங்ககாலத்தில் வேங்கடத்திற்குத் தெற்கில் தமிழே வழங்கியமை.

தமிழின் திரவிடத்தாய்மையை, அதனின்று மிகமிகப்பிரிந்து போனதும் பெருநிலத்தில் வழங்குவதும் திரவிடமொழிகட்குள் பிறங்கித் தோன்றுவதுமான தெலுங் கொன்றன் வாயிலாய் அறியலாம்.

எடுத்துக்காட்டு:

1. மூவிடப்பெயர்

தமிழ்	தெலுங்கு
யான்-நான்	நேனு
யாம்	மேமு
நாம்	மனமு
நீன்-நீ	நீவு
நீம், நீர்	மீரு
அவன்	வாடு
அவள்	அதி
அவர்	வாரு
அது	அதி
அவை	அவி

2. ஆகு என்னும்
வினைச்சொற் புடைபெயர்ச்சி

தமிழ்	தெலுங்கு
பகுதி—ஆ, ஆகு	அவு
ஏவல் ஒருமை—ஆ, ஆகு	கா, கம்மு
ஏவல் பன்மை—ஆகுங்கள்	கண்டி
தன்மையொருமை	
இ. கா. முற்று—ஆயினேன்	அயிநானு
இ. கா. பெயரெச்சம்—ஆன	அயின, ஐன
,, ,, வினையெச்சம்—ஆய்	அயி, ஐ
நி. கா. ,, —ஆக	கா, அவ
எ. கா ,, —ஆயிற்றேல்	அயித்தே
படர்க்கை எதிர்கால	
வினைமுற்று—ஆகும், ஆம்	அவுனு
உடன்பாட்டிடைச்சொல்— ஆம்	அவுனு
ஒன்றன்பால் எதிர்மறை	
வினைமுற்று —ஆகாது	காது
தொழிற்பெயர்—ஆதல்	அவுட்ட, காவ
ஆகுதல் (முதலியன)	டமு (முதலியன)

தமிழுக்குத் திரவிடத்துணை

பண்டைத்தமிழகத்தின் பெரும்பகுதியைக் கடல்கொண்டமை காரணமாக, அப்பகுதியில் சிறப்பாக வழங்கிய உலகவழக்குச் சொற்களும் தொல்காப்பியத்திற்கு முந்திய இலக்கண இலக்கியக்கலை நூல்களும் மறைந்து போனமையாலும், அதன்பின்னரும் இயற்கையாகவும் செயற்கையாகவும் தமிழுக்கு நேர்ந்துள்ளபல இன்னல்களின் விளைவாகவும், பல தமிழ்ச் சொற்களும் சொல்வடிவுகளும் இன்று தமிழல்லாத திரவிட மொழிகளிலேயே வழங்கி வரக்காண்கின்றோம்.

எ. டு : சொல்	சொல் வடிவு
(தெலுங்கு) எச்சரிக்கை	நன் (நான் என்பதன் வேற்றுமையடி)

இற்றைத் தமிழிலில்லாது பிற திரவிடமொழிகளிற் சிறப்பாகவழங்கும் தென் சொற்கள், திசைச் சொல்லின் பாற்படும்; சொல்வடிவுகள் குடியேற்றப் பாதுகாப்பு (Colonial Preservation என்னும் நெறிமுறைக் கெடுத்துக்காட்டாம்.

திரவிட மொழிகளுள், தமிழைவளம் படுத்தற்கும் தமிழ் இலக்கணச் சொல்லுறுப்புக்களின் பண்டைநிலையை அறிதற்கும் மலையாளம் போல் உதவுவது பிறிதொன்றுமில்லை.

எ. டு: (1) கின்று என்னும் நிகழ்கால இடைநிலை

கின்று என்னும் நிகழ்கால இடைநிலை, குந்நு-வந்நு என்று மலையாளத்திலும், (குந்நு-குந்-உந்-ந் என்று தமிழிலும் திரியும்.

செய்கின்று-செய்குந்நு-செய்யுந்நு. (மலை)

எ. டு:

செய்கின்றன்-செய்குந்நான்-செய்குநன் (தமிழ்)
செய்குந்நான்-செய்யுந்தான் - செய்யுநன் - செய்நன்—(தமிழ்)

'மகிழ்நன்,' 'வாழ்நன்' (வாணன்) முதலியன இங்ஙனம் திரிந்தவையே.

(2) செய்யாதே என்னும் எதிர்மறை ஏவல்வினை

செய்யாதே என்னும் எதிர்மறை ஏவல், மலையாளத்தில் செயயருது என்னும் வடிவு கொண்டுநிற்கும். 'செய்யருது' என்பது 'செய்யரிது' என்பதன் திரிபு, 'செய்யரிது' என்பது முறையே, செய்யமுடியாது, செய்யக்கூடாது என்னும் பொருளது. அருது (அரிது) என்பது மலையாளத்தில் தனிவினையாகவும் வரும்.

எ. டு: ஈ ஆள்க்கு வேறேபணி அருது=இவ் ஆட்கு வேறுவேலைகூடாது.

'ஆர்க்கானும் கொடுக்கும் போழ் அருதென்றுவிலக்கருது.' (பழமொழி)

(3) யகர மெய்யீற்று இறந்தகால வினையெச்சம்

தமிழ் வினைமுற்றுக்கள் முதற்காலத்தில் எச்சவடிவில் வழங்கிப் பின்பு முற்றீறுபுணர்ந்தனவாதலின், அவற்றைப் பகுக்கும்போதும் எச்சமும் ஈறுமாகவே பகுத்தல்வேண்டும்.
எ. டு:

வந்து + ஆன் = வந்தான்
உறங்கி + ஆன் = உறங்கியான்-உறங்கினான்

ய-ந போலி. ஒப்புநோக்க: யான்-நான் யமன்-நமன்,

ஆய்,' 'போய்' முதலிய யகர மெய்யீற்று இறந்தகால வினையெச்சங்கள் மலையாளத்தில் ஆயி, போயி என இகரவீற்று வடிவில் நிற்கும்.

ஆயி + ஆன் = ஆயியான் ஆயினன்

ஆயி-ஆய் + ஆன் = ஆயான்-ஆனன்

இனி வடநாட்டு மொழியாகிய இந்தியிலும் பிற ஆரியமொழிகளிலும், எழுவாயையும் பெயர்ப்பயனிலையையும் இணைக்கும் 'இரு' என்னும் புணர்ப்புச் சொற்கும் (Copula), மலையாளம் அடிகோலியது என்னலாம்.

எ. டு:

மலையாளம்	இந்தி	ஆங்கிலம்
இது எந்தாகுன்னு ?	யஃகியாஹை ?	What is this ?
இது ஒரு மரமாகுன்னு.	யஃ பேட்ஹை.	This is a tree.

வடநாட்டு ஆரிய மொழிகளின் திரவிட அடிப்படை

ஆரிய மொழிகளாகக் கூறப்படும் வடநாட்டு மொழிகளில், திரவிடச் சொற்கள் மட்டுமின்றித் திரவிட மொழியமைதியும் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது. இதை இந்திவாயிலாற் காட்டுவல்.

(1) ஆயா, போலா என ஆவீறுகொண்டு இறந்தகாலம்காட்டும் இந்தி வினைமுற்றுக்கள் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தை யொத்தன.

(2) ஆயியே, போலியே என 'இயே' ஈறு கொள்ளும் இந்தி வேண்டுகோள் வினைகள் செய்யிய என்னும் வாய்பாட்டு வியங்கோள் வினையொத்தன.

(3) படே படே சல்த்தே சல்த்தே என அடுக்கிவரும் இந்திச் சொல்லிரட்டைகள், பெரிய பெரிய, நடந்து நடந்து எனவரும் அடுக்குத்தொடரை முற்றும் ஒத்தன.

(4) வஃகியா கர்த்தா ஹை ? (அவன்என்ன செய்கிறான் ?), ராமா பாத்காத்தா ஹை (இராமன் சோறு உண்கின்றான்) என அமையும் இந்திச் சொற்றொடர்கள் முற்றும் தமிழொழுங்கைப் பின்பற்றியன.

ஆங்கிலத் தமிழமைதி பொப்புமை

(1) தனிக் குறில் முன்னொற்றுயிர்வரின் இரட்டல்.

எ. டு: thin + er = thinner, sit + ing = Sitting.

(2) நிகழ்காலவினையெச்சம் எழுவாயாதல்.

எ. டு: to err is human.

எனக்குப் பாடந்தெரியும்.

(3) வினைக்காலங்களின் நால் வேறுபாடு.

எ. டு: நிகழ்காலம் வருகிறான்-தனிப்பு (Indefinite),

வந்து கொண்டிருக்கிறான்-தொடர்ச்சி (Continuous).

வந்திருக்கிறான்-நிறைவு (Perfect).

வந்து கொண்டிருந்திருக்கிறான் - நிறைவுத் தொடர்ச்சி (Perfect Continuous).

கால்டுவெல் ஐயரின் சறுக்கல்கள்

கால்டுவெல்ஐயர் தலைசிறந்த திரவிடமொழியாராச்சி சொல்லாராய்ச்சி வல்லுனரேனும், தொல்காப்பியப் பயிற்சியும் சங்கநூற் கல்வியும் மொழியாராய்ச்சியும் அக்காலத் தன்மையாலும், எல்லாத்துறையிலும் ஆரியத்தலைமை எதிர்ப்பின்றியிருந்து வந்ததினாலும் தமிழின் தனித்தன்மையையன்றித் தாய்மையையும் தலைமையையும் உணராது இலக்கணமுள்ளிட்ட உயர்தரக் கலைநூல்கள் ஆரியவழியினவென்றும், ஆன்மாபாவம் முதலியபல கருத்துக்களை யுணர்த்தத்தமிழிற் சொல்லில்லையென்றும் தமிழ்ப்பெயர் வேற்றுமை வகுப்பு சமற்கிருதத்தைப் பின்பற்றியதென்றும் தமிழர் அல்லது திரவிடர் பொதுவாய்த் தாழ்ந்த நாகரிக நிலையினர் என்றும் கூறிப் போந்தார். இனி திரவிடமொழிகளில் செயப்பாட்டு வினையில்லை யென்றதும், ஆரிய முறையை அவர் அளவையாகக் கொண்டதைக்காட்டும்.

தமிழின் பொது வியல்பு

தமிழ் உலக முதற்றாய் மொழியாதலால், சீனமொழியின் அசைநிலைத் தன்மையையும், ஆரிய மொழிகளின் விகுதிநிலைத்தன்மையையும் சித்திய மொழிகளின்கொளுவு நிலைத்தன்மையையும், சேமியமொழிகளின் உயிர்த்திரிவுத் தன்மையையும், ஆப்பிரிக்க மொழிகளின் பாலிசைவுத்தன்மையையும், அமெரிக்க மொழிகளின் தொகுதி நிலைத்தன்மையையும் ஒருங்கே கொண்டுள்ளது.

மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா மலர்-1956

★

★ இன்ப நினைவு ★

(அருணன்)

காலை மணி பத்து: பஸ்ஸ்டாண்டில் கூட்டம் அதிகம். ஆண்களே ஏறுவது கடினம். அவளோ பெண். அவள் எப்படிக்கூட்டத்தைச் சமாளித்துக்கொண்டு ஏறமுடியும். அப்படியே முயன்றாலுந்தான் அந்தநேரத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் கல்லூரி மாணவர்கள் சுலபத்தில் விட்டுவடுவார்களா? விட்டுவிட்டால் அவர்கள் பராக்ரமத்துக்குப் பழுதேற்பட்டுவிடாதா? எனினும் இரண்டு மூன்று முறைகள் முயற்சித்தாள். முடியவில்லை. கடிகாரத்தைப்பார்த்தாள். மணி பத்தேமுக்கால். இன்னும் இருபது நிமிடங்களாகும் பஸ்வர. வந்து, டிக்கட் கொடுத்துப் புறப்படப் பதினைந்து நிமிடங்கள் ஆகும். அதை எண்ணஎண்ண அவள் கண்கள் கலங்கின. மணியைப் பார்ப்பதும் கார் வரும் வழியைப் பார்ப்பதுமாக ஊசலாடிக் கொண்டிருந்த உள்ளத்தினளான அவள் பதட்டம் துடிப்பு இவற்றையெல்லாம் எதிரிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த ஒரு டாக்ஸி டிரைவர், டாக்ஸியுடன் வந்து, "ஏறிக்கொள்ளுங்கள் நான் அந்தப்பக்கந்தான் போகிறேன் காலேஜில் விட்டுவிடுகிறேன்" என்று கூறினான். காலதாமதமாகிவிட்ட அச்சத்திலேயே இருந்த அவள்—அவன் என்ன கூறுகிறான்—தான் என்ன செய்கிறோம் என்று ஆராயாமல் ஏறி உட்கார்ந்தாள். டாக்ஸி பறந்தது. தான் ஓரளவு சரியான நேரத்தில் கல்லூரிக்குச் சென்று விடுவோமென்று அவள்கொண்ட அமைதியைவிட, தான் ஏறத் தவறவிட்ட பஸ்கள் அங்கங்கே நின்றுகொண்டிருக்கவும், தான் அவற்றையெல்லாம் கடந்து செல்வதையும் எண்ணி பூரித்தாள். அந்தப் பூரிப்பில் அவள் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துப் புன்னகை செய்தாள். அவன் கண்களில் நீர்ததும்பிக் கொண்டிருந்தது. காரணம், கல்லூரி வாழ்க்கையில் பலமுறை அவன் அனுபவித்த துன்பமும் அத்தகையது. கல்லூரி வந்துவிட்டது. 'இறங்கிக்கொள்' என்று அவன் கூறியபோது தான், தான் பணம் கொடுக்கவேண்டிவருமோ என்று அவள் தயங்கினாள். அவன் இறங்கிக் கொள் என்று சாதாரணமாகத்தான் சொன்னான். அவள் அஞ்சினாள். கீழே இறங்கினாள் கார் வேகமாகச் சென்றுவிட்டது. மாலை கல்லூரி முடிவடைந்தது. அவனே வந்து அவளை அழைத்துச்சென்றான். பஸ்ஸ்டாண்டில் கொண்டு விட்டுவிட்டான். இப்போது அவன் இறங்கு என்று சொல்வதற்கு முன்னதாகவே அவள் இறங்கிவிட்டாள். அவன் செயல் அவளுக்கு வியப்பாகவே இருந்தது. டாக்ஸி டிரைவரென்றாலே (அசகாயசூரர்களும்) அஞ்சும்படியாக இருக்க இவன் ஒரு புதுமையனாக இருக்கிறானே என்று எண்ணிக் கொண்டே போனாள். அவள் உள்ளம் அவனுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டது. அவன் உள்ளம் அவளது மகிழ்வை எண்ணிக் கொண்டிருந்தது. அவள் நடையும் உடையும் அவளொரு ஏழை என்பதைக் காட்டின.

அவள் பதட்டத்துடன் பஸ்ஸ்டாண்டிற்கு வருவதால் முன்னரேவரும் வசதியில்லை என்பது புலனாயிற்று. காலந்தாழ்த்தக்கூடாது என்ற அவளுடைய துடிதுடிப்பு அவளுக்குப் படிப்பிலுள்ள ஊக்கத்தை உணர்த்தியது. இவள் ஏழையாக ஏன் பிறந்தாளென்று எண்ணிக்கொண்டே வந்த சவாரியை ஏற்றிக் கொண்டுபோனான். மறுநாள் அப்படியே! இப்படியே நாள்தோறும். ஆனால் சனி, ஞாயிறு நாட்கள் ஏன் வருகின்றன என்று எண்ணுவான். அந்த நாட்களில் அவளைப் பார்க்க முயற்சிப்பான் முடிந்தால் வெற்றி இல்லையேல் வீரத்தோல்வி. டாக்சியில் வரும் போதும் போகும்போதும் அவளுடைய பாடப் புத்தகங்களிலுள்ள பாடங்களைச் சொல்லிக் கொண்டேபோவான், அவைகள் அவனுக்குப் பழைய பாடங்கள். அவளும் கேட்டுக் கொண்டே வருவாள். இவ்வாறு அவளுக்கு நினைவூட்டும் துணையாசிரியராகவும் அவன் இருந்தான். இந்த இணைப்பு நாளடைவில் வளர்ந்துகொண்டே வந்தது. கண்டவர் கண்டபடிக்கூறும் நாட்டில்தான் அவன் இருந்தாலும் அவனிடம் யாரும் எதுவும்

சொல்லமாட்டார்கள். சொன்னால் அடிவாங்கத்தப்பமாட்டார்கள். அவனொரு முரடன். நல்ல உரமிக்க உடல்வளம் போதியபடிப்பு இவை அவனிடமிருந்தன. நல்ல குடியிலே—செல்வமிக்க குடியிலேதான் அவனும் பிறந்தான். பாகப்பிரிவினையின் பயனால் ஊரை விட்டு வெளியேறினான், நேராகச் சென்னைக்கு வந்தான். கையிலிருந்த மிகுதியான பெருந்தொகைப் பணத்தையும் செலவிடுவதற்கு முன் புத்திசாலித்தனமான ஒரு ஏற்பாட்டைச் செய்துகொண்டான். அதுதான் அவன் கையாண்ட டாக்ஸி கார்.

அதைக்கொண்டு அவன் தனக்குத் தேவையான வரும்படியைச் சம்பாதித்துக்கொள்ள முடிந்தது. கார் வாங்கியதுபோக மீதிப்பணத்தைச் சேமிப்புச்செய்துகொண்டான். அந்தக் கார்தான் அவனுக்கு இருப்பிடம்—படிப்பகம் எல்லாம். காலையில் எழும்பூர் ரயில்வே நிலையத்தில் காரை நிறுத்திவிட்டுக் குளிப்பு—உடை மாற்றம் முதலியன செய்துகொள்வான். இரவில் காரைப் 'பார்க்' பண்ணிவிட்டு அதிலேயே படுத்துக்கொள்வான். படிப்பதும் அதிலேதான். அதிகப்பணத்தை அவன் எதிர்பார்ப்பதில்லை. சட்டத்திற்கு மாறாகத் தன் தொழில்துறையைப் பயன்படுத்துவதில்லை. எவரிடமும் அன்பாகவும் பிறரிடம் அவர் நலம் நாடலும் உதவி செய்வதுமாக இருந்தமையால் அவனுக்கு டாக்ஸி டிரைவர்களெல்லாம் மிக உள்ளார்ந்த நண்பர்களாயிருந்தனர். பொதுவில் அவன் ஒரு விசித்திர மனிதன் என்பதே அவர்களின் கருத்து. அதையே அவன் உள்ளத்தில் நிலவும் அந்த ஒயிலாளும் எண்ணிக் கொண்டிருந்தாள். அவனைக்காணும்போது அவள் உள்ளத்திலே ஒரு பூரிப்பு பெருமிதம். அவன் அவளை நெருங்குவதுகூட இல்லை. ஆனால் இருவரும் ஏனோ ஒருவரை ஒருவர் பிரிய விரும்புவதில்லை. அவள் ஒரு ஏழைப்பெண். படிக்கப் பணம் கொடுப்பது புண்ணியமென்று எண்ணங்கொண்ட பெரும்பணக்காரரின் உதவியால் அவள் கல்லூரி மாணவியாக இருக்கிறாள். இவற்றுடன் அவளின் விதவைத்தாய் அவளுக்காகவே செய்யும் கைப்பாடு அவள் போக்குவரத்துச் செலவுகளுக்குப் பயன்பட்டது. யாவற்றிற்கும் மேலாக அவளுக்குக்கற்க வேண்டுமென்ற ஆசை அதிகமிருந்தது. கல்லூரியின் வாயிலில் நுழையும்போதெல்லாம் பட்டமளிப்பு விழாமண்டபத்துள் நுழையும் எண்ணமே அவள் கண்முன் நிழலாடும். அவள் ஏழைமை எப்போதும் அவளை வாட்டி வதைத்துக்கொண்டேயிருக்கும். கல்லூரியில் அவளுக்கு எந்தத்தோழிகளும் கிடையாது. அவள் தனி. ஆனால் டாக்ஸியில் வந்திறங்கும் நிகழ்ச்சி ஏற்பட்டதன்பின், மெதுவாக நட்புக் கொள்வாரும் நையாண்டி செய்வாருமாக ஒரு சிலர் கூட்டாயினர். அது அவளுக்குச் சற்று வேதனையாக இருந்தது. எனினும் அதன் பயனால் அவன் நினைவு அதிகரிக்கத் தொடங்கியது. இவ்வாறே நாட்கள் சில பலவாக காலாண்டுத் தேர்வு விடுமுறை தொடங்கியது. அதைத் தெரிவிப்பதன் மூலம் "நாளை முதல் கல்லூரி விடுமுறை ஆரம்பம்" என்றாள். "அப்படியானால் இன்னும் இருபது இருபத்தைந்து நாட்களுக்கு உன்னை நான் காணமுடியாதா?" என்று நாணத்தையும் விட்டுக்கேட்டான். அந்தக்கேள்வியில் அவன் தினமும் அவளைப்பார்க்க விரும்புகிறானென்ற பேராவல் ஆழ்ந்துகிடந்தது. "நான் தினமும் வருகிறேன்" இதில் அவள் சம்மதமும் அவனைப் பார்க்காமலிருக்க அவளால் முடியாது என்ற நிலையும் புலனாயிற்று. "எங்கே வருவாய்" என்றான். "இங்கேயே வருவேன்" என்றாள். அதற்குள் பஸ்நிலையமும் வந்துவிட்டது. இறங்கிப்போய்விட்டாள்.

அவள் கூறியபடி ஒவ்வொருநாளும் வருவாள். வந்து செல்லும்போது மறுநாளையச் சந்திப்புத்திட்டம் முடிவு செய்யப்படும். இவ்விதம் விடுமுறைக் காலங்கள் கழிந்தன. கல்லூரி தொடங்கி வழக்கமான நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன. முறையே அரை ஆண்டு, ஆண்டு நிறைவுத் தேர்வுகள் முடிவுற்றன. விடுமுறையைக் கழிக்கும்வகைதான் உறுதியானதாயிற்றே. அதன்படியே நிறைவேறின. இப்போது அவர்கள் பேசிப்பழகிக் கொண்டனர். பேசும் பேச்சுக்களெல்லாம் அவர்கள் ஈருடலுக்கும் ஓருயிராய் உருமாற்றிக்கொண்டன. புலன்மாறிப் போயினர். அவன் அவளாகவும், அவள் அவனாகவும் ஆயினர். அவன் பெயரொலித்தால் அவள் தேடுவாள். அவள் பெயரொலித்தால் அவன் தேடுவான். இவ்வாறு இணைந்துவிட்டன இரு உள்ளங்களும், ஆயினும் அவன்:

"நானவளை அடைய விரும்புகிறேன். அதை எவ்வாறு அவளிடம் கூறுவேன். அவள் என்னிடம் பேசுகிறாள். அந்த ஒரு காரணத்தைக்கொண்டே அவளுக்கு என்மீது விருப்பமென்று நான் எவ்விதம் கருதிவிட முடியும். கடை நோக்கிலும் என்னைக் கண் காணிக்கும் அவள் கண்கள். என்னை அக

லாது நாடுகின்ற அலர் விழிகள். இவை களைக்கொண்டு அத்தனையும் என் நாட்டத்தின் அறிகுறி என்று நான் எவ்வாறு கருதிவிட முடியும். அவள் பேச்சு, நடை முறை எல்லாமுமே என்னைக் கவர்கின்றன. இவையனைத்தும் இணைபிரியா நட்பின் இலக்கணங்களென்று நான் எவ்விதம் எண்ண முடியும்'' இவ்விதம் எண்ணி எண்ணிச் சோர்ந்தான்.

இதேபோல அவள் மன நிலையும்.

"அவரென்மீது அன்பாக இருக்கிறார். தோற்றத்தில் எவ்வளவு கொடியவராக இருந்தாலும் என்வரையில் அவர் மிக நல்லவர். என் வளர்ச்சியிலே அவருக்கொருதனி ஆர்வம். என் தேவைகளை அறிந்து அவற்றை உடனுக்குடன் பூர்த்தி செய்கிறார். நான் வெற்றி பெற்றால் அவர் மகிழ்கிறார். சற்றே நான் மழையிலே நனைய நேர்ந்தாலும்கூட அவருள்ளம் கவலையில் தோய்ந்து விடுகிறது இவையெல்லாம் அவரென்னை ஏற்றுக்கொள் வாரென்பதை எப்படி உறுதிப்படுத்த முடியும். அவரோ சீமான் வீட்டுப் பிள்ளை எத்தனைதான குடும்பத்தில் மனத்தாங்கல் ஏற்பட்டிருந்த போதிலும பருவத்தில் அனைவரும் ஒன்று சேர்ந்துவிட மாட்டார்களா? இவற்றையெல்லாம் கடந்து நானவரை அடைந்து வாழ முடியுமா? அவருக்கென வேறெந்தச் சீமாட்டி காத்திருக்கிறாளோ? என்றெல்லாம் எண்ணி ஏங்கினாள்.

தேர்வு முடிவு வெளிவந்தது. அவள் முதல்வகுப்பில் தேறிவிட்டாள். இதையறிந்த அவன் அவளைக் கண்டு மகிழ்ச்சி தெரிவிக்கத் துடித்தான். அவளும் தன் தேர்வைக் கூற வேண்டுமென்று ஆவலுடன் ஓடோடியும் வந்தாள். ஒருவருக்கொருவர் தம் உள்ள மகிழ்ச்சியை வெளியிட்டுக் கொண்டனர். அவன் உள்ளம் மேலும் ஒரு ஆசையை அடக்கிக்கொண்டிருந்தது. அவள் பட்டமளிப்புப் பெற்று வருவதைக் கண்குளிரக் காண வேண்டுமென்பதுதான். அதற்கான செலவு முதலியவைகளைத்தானே செய்துவிட்டுச் செய்தியைமட்டும் கூறினாள். அதுவும் அவள் சிந்தைக்கினிய செந்தேனாய் இனித்தது. பட்டமளிப்பு விழாவிற்குச் சென்று பட்டமளிப்புப் பெற்றுத் திரும்பினாள். அன்று அவள் படித்து வெற்றிபெற்றதின் பயனாலோ பட்டத்தால் தனக்குப் பயன் விளையும் என்பதனாலோ பட்டம் பெற்றதாகக் கருதவில்லை. அவனுக்காகவே பட்டம் பெற்று வந்தாளென்றுதான். அவளும் எண்ணினாள் அவனும் எண்ணினான். உண்மையும் அதுதான். அந்த உடையுடன் அவளைக்கண்டு களித்தான். அத்துடன் சென்னையைச் சுற்றி ஊர் வலமும் செய்வித்தான். அவன் உடன் பழகும் தோழர்களெல்லாம் அவன் விருப்பத்திற்குரியவளின் வெற்றிகண்டு, அவனைப் போலவே மகிழ்ந்தனர். அவனும் மகிழ்ச்சிப் சிப்பெருக்கால் உள்ளம் பூரித்துப்போயிருந்தான். அவன் பூரிப்பு, அதிகநேரம் நீடித்து நிற்கவில்லை. 'இனி அவளை எவ்வாறு காண முடியும்' என்று சிந்தித்துச் சித்தம் சோர்ந்தான். உரிய இடம் வந்தடைந்ததும் அவளுக்கு விடைகொடுத்தனுப்பினான். இப்போதெல்லாம் அவள் முன்போல அடிக்கடி அவன் கண்களுக்கு விருந்தளிக்க வருவதில்லை. அவள் வராத நாட்களெல்லாம் அவனுக்கு இந்த உலகமே சூன்யமாகக்காட்சியளிக்கும். ஊரெல்லாம் மகிழ்ந்தாலும் அவனுக்கு மகிழ்ச்சி அவள் தோற்றத்தில்தான். அவனுக்கு அவள் நடந்துவரும் பூக்காடு—அழகின் வரிவடிவம்—இன்பத்தின் சொந்தக்காரி. அவளுக்கு அவனைக் காணுதிருப்பது—பகல் காணு வையம்போலிருக்கும். எப்போது தருணம் வாய்க்குமென்று தவித்துக்கொண்டிருப்பாள். ஓட்டமும் நடையுமாக வாடிக்கையிடத்தை நாடிச்செல்வாள். அப்போது அவன் கண்டிப்பாக அங்கு இருப்பான். அவள் வருவாளென்ற செய்தியை முன்னரே அறிந்திருப்பதாலல்ல—அவளைக் காண்பதற்காகவே அங்கேயே காத்திருப்பான். ஏதேனும் சவாரி வந்தால்கூடப் போகமாட்டான். வருமானம் கெடுவதை அவன் கருதவில்லை தன் பொன்மானைக் காண்பதைவிட வேறு எதுவும் அவனுக்கு ஒரு பொருட்டாகவில்லை. இவ்வாறு நாட்கள் சிலபலவாக, மாதங்கள் கடந்து வருடமாயிற்று.

ஒருநாள் தனக்குத் திருமண மென்ற செய்தியை அவள் கூறவந்தபோதுதான் அவள் உண்மைநிலை அவனுக்குப் புரிந்தது. அதுவரை தன் ஒருதலை அன்பே நிலவுவதாகக் கருதிய அவன் தற்போது அவளும் தன்மீது வைத்துள்ள அன்பு—காதலன்புதான் என்பதை உணர்ந்தான். அப்போது அவள் தன்னை ஏற்றுக்கொள்ளும்படி அவனிடம் ஒப்படைக்க வந்திருந்தாள். அவனும் அவளை ஏற்றுக்கொள்ள மறுக்கவில்லை. ஆயினும் சமுதாயத்தின் கொடுஞ்செயலுக்கு அஞ்சினான். அதையே அவளுக்கு எடுத்துக் கூறினான்.

"கமலா!" அப்போதுதான் முதன் முதலாக அவளை அவன் பெயரிட்டு அழைத்தான்.

அந்த அழைப்பு அவளுக்கு அமுதினும் மிக வாக இனித்தது. என்னபதில் கூறுவ தென்று அறியாமல் திகைத்தாள். அவளுள் ளத்தின் களிப்பு மகிழ்ச்சிக் கண்ணீராக இமைகளிலே துளித்தன.

"அழாதே கமலா! நான் உன்னை நேரிற் கேட்டறிந்ததில்லையாயினும், என்று நான் உன் அலைமோதும் நிலைகண்டு உன்னைக் கல் லூரிக்கு அழைத்துச் சென்றேனோ அன்றே நீ என்மனதில் அகலாது நிலைபெற்றுவிட் டாய். காணும் பொருள்களில்—எதிர்ப்படும் காட்சிகளில் ஏனையோர் செயல்முறையில்— இளைஞர்தம் இன்பக்கூத்தில் எல்லாவற்றி லும் உன்னைக் கண்டுகளிப்பதையே இதுவரை உயிராகக் கொண்டிருக்கிறேன். எனக்கென ஒரு வாழ்வும் அதற்கோர் துணையும் இல்லை யென்றேதான் இதுவரை நான் எண்ணியிருந் தேன். ஆனால், உன்னைக்கண்டேன். கண்டது முதல் 'எனக்கும் வாழ்க்கையுண்டு' என்ற உறுதிகொண்டு அதுபற்றிய எண்ணங்களை யும், வாழ்ந்தால் எவ்வாறு வாழ வேண்டும் என்பதுபற்றியும் ஒரு திட்டமிட்டுக் கொண் டேன். அதுமட்டுமல்ல; என் கற்பனையிலேயே உன்னுடன் வாழ்வதாக எண்ணி எண்ணிப் பூரித்திருக்கிறேன். "நமக்கு மணம் நடை பெறும்-நாம் உல்லாச உலா வருவோம், ஏனை யோர் கண்டு மகிழ்வர்; கடற்கரை—காட்சிச் சாலை — கடைவீதிகள்—புதுமை நடைபெறு மிடங்கள் இவைகளிலெல்லாம் நாம் கலந்து மகிழ்வதை இந்த வையம் கண்டு மகிழும்" இவ்வாறெல்லாம் கற்பனை செய்துகொண் டேன். என் இளமையின் எழுச்சி காரணமாக இந்தக் கற்பனைகள் உருப்பெற்று—வளர்ந்து —என்னுள் வாழ்கிறதே தவிர இவற்றைச் செயற்படுத்த இந்தச் சமுதாயத்தில் முடி யாது என்பதை—எதுவும் யாரும் எனக்கு எடுத்துரைத்ததில்லை. சமுதாயத்தை முன் னிறுத்தி தங்கள் தகாச்செயலுக்கு மறைவு தேடிக்கொள்ளும் கூட்டத்தைச் சேர்ந்தவ னல்ல நான். என்னை இந்தச் சமுதாயம் எதுவும் செய்துவிட முடியாது. ஆனால் நீ! இளம்பருவம். பருவத்தின் பயனைப் பெற வேண்டிய நேரத்தில் சமுதாயத்தின் தீமையை யல்லவா கையேற்க நேரும்."

என்றிவ்வாறு தன் நிலையை விளக்கிக் கூறி னன். அவளும் அவன் தன்னை ஏய்ப்பதற்காக இம்முறையைக் கையாளுகிறான் என்றெண்ண வில்லை. எத்துணையோ வழிகளில் அவளும் உடன்கலந்து யோசித்தாள். இறுதியில்விடை பெற்றுச் சென்றாள். அன்று அவள் மணப் பெண்ணாகச் செல்லும்போதும், அவன் தன் காரை அங்கே ஆயத்தம் செய்திருந்தான். அதிலேயே—அதுவும் பழைய வழிகளிலேயே சென்று, கார் எழும்பூரை யடைந்தது. புகை வண்டி புறப்பட்டுச் சென்றதே தவிர இருவர் நினைவு அலைகளும் அவரவர்களைப் பின்பற் றியே சென்றன.

இரண்டாண்டுகள் — அதற்குள் அவள் தாயிழந்தாள்; விதவையானாள்-ஒரு குழந்தை யின் தாயுமானாள். இத்தனை மாற்றங்களிலும் அவன் நினைவுமட்டும் மாறவில்லை. அவனும் தினம் சந்திக்கும் இடத்திற்கு வரத் தவறுவ தில்லை. ஒருநாள், பழைய பஸ் நிலையத்தில் கையில் குழந்தையுடன் அவன் வருவா னென்று எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அவனும் வந்தான். வரும்போதே தூரத்தில் அவளைப் பார்த்துவிட்டான். அவனது அறிவு உணர்ச்சி அத்தனையும் அவளிருக்கும் இடத் தைச் சென்றடைந்தன. முன்னர் அவன் எண்ணத்தில், சமுதாயத்தின் கோர உருவம் தோற்றமளித்தது. இப்போது சமுதாயமே ஒருபொருட்டாகத் தோன்றவில்லை அவனுக்கு. ஏனெனில், சமுதாயத்தின்பிடியில் பட்டுவிட்ட மாந்தர்கள் மீண்டு என்ன ஆனார்களென்பது அதற்குத்தெரியாது. அதிலும் அழிந்துபட்ட வர்களைப்பற்றிக் கவலைப்படுவதே இல்லை.

டாக்ஸியுடன் அவள்முன் போகவேண்டும் என்று எண்ணினன். அப்போது அவனிடம் டாக்ஸி இல்லை. அதை இன்னொருவனுக்கு இனமாகவே கொடுத்துவிட்டான். எனினும் எந்த டாக்ஸியாயிருந்தாலும் அவனுக்குக் கிடைக்கும். தேடினன். இறுதியில் பெரு முயற்சியின் பேரில் ஒருடாக்ஸியை வாங்கிக் கொண்டுவந்து அவளை அழைத்தான். முற்றி லும் மாறுபட்டிருக்கும் அவன் வேறு யாராக வேனும் இருக்கக்கூடுமோ என்று அவள் அய்யுற்றாள். ஆனால் அந்நிலையில் தன்னை டாக்ஸிக்கு அழைப்பவனும்—கமலா என்று தொண்டை கம்ம—கண்கள் கலங்க அழைப்ப வனும் வேறுயாராகவும் இருக்கமுடியாது, என உறுதிகொண்டு ஏறி உட்கார்ந்தாள். இருவரிடையேயும் மௌனம் — இருவர் கண் களிலும் கண்ணீர் வெள்ளம் — இவற்றின் நடுவே பழைய காட்சிகள் ஓடிக்கொண்டே இருந்தன. அவை கடந்தகாலத்தின் இன்ப நினைவாக இருந்தது. அந்த நினைவு நிகழ்ச்சி யாக, அவர்கள் வாழ்க்கை மறுமணம் பெற்று விட்டதாக......!

★

அண்டசராசரம்

(48)

வைகுண்டம்

சத்தியலோகத்துக்கு நானூறு கோடி மைல்களுக்குமேல் வைகுண்டம் ஆரம்பமாகிறது. வைகுண்டத்தைப்பற்றிப் புராணங்கள் பலவாகக் கூறுகின்றன. புராணக்காரர்கள் தங்களுடைய வர்ணனைகளில் பெரும்பகுதியை இந்திரலோகத்துக்கும் வைகுண்டத்துக்கும் செலவிட்டனர் என்று கூறலாம்.

பிரமலோகத்தைத் தாண்டி மேலேபோனால், பெரும் பாழ்வெளி இருக்குமாம். அதற்கடுத்தாற்போல் விரசை என்ற புண்ணிய நதி ஓடிக்கொண்டிருக்கும். அந்த நதிக்கப்பால் பரமபதமென்று சொல்லப்படும் வைகுண்டம் இருக்கிறது. அந்தப் பரமபதத்துக்குள் நுழைந்தால், மங்கள வாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருப்பதைக் கேட்கலாம்; ஆங்காங்கு முக்தியடைந்த அரிபக்தர்கள் பக்திச்சுவையுடன் அளவளாவிக் கொண்டிருப்பதைக் காணலாம். அதுமட்டுமோ! அவர்களுக்குப் பக்கத்திலும், சுற்றிலும், எங்கணும், அழகான பெண்கள்—திவ்விய மலர்மாலைகளைச் சூடியவர்களாய், மைதீட்டிய கண்களுடையவர்களாய், நறுமண காந்தங்களுடன், மெல்லிய ஆடையணிந்தவர்களாய் உயர்ந்த அலங்காரங்களையுடையவர்களாய் விளங்கும் அப்சரமகளிர்-காத்துக்கொண்டிருப்பார்கள். பக்கங்களில் செடிகொடிகள் செழித்து, நிழல் தெரியாதபடி நெருங்கி, தேன் வழிந்தோடும்படி மலர்கள் நிரம்பிய கற்பகச்சோலைகள் பலவும் இருக்குமாம். அந்தச் சோலைகளில் கொடிகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டு, லீலா விநோதங்களுக்கேற்ற வசந்த மண்டபங்களும், கிரீடைசெய்து இன்புறத்தக்க இடங்களும் இருக்கும். அந்தக் கற்பகச்சோலைகளிலும், லீலா மண்டபங்களிலும், கிரீடாசலங்களிலும் தேவமாதர்கள்—செவிக்கு இதமான வார்த்தைகளைக் கொஞ்சிப்பேசி, சுகத்தையும் காமத்தையும் தரவல்ல கோகிலங்கள் பல இருக்குமாம். பூக்கள் நிறைந்து தெளிந்த நீரோடைகளும், பூக்கள் பரப்பப்பட்ட படுக்கைகளும், தேனையுண்டு மயங்கிப்பாடும் வண்டுகளும், அங்கு வந்தவர்களுடைய மனதில் மயக்கத்தை உண்டாக்கும் நந்தவனங்களும் பரமபதத்தில் இருக்கின்றன. இவ்வாறு லீலா மண்டபங்களும், மலர்ப் படுக்கைகளும், கிரீடையிடங்களும், உத்தியானவனங்களும் சூழ, நடுவில் மாணிக்கம் பவளம் முத்துக்கள் பதிக்கப்பெற்ற படிக்கட்டுகளும், இரத்தினத்தால் செய்யப்பட்ட தூண்களும் உடைய மணிமண்டபம் இருக்கும். அதன் மத்தியில் ஆயிரந்தலையுடைய ஆதிசேடன் பள்ளிகொண்டிருப்பான். அந்தப் பாம்புப் படுக்கையின்மீது, மேகம்போன்று கரிய உடலுடன், பிரகாசிக்கிற மணிமகுடத்துடன், நெற்றியில் ஒளிவிடும் திருநாமத்துடன், காதில் மின்னும் குண்டலங்களுடன் மார்பில் துளசிமாலையும் முப்புரிநூல் மணிமாலைகள் ஆகிய இவைகளுடன், கைகளில் சங்குச்சக்கர கோதண்டங்களுடன், நித்திய கல்யாண கோலத்தில் சீதேவி, பூதேவி அருகில் உபசாரம் செய்ய மகாவிட்டுணு எழுந்தருளியிருப்பாராம். சுற்றிலும் இருடிகள், நித்திய சூரியர்கள், பாகவதர்கள், தேவர்கள், தொழுது கொண்டே

இருப்பார்களாம். பரமபதத்தின் காட்சி புராணத்தில் கூறுகிறபடி இதுவாகும்.

விட்டுணுவை உயர்வாகக் கூறுவதற்கு, பாகவதம், விண்டு, காருடம், நாரதீயம் ஆகிய புராணங்கள் இருக்கின்றன. இவையன்றி, முக்கிய இதிகாசங்களான இராமாயணம், பாரதம் இரண்டும் விட்டுணுவின் அவதாரங்களைக் கூறுவனவாகும். விட்டுணுவை முதற் கடவுளாக உடைய வைணவமதமே பொதுவாக இந்து மதத்திலும், வட இந்தியாவிலும் அதிகமாகப் பரவியிருக்கிறதென்னலாம். விட்டுணுவின் வழிபாடும், வைணவ மதமும் வேதகாலத்தில் மிகக்குறைவான அளவிலிருந்து வரவர வளர்ந்துவந்துள்ளது. வேதகாலத்திலிருந்து விட்டுணு "வளர்ந்த" வரலாற்றைப்பின்பு பார்க்கலாம் முதலில் புராணங்களில் சித்தரிக்கப்படுகிற விட்டுணுவைக் கவனிக்கலாம்.

மும்மூர்த்திகளில் அதிகமான அவதாரங்கள் எடுத்தவர் விட்டுணு மூர்த்தியாவார். துஷ்ட நிக்ரக, சிஷ்ட பரிபாலனத்துக்காக அவர் அடிக்கடி அவதாரங்கள் எடுப்பாராம். ஒருமுறை உலகத்துக்கு வந்தால், அப்பொழுதே எல்லாக் கேடுகளையும் அகற்றி விட்டுப் போய்விடக்கூடாதா? அடிக்கடி தம்மைத்தேடிவரும் நிலையில் உலகத்தை விட்டுணு வைத்திருந்தார்.

வீட்டில் ஒரு நோயாளி; வைத்தியரைக் கூப்பிட்டு வருகிறார்கள். கையைப் பிடித்து மருந்து தருகிறார். உடனடியாக நோய் நீங்கி குணமாவதுபோல் இருக்கிறது. வைத்தியரின் திறமையை வீட்டிலுள்ளவர்கள் பாராட்டுகிறார்கள். வைத்தியர் புன்னகையுடன் கிளம்புகிறார். வைத்தியர் பத்து அடி வைப்பதற்குள் மறுபடியும் ஆள் வருகிறான் "முன்னைவிட ஆபத்தான நிலை, கடுமையான வலி!" என்று. வைத்தியர் மீண்டும் திரும்பிவந்து மருந்து கொடுத்துவிட்டுப் போகிறார். மீண்டும் ஆள் வருகிறான். இப்படி நோய் தீராமல், வைத்தியரை மீண்டும் மீண்டும் அழைப்பதுபோல, பூலோகத்துக் கேடுகளை நீக்க விட்டுணு அழைக்கப்படுகிறார். நோய் தீராததற்குக் காரணம், நோயின் தன்மை வைத்தியருக்குத் தெரியாமலிருக்கவேண்டும். அல்லது நோயின் தன்மை தெரிந்தும் அதைத் தீர்த்துவைக்கும் வைத்தியமுறை அவருக்குத் தெரியாதிருக்க வேண்டும்! இல்லாவிட்டால், கூப்பிடும்பொழுதெல்லாம் வைத்தியர் வருகிறார். பத்து தடவை வந்தார், இருபது தடவை வந்தார் ஆனால் நோய் மோசமாகிக்கொண்டே வருகிறது என்று சொன்னால், வைத்தியரின் திறமையை அது எவ்வளவு மதிப்பிடுமோ, அந்த அளவில் பக்தர்கள் கூப்பிட்டபொழுதெல்லாம், பாபாத்மாக்கள் அதிகமான பொழுதெல்லாம் விட்டுணு அவதாரங்கள் எடுத்தார், ஆனாலும் பாபங்கள் குறையவில்லை. பூலோகம் படாதபாடுபடுகிறது. ஒன்று பூலோகத்திலுள்ள கேடுகளின் தன்மை விட்டுணுவுக்குத் தெரியவில்லை, அல்லது கேடுகளைத் தெரிந்தும், அவற்றை நீக்கும் வலிமை அவரிடமில்லாமலிருக்க வேண்டும்.

விட்டுணு எடுத்த அவதாரங்கள் பத்து என்று பக்தர்கள் அடிக்கடி கூறுவார்கள். மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசுராம, ராம, பலராம, கிருஷ்ண, கல்கி அவதாரங்கள்! இவற்றில் முதல் ஒன்பது அவதாரங்கள் விட்டுணு இதற்குமுன் எடுத்துவிட்டவை, கடைசியான கல்கி அவதாரம் இனி எடுக்க வேண்டியது. கலியுகக் கடைசியில் அது வருமாம். மற்ற யுகங்களுக்கு, மூன்று நான்கு என்று பல அவதாரங்கள் தேவைப்பட்டபொழுது, கலியுகத்துக்கு ஒரு அவதாரம்மட்டும் போதுமென்று பட்டது போலும் அந்த அளவு 'மற்ற யுகங்களைவிடக் கலியுகம் நல்லது என்றுதான் அர்த்தம்!

இந்தப் பத்து அவதாரங்களில், பலராம அவதாரத்தைவிட்டு, அதற்குப் பதில் புத்த அவதாரத்தைச் சேர்த்துச் சிலர் கணக்கிடுவார்கள். புத்தருக்கு நாட்டில் ஏற்பட்ட செல்வாக்குக் காரணமாக, அவரையும் தமது கடவுளின் அவதாரங்களில் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டார்கள். புத்தரை விட்டுணுவாக ஆக்கினார்களே தவிர, புத்த மதத்தை விரட்டியடித்தார்கள், புத்த சுவடிகளை எரித்து அழித்தார்கள், புத்தர்களைக் கொடுமைப்படுத்தினார்கள்.

விட்டுணு பத்து அவதாரங்கள் எடுத்து "துஷ்டநிக்கிர சிஷ்ட பரிபாலனத்துக்கு" என்று சொல்வார்கள். அது கடவுளுக்குப் புகழ்தேடி தருவதாகும். ஆனால் புராணக் கதைப்படி, பத்து அவதாரங்களைப் பூலோகத்தின்மீது காட்டிய கருணையால் அவர் எடுக்கவில்லை. பிருகு முனிவர் விட்டுணுவுக்குத்தந்த சாபத்தால் பத்து அவதாரங்களை விட்டுணு எடுக்கவேண்டியிருந்தது. பிருகு முனிவரின் மனைவியை விட்டுணு கொன்றார். அதனால் கோபங்கொண்ட பிருகு முனிவர் சாபந் தந்தார். ஆக விட்டுணு பத்து அவதாரம் எடுத்ததுகூட தமக்கிருந்த கருணை காரணமாகவல்ல, கட்டாயப்படுத்தப்பட்ட காரணத்

வத்தை இரண்டு பாகங்களாகப் பிரித்தார். அவை ஆண் பெண் இரண்டு தனிப்பட்டவர்களாக ஆனார்கள். ஆண்பகுதி சுயம்புமனு எனவும், பெண் சதரூபை எனவும் பெயரிடப்பட்டன. பிரமாவிடமிருந்து இந்த இருவரும் பிறந்தவர்கள். அப்பொழுது ஆண், பெண் என்று இவர்கள் இருவர் மட்டுமே இருந்ததால், முறையேதும் பார்க்காமல் இருவரையும் கணவன் மனைவியாக வாழும்படி பிரமா அனுப்பினார். உயிர்களைப் பெருக்குவதற்கு, கணவன்—மனைவி முறை நல்லதென்று பிரமாவுக்குப் பட்டதாம். இரட்டைப் பிறவிகளான, சுயம்புமனுவுக்கும் சதரூபைக்கும் குழந்தைகள் பிறந்தனர். இவ்வளவுகாலமும் சுயம்புமனுக்கு ஒண்டியிருக்க இடமில்லை. ஏனென்றால் பூமி கடலுக்குள் அமிழ்ந்து கிடந்ததாம். பெரிய நகரங்களில், பாதையோரங்களில் குடும்பங்கள் வளர்வதுபோல, பூமியில்லாமல் ஆகாயத்தில் சஞ்சரித்தபடி சுயம்புமனுவும் சதரூபையும் ஐந்து குழந்தைகளைப் பெற்றெடுத்தன. குடும்பம் பெரிதானதும், இடம் தேவை என்ற எண்ணம் வந்து, சுயம்புமனுவும் சதரூபையும் தங்கள் தந்தை பிரமாவைப் பார்த்து "தந்தையே! எங்களுக்கும், எங்களுடைய மக்களுக்கும் வசிக்க இடம் ஒதுக்கிக் கொடுப்பீர்களாக! பெரிய பூமியானது கடலுக்கடியில் அமிழ்ந்திருக்கிறது! அதை நீங்கள் வெளியில் கொண்டுவந்தால், நல்லது". என்று பிரமாவைப்பார்த்து வேண்டிக்கொண்டார்கள்.

"பூமியை வெளியில் தூக்கி வருவது என்றால் கூடிய காரியமா! பிரளய வெள்ளத்தில் அமிழ்ந்து, பாதாளப் பள்ளத்துக்குப் பூமி போய்விட்டது. சிருஷ்டி வேலைக்கு நியமிக்கப்பட்ட நம்மால் இது எப்படி முடியும்? என் தந்தையான பரமாத்மா ஒருவர்தான் இதில் வழிகாட்ட முடியும்!" என்று பிரமா மகாவிட்டுணுவை நினைத்துத் தியானம் செய்தார்.

பிரமா இவ்வாறு கவலைப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது, அவர் மூக்கிலிருந்து சிறு உருவம் கீழே விழுந்தது. அது கட்டை விரல் அளவுள்ளதாய், பார்ப்பதற்குச் சிறிய வராகம் (பன்றி) போல இருந்தது. பிரமா ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது. கட்டைவிரல் அளவு இருந்த வராகம் மிக வேகமாக வளர்ந்து ஆடளவாகி, மாடு உயரம் வந்து, பிரமா உயரத்தையும்தாண்டி, ஒரு பெரிய யானை அளவு வந்தது. யானை அளவுள்ள பன்றியைப் பார்த்து, "விரலளவு இருந்த உருவம் இப்பொழுது யானையளவு வளர்ந்துவிட்டதே! விசித்திரமான விலங்கு! என்னைச் சோதிப்பதற்காகப் பிரபு இப்படிச் செய்கிறாரா?" என்று பிரமா ஆச்சரியப்பட்டார். அதற்குள் பன்றியின் உயரம் சிறு குன்று அளவு வளர்ந்துவிட்டது. பின் மலையைப்போல அது நின்றது.

அவ்வளவு பெரிதாக வளர்ந்த பன்றி, பயங்கர ஒலியுடன் உறுமியது. பன்றியின் உறுமலைக் கேட்டதும், பிரமாவும் முதல் பிராமணர்களான அவர் புதல்வர்களும் வந்திருப்பவர் மகாவிட்டுணு என்பதை நிச்சயித்துக்கொண்டு, வேதங்களில் சொல்லப்படும் புகழுரைகளைச் சொல்லி, பன்றியாகிய விட்டுணுவைத் துதித்தார்கள்.

புகழ்ந்துரைக்கும் வேத சுலோகங்களைக் கேட்டதும், மலைபோலிருந்த பன்றி மீண்டும் மகிழ்ச்சியால் உறுமிக்கொண்டு, வாலை உயர்த்தி, பின்னிருகால்களை மேல்நோக்கி உதறி, தண்ணீருக்குள் குதித்தது. வேகமாகச் சென்ற பின்னங் கால்கள்பட்டு வானத்திலிருந்த மேகங்கள் சிதறினவாம். பூமி யிருக்கும் இடத்தை மூக்கால் முகர்ந்தவண்ணம் பன்றி கடலுக்குள் வேகமாகச் சுழன்றது. அது விழுந்த வேகத்தில் கடல் பிளவுபட்டது. தண்ணீர் அலையலையாக எழுந்து வழிந்தது. தண்ணீருக்குள் மூழ்கிய பன்றி, கடைசியாக வெகு ஆழத்தில் பூமி (பூமிதேவி) அடங்கிக் கிடப்பதைக் கண்டது. உடனே பன்றி அருகில்சென்று, அவளை எடுத்துத் தன் வயிற்றுடன் (மார்புடன்) அணைத்துக் கொண்டது.

அப்பொழுது மிகுந்த பலசாலியான அரக்கன் ஒருவன் பெரிய கதையை வீசிக்கொண்டு வராகத்தை நோக்கி ஓடிவந்தான். வராகம் மிகச் சுலபமாகத் தன் கொம்பினால் அவனைக் கிழித்துக்கொன்றது. பின் பூமியைத் தன் கொம்புகளில் தாங்கியபடி வராகமூர்த்தி தண்ணீருக்குமேல் எழுந்துவந்தார்.

பிரமாவும் முனிவர்களும் வேதமொழியில் வராக மூர்த்தியைப் புகழ்ந்தார்கள். "ஓ பிரபுவே' ஓ வராக மூர்த்தியே! இந்த வராக உருவம் மூன்று வேதங்களையும் உள்ளடக்கியது; உங்களுடைய கொம்புகளின்மீது பூமி தேவியைச் சுமந்திருப்பது, மலைச்சிகரங்களில் மேகங்கள் தங்கியிருப்பதுபோலிருக்கிறது. மிக அழகானதும் கவர்ச்சிகரமுமான காட்சி! ஓ, பிரபு! இந்தப்பூமி உமது தேவி, உலக மாதா! அவள் இருப்பதற்கு நிலையான இடத்தை அருளிச்செய்யுங்கள்."

இவைகளைக் கேட்டு மகிழ்ந்த வராகமூர்த்தி தன் குளம்படிபட்டு உண்டான இடத்தில் பூமியை வைத்தார்.

வத்தை இரண்டு பாகங்களாகப் பிரித்தார். அவை ஆண் பெண் இரண்டு தனிப்பட்டவர்களாக ஆனார்கள். ஆண்பகுதி சுயம்புமனு எனவும், பெண் சதரூபை எனவும் பெயரிடப்பட்டன. பிரமாவிடமிருந்து இந்த இருவரும் பிறந்தவர்கள். அப்பொழுது ஆண், பெண் என்று இவர்கள் இருவர் மட்டுமே இருந்ததால், முறையேதும் பார்க்காமல் இருவரையும் கணவன் மனைவியாக வாழும்படி பிரமா அனுப்பினார். உயிர்களைப் பெருக்குவதற்கு, கணவன்—மனைவி முறை நல்லதென்று பிரமாவுக்குப் பட்டதாம். இரட்டைப் பிறவிகளான, சுயம்புமனுவுக்கும் சதரூபைக்கும் குழந்தைகள் பிறந்தனர். இவ்வளவுகாலமும் சுயம்புமனுக்கு ஒண்டியிருக்க இடமில்லை. ஏனென்றால் பூமி கடலுக்குள் அமிழ்ந்து கிடந்ததாம். பெரிய நகரங்களில், பாதையோரங்களில் குடும்பங்கள் வளர்வதுபோல, பூமியில்லாமல் ஆகாயத்தில் சஞ்சரித்தபடி சுயம்புமனுவும் சதரூபையும் ஐந்து குழந்தைகளைப் பெற்றெடுத்தன. குடும்பம் பெரிதானதும், இடம் தேவை என்ற எண்ணம் வந்து, சுயம்புமனுவும் சதரூபையும் தங்கள் தந்தை பிரமாவைப் பார்த்து "தந்தையே! எங்களுக்கும், எங்களுடைய மக்களுக்கும் வசிக்க இடம் ஒதுக்கிக் கொடுப்பீர்களாக! பெரிய பூமியானது கடலுக்கடியில் அமிழ்ந்திருக்கிறது! அதை நீங்கள் வெளியில் கொண்டுவந்தால், நல்லது''. என்று பிரமாவைப்பார்த்து வேண்டிக்கொண்டார்கள்.

"பூமியை வெளியில் தூக்கி வருவது என்றால் கூடிய காரியமா! பிரளய வெள்ளத்தில் அமிழ்ந்து, பாதாளப்பள்ளத்துக்குப் பூமி போய்விட்டது. சிருஷ்டி வேலைக்கு நியமிக்கப்பட்ட நம்மால் இது எப்படி முடியும்? என் தந்தையான பரமாத்மா ஒருவர்தான் இதில் வழிகாட்ட முடியும்!'' என்று பிரமா மகாவிட்டுணுவை நினைத்துத் தியானம் செய்தார்.

பிரமா இவ்வாறு கவலைப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது, அவர் மூக்கிலிருந்து சிறு உருவம் கீழே விழுந்தது. அது கட்டை விரல் அளவுள்ளதாய், பார்ப்பதற்குச் சிறிய வராகம் (பன்றி) போல இருந்தது. பிரமா ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது. கட்டைவிரல் அளவு இருந்த வராகம் மிக வேகமாக வளர்ந்து ஆடளவாகி, மாடு உயரம் வந்து, பிரமா உயரத்தையும்தாண்டி, ஒரு பெரிய யானை அளவு வந்தது. யானை அளவுள்ள பன்றியைப் பார்த்து, ''விரலளவு இருந்த உருவம் இப்பொழுது யானையளவு வளர்ந்துவிட்டதே! விசித்திரமான விலங்கு! என்னைச் சோதிப்பதற்காகப் பிரபு இப்படிச் செய்கிறாரா?'' என்று பிரமா ஆச்சரியப்பட்டார். அதற்குள் பன்றியின் உயரம் சிறு குன்று அளவு வளர்ந்துவிட்டது. பின் மலையைப்போல அது நின்றது.

அவ்வளவு பெரிதாக வளர்ந்த பன்றி, பயங்கர ஒலியுடன் உறுமியது. பன்றியின் உறுமலைக் கேட்டதும், பிரமாவும் முதல் பிராமணர்களான அவர் புதல்வர்களும் வந்திருப்பவர் மகாவிட்டுணு என்பதை நிச்சயித்துக் கொண்டு, வேதங்களில் சொல்லப்படும் புகழுரைகளைச் சொல்லி, பன்றியாகிய விட்டுணுவைத் துதித்தார்கள்.

புகழ்ந்துரைக்கும் வேத சுலோகங்களைக் கேட்டதும், மலைபோலிருந்த பன்றி மீண்டும் மகிழ்ச்சியால் உறுமிக்கொண்டு, வாலை உயர்த்தி, பின்னிருகால்களை மேல்நோக்கி உதறி, தண்ணீருக்குள் குதித்தது. வேகமாகச் சென்ற பின்னங் கால்கள்பட்டு வானத்திலிருந்த மேகங்கள் சிதறினவாம். பூமி யிருக்கும் இடத்தை மூக்கால் முகர்ந்தவண்ணம் பன்றி கடலுக்குள் வேகமாகச் சுழன்றது. அது விழுந்த வேகத்தில் கடல் பிளவுபட்டது. தண்ணீர் அலையலையாக எழுந்து வழிந்தது. தண்ணீருக்குள் மூழ்கிய பன்றி, கடைசியாக வெகு ஆழத்தில் பூமி (பூமிதேவி) அடங்கிக் கிடப்பதைக் கண்டது. உடனே பன்றி அருகில்சென்று, அவளை எடுத்துத் தன் வயிற்றுடன் (மார்புடன்) அணைத்துக் கொண்டது.

அப்பொழுது மிகுந்த பலசாலியான அரக்கன் ஒருவன் பெரிய கதையை வீசிக்கொண்டு வராகத்தை நோக்கி ஓடிவந்தான். வராகம் மிகச் சுலபமாகத் தன் கொம்பினால் அவனைக் கிழித்துக்கொன்றது. பின் பூமியைத் தன் கொம்புகளில் தாங்கியபடி வராகமூர்த்தி தண்ணீருக்குமேல் எழுந்துவந்தார்.

பிரமாவும் முனிவர்களும் வேதமொழியில் வராக மூர்த்தியைப் புகழ்ந்தார்கள். "ஓ பிரபுவே' ஓ வராக மூர்த்தியே! இந்த வராக உருவம் மூன்று வேதங்களையும் உள்ளடக்கியது; உங்களுடைய கொம்புகளின்மீது பூமிதேவியைச் சுமந்திருப்பது, மலைச்சிகரங்களில் மேகங்கள் தங்கியிருப்பதுபோலிருக்கிறது. மிக அழகானதும் கவர்ச்சிகரமுமான காட்சி! ஓ, பிரபு! இந்தப்பூமி உமது தேவி, உலக மாதா! அவள் இருப்பதற்கு நிலையான இடத்தை அருளிச்செய்யுங்கள்.''

இவைகளைக் கேட்டு மகிழ்ந்த வராகமூர்த்தி தன் குளம்படிபட்டு உண்டான இடத்தில் பூமியை வைத்தார்.

மருத்துவ மயக்க மருந்து

(3)

மருத்துவ மயக்க மருந்தைக் காண ஹென்றி ஹில் ஹிக்மனுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. கிராபோர்ட் லாங் தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இவர்களை அடுத்துவந்த **ஸ்மைலி** (Smilie) என்ற மருத்துவரோ, மருந்தைக் கண்டார், அதன் தன்மையை அறிந்தார், நோயாளிக்கு அதைக் கொடுத்து வெற்றியுங் கண்டார்; ஆனால் அந்த அளவோடு நின்று, கண்டுபிடிப்புப் பாதையினின்றும் விலகிக்கொண்டார்.

ஸ்மைலி, போஸ்டன் நகரில் மருத்துவத் தொழில் புரிந்துவந்தார். அவரிடம் வந்து சென்ற நோயாளிகளில் இருமலினால் துன்புற்ற ஒருவரும் இருந்தார். இருமலை நீக்க அபினை ஈதர் வாயுவுடன் கலந்து அதை முகரச்செய்தார் ஸ்மைலி. அபின், வேதனையை ஓரளவுக்கு குறைக்கும் என்பதை ஸ்மைலி அறிந்திருந்தார். ஈதருக்கு பொருளைக் கரைக்கவும் ஆவியாக மாற்றவும் தன்மை உண்டு. அபினை உண்டு அது வயிற்றில் சென்று தங்குவதைவிட ஈதருடன் கலந்து அதன் ஆவியை நாசித் துவாரங்களின் வழியே உள் இழுத்தால் இருமல் குறையலாம் என்று ஸ்மைலி எண்ணினார். ஆகவே அந்த நோயாளியை ஈதர் கலந்த அபினை முகரச் செய்தார். நோயாளிக்கு இருமல் கொஞ்சம் குறைந்தது. ஸ்மைலி மகிழ்ச்சியுற்று கையில் கொஞ்சம் மருந்தைக் கொடுத்து நோயாளியை வீட்டிற்கு அனுப்பினார். ஆனால் சில மணி நேரத்திற்குப் பிறகு ஒருவர் ஓடோடியும் வந்து கூப்பிட்டதன் பேரில் ஸ்மைலி அந்த நோயாளியைப் பார்க்கச் சென்றார். அவர் கொடுத்த மருந்தை முகர்ந்த நோயாளி மயக்கமுற்ற நிலையில் சாய்ந்து கிடந்தான். இதைக் கண்டு ஸ்மைலி திகைத்தார்; மேலும் அந்த மருந்தை உட்கொள்ளாதவாறு தடுத்தார்.

இந்நிகழ்ச்சிக்கு சில மாதங்களுக்குப்பின் ஸ்மைலி மறுபடியும் ஈதர் கலந்த அபினை ஒரு பெண் நோயாளிக்குக் கொடுத்தார். அவளிடம் ஏற்படும் உள் இயக்கத்தைக் கவனித்தார். முதலில் அவள் இருமினாள். பின் இருமல் நின்றது; அவள் சோர்வடைந்தாள். ஸ்மைலி அவளிடமிருந்த மருந்தை எடுக்க விரும்பினார். ஆனால் அவள் உணர்வற்ற நிலைக்கு மாறும்வரை அவளது பிடியிலிருந்து அது அகலவில்லை.

இதிலிருந்து பெற்ற அனுபவங்கள் ஸ்மைலியை மறுபடியும் சில நாட்களுக்குப்பின் ஈதர் கலந்த அபினை ஒரு நோயாளிக்குக் கொடுக்கச் செய்தது. அதை உட்கொண்டு மயக்கமுற்ற நிலையில் நோயாளி விழ, ஸ்மைலி அவன் உடலிலிருந்த ஒரு சீழ்க்கட்டியை வேதனைக்கு இடமில்லாமல் உடைத்தார். இப்புதிய முறை பயனளித்ததைக் காண ஸ்மைலிக்கு மிகவும் வியப்பாக இருந்தது.

ஆனால் ஒரு கண்டுபிடிப்பாளருக்கு இருக்க வேண்டிய உள்ள உறுதி ஸ்மைலியிடம் இல்லை. தேர்வு எழுதிக்கொண்டிருக்கும் போது, சரியான விடையை அறிந்தும் அது சரியா தவறா என்று கொள்ளமுடியாத நிலையில் திண்டாடும் மாணவனைப்போல ஸ்மைலி இருந்தார். தான் அறிந்த உண்மையையும் தனது மருந்து முறையையும் ஸ்மைலி தன் துணை மருத்துவர்களிடம் கூறினார். ஆனால் அவர்கள், அபின் தொன்றுதொட்டுப் பழக்கத்தில் கொள்ளப்பட்டு கைவிடப்பட்டதென்பதையும், அளவு மிகும் நிலையில் உயிருக்குத் தீங்காகும் என்பதையுங் கூறி ஸ்மைலி அதைப் பயன்படுத்துவதைக் குறித்து எச்சரிக்கையுஞ் செய்தனர். மேலும் ஸ்மைலி ஈதரின் சக்தியை உணராமல் அபின் சக்தியினால்தான் உணர்வற்ற நிலை ஏற்படுகிறது என்ற தவறான எண்ணமும் கொண்டிருந்தார். உள்ள உறுதியற்ற ஸ்மைலி தான் கண்ட உண்மையை மேலும் ஆராய முயலாமல் கண்டுபிடிப்பாளரின் தகுதியற்ற நிலையை அடைந்து, ஹிக்மன், லாங் இவர்களுடைய வரிசையிலே சேர்ந்தார்.

★ கண்டுபிடிப்பு ★

அமெரிக்காவில் கனெக்டிகட் (Connecticut) மாநிலத்தில் ஹார்ட்போர்ட் (Hartford) என்ற நகரின் ஒரு வீதியில் நடந்த ஒரு சாதாரண நிகழ்ச்சி ஒரு இளைஞனின் சிந்தனையைக் கவர்ந்தது.

வீதியிலே இரு நாய்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அவ்வழியே சென்றவர் கூடினர் வேடிக்கை காண. அக்கூட்டத்திடையே 25 வயதுள்ள ஒரு இளைஞன் இருந்தான். ஒரு நாய் மற்றொரு நாயைப் பலமாகத் தாக்கி காலில் நன்றாகக் கடித்துவிட்டது. அடிபட்ட நாய் தோல்வியை ஏற்றுக்கொண்டதுபோல் அவ்விடம்விட்டு நகர ஆரம்பித்தது. கூட்டம் கலைந்தது. ஆனால் அந்த இளைஞன் மட்டும் அடிபட்ட அந்த நாயைக் கவனித்துக்கொண்டிருந்தான். அது சற்றுதூரம் ஓடியபின் நின்று தன் காலைக் கவனித்தது. அடிபட்ட இடத்தைத் தனது நாக்கால் தடவிக்கொண்டு பின் நொண்டிக்கொண்டே அவ்விடம் விட்டு நகர்ந்து பார்வையினின்றும் மறைந்தது.

இளைஞன் சிந்தனையுடன் நடந்துகொண்டிருந்தான்.

"சண்டையிட்ட உணர்ச்சியில் அடிபட்டதை அந்த நாய் உணரவில்லை. அடிபட்டிருக்கிறது என்று தெரிந்தபின் அதை உணருகிறது. அதுபோல மனிதனும், கெட்டுப்போன பல் ஒன்றைப் பிடுங்கும்போது, வேதனையை உணராத வகையில் ஏதேனும் ஒன்று......ஒரு மருந்து......பயன் பட்டால்!"

ஹோரேஸ் வெல்ஸ் (Horace Wells) என்ற அந்த இளைஞன் சிந்தித்துக்கொண்டேயிருந்தான். ஒருவழி கிடைத்தால் தனது தொழிலான பல் மருத்துவம் எளிதான வகையில் சிறப்படையும் என்று எண்ணினான்.

* * *

1844-ஆண்டு டிசம்பர் மாதம் ஆரம்பத்தில் ஹார்ட்போர்ட் நகரில் அடியிலுள்ள விளம்பரம் வெளியாகியது.

"நைட்ரஸ் ஆக்சைட் அல்லது சிரிக்கும் வாயுவை உட்கொள்ளும்போது ஏற்படும் தன்மைகளை விளக்கிடும் ஒரு கண்காட்சி! 1844, டிசம்பர் மாதம் 10 ம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை யூனியன் ஹாலில் நடைபெறும்!

40 காலன் வாயு தயாரிக்கப்படும். விருப்பமுள்ள எல்லா பார்வையாளர்கட்கும் உட்கொள்ளக் கொடுக்கப்படும்!

12 இளைஞர்கள் வாயுவை உட்கொண்டு காட்சியைத் துவக்க முன்வந்துள்ளனர்.

வாயுவை உட்கொண்டவர்களால் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் காயமேதும் ஏற்படாதவாறு தடுக்க, வலிவுடைய எண்மர் முதல் வரிசையிலே அமர்ந்திருப்பர்! இது ஆபத்து ஏதும் நிகழாதிருக்கவே செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில் எவரும் சண்டையிட முயலமாட்டார்கள்.

வாயுவை உட்கொண்டவர்கள் சிரிக்கலாம், ஆடலாம், பாடலாம், பேசலாம், சண்டையிடலாம்—இன்னும் அவரவர் தன்மைக்கேற்பத் தோன்றுவார்கள்.

குறிப்பு: பெருந்தன்மையுடைவர்களே வாயுவை உட்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். விழா எல்லா வகையிலும் நாகரீகமான நிகழ்ச்சியாக அமையவேண்டும் என்பதே நோக்கம்.

அறிவியலான வகையில் பயன்படுத்துவோருக்கு விழா அறிவியலான விழாவாக இருக்கும்.

வாயுவின் முழு வரலாறும் அதன் தன்மைகளும் விழா ஆரம்பத்தில் சொற்பொழிவின் மூலம் விளக்கப்படும்.

விழா 7-00 மணிக்கு ஆரம்பம்.

கட்டணம்—25 சென்ட்

★

கார்ட்னெர் குவின்சி கோல்டன் (Gardner Quincy Colton 1814—98) என்ற இயைபியல் (Chemistry) ஆசிரியர்தான் அந்தக் கண்காட்சிக்கு ஏற்பாடுகள் செய்தார். கோல்டன் மருத்துவக்கல்லூரியில் சேர்ந்து பயின்றார்: ஆனால், பட்டம் பெறவில்லை. ஒவ்வொரு நகராகச் சென்று அறிவியல் சொற்பொழிவுகள் செய்து அதன்மூலம் தனது வாழ்க்கையை நடத்திவந்தார். "மின் ஆற்றல் சிறப்பு," "நைட்ரஸ் ஆக்சைட் வாயு"—இவை இரண்டும் அவருடைய சொற்பொழிவுகளில் சிறப்புடையதாக அமைந்திருந்தன.

குறிப்பிட்டபடி 1844, டிசம்பர் 10 ம் நாள், கண்காட்சி நடைபெற்றது. ஹொரேஸ் வெல்ஸ் தனது மனைவியுடன் பார்வையாளராக வந்திருந்தார். கோல்டன் சிரிக்கும் வாயுவைப்பற்றி ஒரு சொற்பொழிவாற்றி காட்சியைத் துவக்கினார். சிரிக்கவும், கூச்சலிடவும் செய்யும் அந்த வாயுவை உட்கொள்ள பார்வையாளர்களில் பலர் மேடைக்கு வந்தனர். இதைப்போன்ற விழாக்கள் பல

இதற்கு முன்னர் நடைபெற்றிருக்கின்றன என்றாலும் இதில் முக்கியம் என்னவென்றால் ஹொரேஸ் வெல்ஸ் பார்வையாளராக வந்திருந்தது தான்.

கோல்டன் கொடுத்த வாயுவை உட்கொண்டு மேடையில் பலவாறாக ஆடியவர்களில் சாமுவெல் கூலி (Samuel Cooley) என்பவர் ஒருவராகும். ஹொரேஸ் வெல்ஸ், கூலியின் நடவடிக்கையைக் கவனித்துக்கொண்டிருந்தார். கூலி ஏதோ கூச்சலிட்டுக்கொண்டு தள்ளாடியபடி அருகேகிடந்தபெஞ்சியில்போய் விழுந்தார். தன் காலால் அந்த பெஞ்சியை நன்றாக உதைத்தார். அவர் போக்கு மிகவும் விசித்திரமாக இருந்தது; எல்லோரும் சிரித்தனர். கூலி ஒரு வினோதச் செயல்புரிகிறார் என்று எண்ணினார்களே தவிர வேறொன்றும் எண்ணவில்லை. ஆனால் கூலியின் செயல் வெல்சின் சிந்தையைக் கவர்ந்தது.

"பெஞ்சியின்மேல் விழுந்து உதைத்தபோது கூலி வேதனையை உணர்ந்ததாகத் தெரியவில்லை!

உதையின் வேகத்தைப் பார்த்தால் நிச்சயம் காயம் ஏற்பட்டிருக்கவேண்டும்!

கூலி தன்னைத்தானே உணராத வகையில் காயப்படுத்திக் கொண்டாரா?"

வெல்சின் சிந்தனையில் "நாய்ச்சண்டை நிகழ்ச்சி' மின்னலெனப் பாய்ந்தது!

புதியதோர் எண்ணம் தோன்றியது!

வெல்ஸ் தன்னிடத்தைவிட்டு எழுந்து கூலியிடம் சென்றார். காயம்பட்டதைக் குறித்து அவரிடம் வினவினார். ஆனால் கூலிக்கு ஒன்றும் புரியவில்லை; தெரியவில்லை! உடனே வெல்ஸ் கூலியின் கால்துணியை விலக்கிக் காலைப் பார்த்தார். முழங்காலுக்குக் கீழே கீரல் காணப்பட்டது; ரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

கீரலுடைய கால்; ஆனால் வேதனையில்லை!

வெல்ஸ் தலையைச் சொரிந்தபடி யோசித்தார். மறுபடியும் கூலியைக் கவனித்தார். கூலியின் முகத்தில் எவ்வித மாறுதலும் இல்லை.

வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

வெல்ஸ் தனது அருகே இருந்து கவனித்துக்கொண்டிருந்த டேவிட் கிளார்க் என்ற நண்பரிடம், "இந்த வாயுவின் சக்திக்கு உட்படும்போது ஒரு மனிதன் வேதனையை உணராமல் பல்லைப் பிடுங்கிக்கொள்ளவோ, காலை அறுத்துக்கொள்ளவோ முடியும் என்று நம்புகிறேன்" என்று கூறிவிட்டு வெற்றிப் புன்னகையுடன் எழுந்தார்.

"ஒரு மருந்தை முகர்தல்மூலம் உணர்வற்ற மயக்கநிலை: அதன்மூலம் வேதனையற்ற ரண மருத்துவம்."

ரணமருத்துவ வரலாற்றில் ஹொரேஸ் வெல்ஸ் விடிவெள்ளியாகத் தோன்றினார்.

ஆர்க்கிமிடீஸ் குளித்துக்கொண்டிருக்கும்போது, 'மிதக்கும் பொருள்களின் விதி'யைக் (Law of Floating Bodies) கண்டுபிடித்தார். நியூடன் 'புவிஈர்ப்புத் விதி'யை (Law of Gravity) ஒரு ஆப்பிள் மரத்தடியில் அமர்ந்திருந்தபோது கனியொன்று கீழே விழுவதைப் பார்த்துக் கண்டுபிடித்தார். டீக்கெட்டிலின் மூடி அசைவதைக்கண்ட ஜேம்ஸ் வாட் நீராவிப் பொறியின் கொள்கைகளைக் கண்டுபிடித்தார். நல்ல கோழிகள் கிடைக்காத நேரத்தில் நோயுற்ற கோழிகளைத் தனது ஆராய்ச்சியில் பயன்படுத்தியபோது நோய்த் தடுப்பின் சில அடிப்படை உண்மைகளை லூயி பாஸ்டர் கண்டுபிடித்தார். மாதாகோயிலில் தொங்கிக்கொண்டிருந்த சங்கிலிவிளக்கின் ஊசலாட்டத்தைக் கண்டு அதை எண்ணிக்கொண்டிருந்த கலீலியோ காலத்தை அளக்கவல்ல ஊசல் குண்டு (Pendulam) தத்துவத்தைக் கண்டுபிடித்தார்.

இவர்களைப்போலவே ஹொரேஸ் வெல்ஸ், சிரிக்கும் வாயுவை உட்கொண்டு பெஞ்சியில் மோதிக்கொண்ட மனிதனைக் கவனித்து மருத்துவ மயக்கத்தைக் (Anesthesia) கண்டுபிடித்தார்.

கண்டுபிடிப்பு என்பது எதிர்பாரா வகையில் ஏதோ 'அதிர்ஷ்டம்' என்பதன் காரணமாக ஏற்படுவதல்ல. கண்டுபிடிப்புகள் யாவும் தற்செயல் நிகழ்ச்சிகள் அல்ல; தற்செயல் நிகழ்ச்சிகளால் அறிவுக்கூர்மையுடையவர்கள் கண்டுபிடிப்புக்கு இழுத்துச்செல்லப்படுகிறார்கள். ஹொரேஸ் வெல்ஸ் அத்தகையதொரு தற்செயல் நிகழ்ச்சியைக் கண்டார்; சிந்தித்தார்; கண்டுபிடித்தார்.

ஆனால் தான் கண்டுபிடித்த உண்மையைச் செயல்முறையில் மருத்துவமனையில் பிறமருத்துவர்களுக்குக் காட்டும்போது ஹொரேஸ் வெல்ஸ் எதிர்பாராத் தோல்வியைக் காண நேரிட்டது.

அட்டைப்படம்

முதன்முதலாக ஈதரை ரண மருத்துவத்தில் பயன்படுத்திய **கிராபோர்ட் வில்லியம்சன் லாங்.**

புதிய வாழ்க்கை

ம. சிங்காரவேலு, பி. ஏ., பி. எல்.

நமது இந்த உலகத்தைப் போன்று அண்டத்தில் வேறு உலகங்கள் இருக்கின்றனவோ, இல்லையோ என்பது வெறும் யூகமேயொழிய, அதுபற்றி இன்னமும் தெளிவுஏற்படவில்லை. வானநூலோர் கோடானகோடி உடுக்கள், ஆவிமேகங்கள், ஒன்பதிற்குமேற்பட்ட கோள்கள் பல திங்கள்கள் அண்டத்தில் நிறைந்திருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். கணக்கிடமுடியாத அண்டப்பொருள்களில், யாதேனும் ஒன்றுகிலும் நமது உலகைப்போன்று இருப்பதாகத் தெளிவாகச் சொல்லமுடியவில்லை. நமது உலகிலுள்ள பூதபௌதீகப் பண்புகள் வாய்ந்த உலகம் ஒன்றாகிலும், அண்டத்தின் எந்த மூலையிலாகிலும் இருப்பதாக விளங்கவில்லை. இத்தகைய காரணங்களை நோக்கியே, பெரும் அறிவியல் அறிஞர்கள், இந்த ஓர் உலகில்தான் மனிதன் தோன்றியுள்ளான் என்று யூகிக்கிறார்கள். அண்டத்தில் இது ஓர் 'அற்புத' நிகழ்ச்சி என்று எண்ணலாம் போலும்! இந்த அரிய நிகழ்ச்சி நடந்து பத்து இலட்சம் ஆண்டுகள் இருக்கலாம் என்று கணக்கெடுத்துரைக்கிறார்கள். அதற்கு முன் பலகோடி ஆண்டுகள் மனிதன் நீங்கலாக அவனுடைய விலங்கு மூதாதைகளும், அவைகளுக்கு முந்திய மிகப்பழைய மூதாதைகளும் வாழ்ந்து வந்தனர்.

கடந்த பத்து இலட்சம் ஆண்டுகளாக இம்மனிதனுடைய வாழ்க்கை இவனது மூதாதையர் வாழ்ந்துவந்த வாழ்க்கையைவிடச் சிறப்பு ஒன்றுமில்லை. பேசத்தெரிந்துகொண்ட சிறப்பைத் தவிர, மற்ற வேறெந்த சிறப்பும் உண்மையில் காண்பதரிது. உலகில் விளைவும், உணவும் மிகுந்திருந்தும் கோடானகோடி மக்களுக்குப் போதுமான உணவு கிடைப்பதில்லை. மனித வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் நிறைந்திருந்தும், பெரும்பான்மை மாந்தர்க்கு வேண்டிய பொருள்கள் கிடைப்பதில்லை. உலக மக்கள் பேசத் தெரிந்துகொண்டும், பேசத் தெரியாதவர்கள் தற்போது இல்லையாயினும், பேச்சால் அறிந்துகொள்ளக்கூடிய உலக நடவடிக்கைகளைத் தெரியாத மக்கள் கோடானகோடிபேர்கள் இன்னமும் இருந்து வருகின்றனர். உலகில் வசிக்கப் போதுமான இடமிருந்தும், ஒருநாட்டார், அயல்நாடுகளைக் கைப்பற்றிப் போர் புரிகின்றனர். உணவுக்கும், இருக்குமிடத்திற்கும் போர் புரியும் கொடிய விலங்கினங்களைப்போல் மனிதனும் போரும் சண்டையும் போடுகிறான். இந்தப்பண்டைக் கால விலங்கு வாழ்க்கையை இரண்டொரு எடுத்துக்காட்டுகளால் அறியலாம். உலகப் பெரும்போர்களின்போது மாந்தர்க்குப் போதுமான உணவு கிடைக்கவில்லை என்று கோடானகோடி மக்கள் வாடிவதங்கினர். வேலை இல்லாமல் பலகோடி மக்கள் தெருவில் அலைந்தனர். மக்கள் உலகமெங்கும் வதைந்து வந்தார், நிலத்திற்கும், நீருக்கும் சொந்தக்காரர் என்று வழங்கும் சிலர் உணவுப்பொருள்களைத் தீக்கிறையாக்கியது போதாமல், கடலிலும் கொட்டி அழித்தனர். ஏன் இப்படிச் செய்தார்கள் என்றால், தங்களுக்குப் போதுமான இலாபம் கிடைக்கவில்லையாம். ஆயிரக்கணக்கான வாகன்கள் நிறைந்த மெலாம் பழங்களை மலையுச்சியிலிருந்து கடலில் கொட்டி இறைத்தனர். ஏனெனில் பழவகைகள் மிகவாக விளைந்து விலைபடாமல் இருந்தனவாம். இது விலங்கு வாழ்க்கையினும் கொடியதன்றோ! இந்த மனித நடத்தைக்குச் சமமான வாழ்க்கை, விலங்குகளில் பார்க்கவேண்டுமானால், சில கொடிய விளங்குகளாகிய சிங்கம் புலிகள் கொன்ற ஆட்டையோ மாட்டையோ சின்னபின்னமாய்ச் சண்டையிட்டுக் கிழித்தெரிவது போலாகும். ஏகாதிபத்திய அரசுகள் தத்தம் குடிமக்களுக்குத் தத்தம் நாடுகளில் வாழ போதுமான இடமும், நிலமும் இருக்க, அயல் நாடுகளைக் கைபற்ற போர்புரிந்து மாந்தரை மடியச்செய்கின்றன. 1914. ஆம் ஆண்டின் உலகப்பெரும்போரின் காரணங்களை, வல்லரசுகள் செய்துகொண்ட இரகசிய உடன்படிக்கைகளைப் படித்தவர்களுக்கு வல்லரசுகளின் பேராசை நன்கு விளங்கும். ஒரு வல்லரசுக்

குத் துருக்கருடைய நாட்டையும், மற்றோர் வல்லரசுக்கு இன்னோர் வல்லரசின் நாட்டையும் மற்றுமோர் வல்லரசுக்கு சில கடலோர நாடுகளையும் பங்கிட்டுக் கொள்வதற்காகப் புரிந்த மாபெரும் சண்டை எனத் தெரிந்து கொள்ளலாம்.

கடந்த பத்து இலட்சம் ஆண்டுகளாக, மனிதவாழ்க்கை விலங்கு வாழ்க்கையிலிருந்து மாறியதாக எண்ண இடமில்லை. ஒன்றையொன்று பிடுங்கித் தின்னும் நடவடிக்கை, நாகரிக காலமென்று வழங்கிவரும் நமது காலம் வரை நிகழ்ந்துகொண்டே வருகின்றது. உலகில் நடந்துவரும் போர்கள், காடுகளில் விலங்குகள் போடும் சண்டைக்கு ஒப்பாகும். வாணிகத்தில் மக்கள் போட்டியிட்டு ஒருவரையொருவர் வஞ்சிப்பது, ஒரு விலங்கு மற்றோர் விலங்கை வஞ்சித்துத் தான் வாழச் செய்து கொள்ளும் உபாயங்களைப் போன்றதே யாகும், செல்வவந்தர் வீடுகளென்று அழைக்கப்படும் இருப்பிடங்களிலிருந்து, எளியோரை அப்புறப்படுத்துவதும், புலி, சிங்கம் போன்றவைகள் மற்ற வலியற்ற விலங்குகளை வெளிப்படுத்துவதைப் போன்றதேயாகும். வல்லரசுகள் புரியும் போர்களும், ஒரு குரங்குக் கூட்டம் மற்றொரு குரங்குக் கூட்டத்தைக்கொன்று வெற்றிகொள்வதைப் போன்றதே யாகும். கல்வி கேள்வியில்லாத மக்கள் கோடிக்கணக்காக இன்றைக்கும் வாழ்ந்துவரும் வாழ்க்கை, ஒன்றிரண்டு என்று எண்ணத்தெரியாத பல கோடி புழுப்பூச்சிகளின் வாழ்க்கையேயாகும். எந்த விதத்தில் மனித வாழ்க்கை விலங்கு வாழ்க்கையைவிட உயர்ந்ததென்று சொல்லத் துணியக்கூடும்? பேசுந்திறமையால் உயர்ந்ததென்று சொல்லலாமா? பேசுந்தன்மை, மக்களுக்கு ஒருவாறு பயன்படுவதாயினும், பதின்மடங்கு கெடுதியை விளைவிக்க ஏதுவாக இருப்பதாகச் சொல்லலாம். கோடானகோடி ஆண்டுகளாக இவ்வுலகில் தோன்றாத கற்பனைகள், மனிதன் பேசத்தெரிந்த பிறகே முளைத்தன. 'கடவுள்,' 'நரகம்,' 'மோட்சம்,' 'மறுபிறப்பு,' 'சீவன்,' 'ஆன்மா,' 'பரமாத்மா,' முதலிய சமயங்களின் கற்பனைகளும், சாதி' வர்ணம் முதலிய சமூகக் கற்பனைகளும் மனிதன் பேசத் தெரிந்தபிறகே கற்பித்துக் கொள்ளப்பட்டவைகளாகும். தேளுக்குக் கொடுக்கும், பாம்புக்கு நஞ்சும் தோன்றியதுபோல், மனித குலத்தில் சமயக்கற்பனைகளும், சாதிக் கற்பனைகளும் தோன்றியுள்ளன. ஆனால் ஒரு வேற்றுமையுண்டு. அது யாதெனில், தேளின் கொடுக்கும், பாம்பின் நஞ்சும் தம் இனங்களைக் காப்பாற்றிக்கொள்ள அமைந்த துணைகளாகும். ஆனால் மனிதகுலத்தில் முளைத்த கற்பனைகளோவெனில், மனித குலத்தையே அழிப்பனவாகவும், மனித குலத்துக்குத் தொல்லை கொடுப்பனவாகவும் அமைந்திருக்கின்றன. "உலகில் தோன்றிய பொருள்களில், மனிதன் ஒருவனே கொடுமையானவன்" என்று கவிஞன் ஒருவன் சொன்னது ஒரு வகையில் உண்மையேயாகும். மனிதனுடைய வாழ்க்கை உலகியல் பற்றியதாயினும் (Materialistic) அல்லது மனவியல் பற்றியதாயினும் (Idealistic) அதாவது கற்பிதவாழ்க்கையாயினும், விலங்கு வாழ்க்கையாகவே பெரும் வகையில் காணப்படுகிறது. இதுவே அவனது பண்டைக்கால வாழ்க்கையாகும். இந்தப் பழமை வாழ்க்கைமாறி, புதிய வாழ்க்கையை அடையுங்காலம் எக்காலம்? அல்லது இந்தப் பழமை வாழ்க்கையிலேயே மக்கள் இனம் மடியும்வரை மனிதன் இருந்துவரப் போகிறானா? இந்த ஆழ்ந்த வினாவிற்கு அறிஞர் கூறும் விடை யாது என வினவுவோம்.

மனிதன், தனது வாழ்க்கையில் எந்தவிதத்தில் உயர்ந்தவன் என்று சொல்லக்கூடும்? மிக்விரைவில் செல்லுவதற்கு இரயிலும், வானவூர்திகளும் கண்டுபிடித்துள்ளான் என்று சொல்லலாமா? பறவைகள் மணிக்கு 60, 70 மைல் வீதம் பறக்கின்றன. மான், குதிரை முதலியன மணிக்கு 30, 40 மைல் வீதம் ஓடுகின்றன. மனிதன் பங்களாக்களிலும், மாடமாளிகைகளிலும் வாழ்கிறான் என்று சொல்லலாமா? பறவைகள் மிக நேர்த்தியான கூடுகளில் வாழ்கின்றன. பனி நிறைந்த வட முனையில் பீவர் என்ற உயிரினம் கட்டும் அறைகளைப் போன்று மனிதனால் கட்டமுடியாது. தேனீக்கள் கட்டும் அறைகள் எவ்வளவு வியப்புக்குரியனவாக இருக்கின்றன. போர்க்கருவிகளைப் பயன்படுத்துவது மனிதன் ஒருவனுக்குத்தான் தெரியுமா? கட்டைகளையும், கொம்புகளையும் குரங்குகள் தங்கள் எதிரிகள்மேல் எறிகின்றன. பேசத் தெரிந்து கொண்ட வன்மையால், மனிதன் விலங்குகளைவிட மிகவாகத், தன் கைகளுக்கு அகப்படும் பொருள்களைப் பயன்படுத்திக் கொண்டானே ஒழிய, வேறுவித சிறப்பு ஒன்றுமில்லை. கல்வி கற்பதால் ஏதேனும் வேற்றுமை உண்டோவெனின், சிறு குட்டிக்குரங்குகளுக்கு அதன் தாய்மார்கள், இதைச்செய்யாதே அதைச் செய்யாதே என்று கற்றுக்கொடுக்கின்றன. பறவைகள், பறக்கத், தங்கள் குஞ்சுகளுக்குத் தாங்கள் பறந்து காட்டுகின்றன. எலிக்குஞ்சுகளைப் பிடிக்கப், பூனைகள், தம்குட்டிகளுக்குக் கற்றுக் கொடுக்கின்றன. விலங்கினத்தி

விருந்து வந்த மனிதன், தனது வாழ்க்கைக்கு வேண்டிய கல்வி கேள்விகளுக்கு ஆதாரம் விலங்குகளின் வாழ்க்கையிலிருந்தே சிறுபான்மையாகப் பெற்றிருக்கிறான். இந்த ஆதாரத்தை மேலும்மேலும் வளர்த்துப் பெற்றுக் கொண்டதுதான் இவனுடைய சிறப்பு. ஆதலின் இவனது வாழ்க்கைக்கு ஆதாரம் விலங்கு வாழ்க்கையே. இந்த வாழ்க்கையைச் சில வகைகளில் வளர்ச்சியுறச் செய்துகொண்டான். வாழ்க்கையின் சிலவகைகளில் தீங்கையும் விளைவித்துக் கொண்டான். மனித வாழ்க்கையில் தீங்கை விளைவித்துக்கொண்ட வகைகள் மூன்று. அவையாவன :—

முதலாவது பொதுவாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியஉணவு, உடை, இருப்பிடம் ஆகியமூன்றையும் தனியுடைமை ஆக்கியது.

இரண்டாவது, பயன்படுத்திவரவேண்டிய பொருள்களின்மேல் இலாபம் (Profit) என்ற திட்டத்தை ஏற்றி, இதனை நிலவரி என்றும், குடிவரி என்றும் வழங்கிப், பெரும் பான்மையோரின் வாழ்வுக்கு வேண்டிய இன்றியமையாப் பொருள்களைப் போதுமானவரை கிட்டாமல் செய்துவருவது.

மூன்றுவது, மக்கள் வாழ்வுக்குவேண்டிய பொருள்களைப் பொதுவாக வினியோகித்து வரவொட்டாமல், சிலரே அப்பொருள்களைக் கையாண்டு வருதல்.

இம்மூன்று முறைகளால் (Systum) மக்கள் போதுமான பொருள்களின்றித் தவிக்கிருர்கள். இம்மூன்றுமுறைகளை மாற்றி, உண்டாகும்பொருள்கள் யாவற்றையும் யாவர்க்கும் சரிசமத்துவமாக உதவும்படி செய்வதுதான் சமதர்மவழி என்பார்கள். புதிய வாழ்வு உலகில் பரவவேண்டுமானுல், சமதர்மவழி ஒன்றே உளது. இந்த வழியைவிட்டுவேறு எந்த வழியிலும் உலக நலபலனுக்கு இடமில்லை.

இலாபத்திற்காகவே உலகப் பொருள்களில் பலவும் சொந்தமாக்கப்பட்டு வருகின்றன. பயன்படுத்துவதற்கென்ருல், எந்தப் பொருளையும், எவனும் சொந்தமாக்க மாட்டான். உலகில் விளையும் புல்லை எடுத்துக் கொள்வோம். விலங்குகள், எந்த உலகிலும் விளையும் புல்லையாகிலும், அல்லது, நிலங்களையாகிலும் சொந்தமாகக் கருதி விற்பனை செய்வதில்லை. விளைந்தபுல்லை, புல்லைத்தின்னும் உயிர்வகை யாவும் போதுமானவரை தின்கின்றன. போதாமற்போனுல், எல்லாம் பட்டினி கிடக்கின்றன. ஒரு விலங்கு விளையும் புறகள் அனைத்தும் தனக்குத்தானே சொந்தம் என்று கருதிக் கொண்டுதானே அனைத்தையும் தின்பதில்லை. இம்மாதிரியாக எல்லா உலகப் பொருள்களும் விலங்குகளுக்குப் பயன்பட்டு வருகின்றன. முக்கியமாகக் கூட்டுறவு விலங்குகளில் இந்தப் பொதுவான பயன்படும் திட்டத்தைப் பார்க்கலாம். அதுபோலவே, மக்கள் யாவரும் பொதுவுடைமைத் திட்டத்தைக் கையாடினுல், உடையவன் - இல்லாதவன், பணக்காரன்-ஏழை, முதலாளி-தொழிலாளி என்னும் இன வேற்றுமை உலகில் இருக்காது.

இலாபத்தை வைத்துக்கொண்டு எந்தப் பொருளையும் சரிசமத்துவமாக நுகர முடியாது. நிலத்தைப் பொதுவாக உழுது, பொதுவாக விரைத்துப், பொதுவாகப் பயிர்செய்து, அதன் பலனைப் பொதுவாக நுகர்ந்தால்தான் இல்லாமை (Want) பலகோடி மக்களுக்கு இல்லாமலிருக்கும். 'சொந்தம்' என்ற கற்பனையால் நிலத்தின் பலனைக் கையாண்டு வருவதாய், சிலருக்கு மிகவாகவும், பலருக்குக் குறைவாகவும் பலன் கிடைக்கின்றது. 'சொந்தம்' என்ற கற்பனை உழைத்தவனுக்கு உதவாமற் போகிறது. இந்தச் 'சொந்தம்' என்ற சொல்லை மாற்றி 'உபயோகம் அல்லது பயன்' என்ற சொல்லை வழக்கத்தில் கொண்டு வந்தால் தான், உலகவறுமை நீங்கும். **'சொந்தம்' உலகில் வழங்கும் வரை, அதாவது சொந்தம் என்ற பழக்கமுறை உலகில் நிலவும்வரை, சனநாயகம் ஆனுலும் சரி, முதலாளித்துவமானுலும் சரி, பாசிசம் ஆனுலும் சரி, அல்லது அமெரிக்கச் சீர்திருத்தமானுலும் சரி, உலகம் பசிப்பிணி, வறுமை ஆகியவற்ருல் வருந்தியே கிடக்கும் என்பது உறுதி.**

சில ஆண்டு காலமாக, அமெரிக்காநாட்டில் பசிப்பிணியைப் போக்கச் சிலவழிகளைத் தேடி வருகின்றனர். அதனை சீர்திருத்தமுயற்சி (Recovery Drive) என்று வழங்குவார்கள், இதன் முக்கியதன்மைகள் என்னவெனில். வேலை இல்லாதார்க்கு வேலைகொடுக்கவேண்டும், வாழ்க்கைக்குப் போதுமானவருமானம் கிடைக்கும்படி செய்யவேண்டும், நின்றவேலைகளைத் துவக்கவேண்டும், செலவிடாத பணத்திற்குச் செலவுதேடவேண்டும் விலைபடாத சாமான்களை விலைபடச்செய்யவேண்டும், என்பனபோன்றவையாகும். இந்தச் சீர்திருத்தங்களைச்செய்யவேண்டிவந்ததன் காரணம் என்னவெனில், உலகப்பெரும் போர்க்காலத்தில் அமெரிக்கா முதலாளிகள் திரண்டசெல்வத்தைக்குவித்து வைத்துக்கொண்டார்கள். இவ்வளவு பணமும் அயல்நாடுகளிலிருந்து பல விதங்களில் அமெரிக்காவுக்கு வந்துகுவிந்தது. வெளியூர்களில் பணமில்லாத காரணத்தால்,

அமெரிக்கா சரக்குகளை வாங்கவோ, அல்லது அந்த ஊர்களில் கடன் வாங்கவோ முடியாமற் போயிற்று. சரக்குகள் விலைபடாமையால், அவைபெரும் அளவில் தொழிற்சாலைகளில் குவிந்தன. சரக்கு இருப்பில் இருந்து வந்த படியால், புதிய சரக்குகள் உற்பத்தியாக்க முடியவில்லை. சரக்குகள் உற்பத்தியாகாதபடியால், சாலைகள்மூடப்பட்டன. சாலைகள்மூடப்படவும் பாங்கில் குவிந்து கிடக்கும் பணத்திற்குச் செலவு இல்லாமற்போயிற்று. உழைப்போர்க்கு வேலை இல்லாமற் போயிற்று. வாங்குவார் அற்றுச் சரக்குக்கு விலை குறைவு நேரிட்டது. ஆனால், வாங்குவதற்கு, உழைப்பாளிகளுக்குப் பணமில்லை. பணமிருந்தும், பாக்கியம்இருந்தும் அமெரிக்கருக்கு உண்ண உணவு இல்லாமற்போயிற்று. ஒருகோடி பன்னிருலட்ச உழைப்பாளிகள் வேலையில்லாமல் தெருக்களில் திரியத்தலைப்பட்டனர். விளைந்த விளைவு வயல்களில் அம்பாரம், அம்பாரமாகக் குவிந்தது. விவசாயிகளுக்கு இலாபமில்லாமல், நிலங்களைக் கரம்பில் வைத்துவிட நேரிட்டது. கோடிக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமற்போயிற்று, இத்தகைய வியப்பான போக்குக்கு வழி என்ன என்று ஆய்ந்துபார்த்தனர். குவிந்துகிடக்கும் சரக்கை அழித்துவிட்டால் விலை ஏறும் என்று பார்த்தார்கள். சரக்கு அழிந்ததே ஒழிய, மீதிசரக்கை வாங்குவார் இல்லை. வாங்கும்படியாகத் தொழிற்சாலைகளில் உழைப்பவர்களுக்குச் சம்பளங்களை உயர்த்த காகித நாணயச் செலவாணியை மிகவாக்கினர்கள். சம்பளம் உயரவும், சரக்குகளுக்கு விலை ஏறியது. விலை ஏறவும் மூடப்பட்ட சாலைகள் திறக்கப்பட்டன. இரயில்களுக்கும், கப்பல் வாணிபங்களுக்கும்மிக்க வருமானம் கிடைக்கத் தொடங்கிற்று, ஆனால், முதலாளி எவ்வளவு நாள் காகிதச் செலவாணியை நம்பி இருக்க முடியும்? எத்தனை நாட்கள் குறைந்த இலாபத்துடன் இருக்க முடியும்?

விளைவு விலைபடாத விவசாயிகளுக்கு நட்ட ஈடு செய்ய ஆரம்பித்தனர். அவர்களைக் குறைவாகப் பயிர்செய்யச் செய்தனர். ஆனால், கோடிக்கணக்கான விவசாயத் தொழிலாளர்க்கு வேலை இல்லாமற் போயிற்று. நட்ட ஈடு நிலச்சுவான்கள் பையில் போய் விழுந்தது. உழைப்பவர் வயிற்றில் மண் வந்து விழுந்தது. சரக்குகள் ல்லாமையால், அவற்றின் விலை உயர்ந்தது. ஆனால் விலையுயர்ந்த சாமான்களை வாங்குவதற்குப் போதிய சம்பள உயர்வு இல்லை. திரும்பத்திரும்ப இருந்தநிலைக்கே (Vicious Circle) வரும்கேட்டைச் சீர்படச் செய்யும் முயற்சி அமெரிக்கருக்கு வந்தது. இந்தக் கேட்டைக் கவனித்துவந்த அறிஞர்ஒருவர் "அமெரிக்கர் நிலைமை உண்மையில் சீர்பட வேண்டுமானல், பொதுவாகச் சகலருக்கும் உதவும்படி ஒருதிட்டத்தை உண்டாக்கவேண்டும். அந்தத்திட்டத்தைச் 'சொந்தம்' என்ற சொல்லைக் கொண்டும், அல்லது இலாபம் என்ற நோக்கத்தைக் கொண்டும் நிறைவேற்ற முடியாது" என்று கூறினர்.

செய்பொருளும், விளைபொருளும் எல்லோர்க்கும் சரிசமத்துவமாக வினியோகிக்கப்படும் திட்டம் எதுவோ அந்தத்திட்டத்தின் மேல்தான் மனிதனின் புதிய வாழ்க்கை கட்டப்படமுடியும்.

மனிதனின் முன்னேற்றத்தில் ஒரு கருத்து அடங்கியிருக்கிறது. கருத்தின் காரணமாகத்தான் இயக்கங்கள் நடைபெறுகின்றன; ஆவேசம் உண்டாகிறது புதிய வாழ்க்கை அமைகிறது; சமூக அமைப்பும் மாறுகிறது; பின்பு வாழ்க்கை முறையே மாறிவிடுகிறது. பிரான்ஸில் அரசியல் புரட்சிநடந்தது; அதுவும் கருத்தின் காரணமாகத்தான். மார்க்ஸ் தோன்றினர்; அவருடைய கருத்தின் ஆதாரத்தில் ருஷ்யாவில் ஒரு வேலை நடந்தது. இவற்றால் கருத்தின் சக்தி என்ன என்பதை நாம் உணர்கிறோம். மனிதனுக்குக் கருத்துதான் சக்தியை அளிக்கிறது. எல்லாவற்றிற்கும் அடிப்படையான ஒரு கருத்து இருக்கிறது. அதைத்தான் நாம் தர்மம் அல்லது கொள்கை என்று கூறுகிறோம். கருத்தின் அடிப்படையில் வாழ்க்கை என்னும் கட்டிடம் எழுகிறது.

—ஆச்சாரியா விநோபா பாவே

அடிகளும் ஐந்துரூபாயும்!

நான், பட்டுக்கோட்டையில் மாவட்டர்ண்மைக் கழக உயர்நிலைப்பள்ளியில் பயின்றுகொண்டிருந்தகாலை நானும் எனது இள்வல் இரா. செழியனும், மற்றுஞ்சில தமிழார்வங்கொண்ட மாணவர்களும் சேர்ந்து "திருவள்ளுவர் இளைஞர் தமிழ்க் கழகம்" என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு அதன்மூலம் சொற்பயிற்சிக்கூட்டம், பொதுக்கூட்டம் ஆகியவைகள் நடத்திவந்தோம்.

1937-38 ஆம் ஆண்டில் நான் பள்ளி இறுதி வகுப்பில் பயின்றுகொண்டிருந்த போது, இந்தி எதிர்ப்பு இயக்கம் தமிழகத்தில் மிகவலுப்பெற்றிருந்தது. இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் "திருவள்ளுவர் இளைஞர் தமிழ்க் கழகம்" மிகவும் ஈடுபட்டுத் தீவிரமாகப் பணியாற்றிவந்தது. தமிழ்க் கழகத்தில் மாணவர்கள் மட்டும் பங்கு கொண்டிருந்ததால், மிகக் குறைவான பொருளாதார வசதியைக்கொண்டிருந்தது. மாணவர்கள் ஒவ்வொருவரும் திங்கள் ஒன்றுக்கு ஒரு அணு வீதம் உறுப்பினர் கட்டணமாகச் செலுத்தியவகைகளில் ரூபாய் பன்னிரண்டு சேர்த்து வைத்திருந்தோம்.

அப்பொழுது ஈழத்து அடிகள் கருவூர் அறிவுதயக் கழக ஆசிரியர் ஈழத்துச் சிவானந்த அடிகள் என்ற பெயரில் இந்தி எதிர்ப்பு இயக்கத்தை முன்னின்று நடத்திவந்தார்கள். எங்கள் தமிழ்க்கழகம் அவரைப்பட்டுக்கோட்டைக்கு வரவழைத்து பொதுக்கூட்டம் ஒன்றில் பேசவைக்கவேண்டும் என்று முடிவு செய்தது. நான் தமிழ்க் கழகத்தின் செயலாளர் என்ற முறையில் பட்டுக்கோட்டைக்கு வரும்படி தோழர் ஈழத்து அடிகளுக்கு எழுதிக்கேட்டிருந்தேன். அவரும் வர இசைவு தந்திருந்தார்.

நாங்கள் ஏதும் அறியாத இளம்மாணவர்களாக இருந்தால், தோழர் ஈழத்து அடிகள் கரூரிலிருந்து பட்டுக்கோட்டைக்கு வர ரூபாய் ஐந்து போதும் என்று நினைத்துக்கொண்டு அந்தத்தொகையை அவருக்கு அனுப்பிவைத்திருந்தோம். அவர் குறிப்பிட்ட நாளில் வந்துசேர்ந்துவிடுவார் என்றும் நினைத்துக்கொண்டோம். மேற்கொண்டு அவருக்கு நாங்கள் ஏதும் எழுதவில்லை.

தோழர் ஈழத்து அடிகள் அவர்கள் நாங்கள் அனுப்பிவைத்த ரூபாய் போதாது என்று கருதினரோ அல்லது மாநாட்டிற்குப் போகவேண்டியது இன்றியமையாதது என்று கருதினரோ, எது என்று தெரியவில்லை, அவர் நாமக்கல்லில் நடைபெற்ற ஒரு மாநாட்டிற்கு அதே நாளில் போகப்போவதாகவும், பட்டுக்கோட்டைக்கு வருவதற்கில்லை என்றும் எங்களுக்குக் கூட்டத்தன்று வந்து சேரும்படி அஞ்சல் எழுதிவிட்டார்.

மாணவர்களாகிய எங்களுக்குத் தோழர் ஈழத்து அடிகள்மீது அடங்காத சினம் பொங்கிற்று. பிறகு தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்களை வைத்துக்கொண்டு கூட்டத்தை வெற்றிகரமாக நடத்தினோம்,

அறியாப்பருவத்தினராகிய நாங்கள், தோழர் ஈழத்து அடிகள் அவர்களிடமிருந்து, அவருக்கு அனுப்பிவைத்த ரூபாய் ஐந்தையும் எப்படியும் வாங்கிவிடவேண்டும் என்று முயற்சி எடுத்தோம். சுமார் இருபது முடங்கல்கள் பணத்தைத் திருப்பி அனுப்பும்படி அவருக்கு வற்புறுத்திக் கண்டித்தெல்லாம் எழுதினோம். அவர் ஐந்து ரூபாயைத்திருப்பி அனுப்புவதைப் பற்றி ஏதும் குறிப்பிடாமல், "நாராயண் (அப்பொழுது எனக்கிருந்த பெயர்) நன் மாணவ! நலம்! தங்கள் மடல் வரப்பெற்றேன். நான் இந்தி பொதுமொழியா? என்ற நூலை இலவசமாக வெளியிட்டுள்ளேன். அதற்கு நன்கொடை திரட்டி அனுப்ப வேண்டுகிறேன்" என்னும் கருத்துப்பட ஒவ்வொரு முறையும் விடை முடங்கல் தீட்டுவார். அந்த ஐந்து ரூபாயையும் நிதியாக வரவுவைத்துக்கொள்ளும் முடிவு ஏற்படவேண்டும் என்னும் கருத்துப்பட அவர் எழுதுவார். அந்த ஐந்து ரூபாயையும் திருப்பி அனுப்பிவைத்தால், பிறகு நிதி திரட்டி அனுப்புகிறோம் என்று நாங்கள் அவருக்கு முடங்கல் எழுதுவோம். தோழர் ஈழத்து அடிகள் ஆற்றிவந்த தொண்டின் சிறப்பை அறியாமல் அவரிடம் முடங்கல்மூலம் சண்டையிட்டு வந்தோம்!

அவர் இன்னமும் அந்த ஐந்து ரூபாயைக் கொடுக்கவில்லை!

மலாயா தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி!

எம்மொழியிலும் சிறந்த மும்மொழியின் ஏடுகளை செம்மையதாய் விற்பனைக்கு வைத்திருக்கும்—அவ்வை அருமைபெரு நூல் நிலையம் ஒன்றே இக் கம்பாரில் பெருமையுடன் வாங்க! வருக !!

அன்பர்களே! வணக்கம். எங்களிடம்,

* அறிவு பெற அறிஞர்களின் இலக்கிய இதழ்கள்!
* கருத்தூற கவிஞர்களின் காவிய ஏடுகள்!
* அன்றாட நிகழ்ச்சிகளை உடனுக்குடன் தாங்கிவரும், ஆங்கில, மலாய், தமிழ், தினசரி ஏடுகள்!
* குடும்பங்களுக்குப் பிடித்த முதல்தரமான கதைப் புத்தகங்கள்!
* குழந்தைகளின் உள்ளங்களை குளிரவைக்கும், திங்கள்–வார இதழ்கள்; நகைச்சுவை ததும்பும் சிறுகதைப் புத்தகங்கள்!
* பாலர் வகுப்பிலிருந்து, மேல் வகுப்புவரை பயன்படுத்தும் பள்ளிக்கூடப் புத்தகங்கள்!
* சினிமா சம்பந்தமான சிறுகதைகளைத்தாங்கி வெளிவரும் திங்கள் வார இதழ்கள், வசனம், பாட்டுப் புத்தகங்கள்!

முதலியனவும், இன்னும் இதில் குறிப்பிடாத பிரபல வரலாற்று ஏடுகளும் கதைப் புத்தகங்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும், குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

குறிப்பு:—தையல் வேலைகளும் செய்துகொடுக்கப்படும்.

N. B. விவரங்களுக்கு:— **அவ்வை புத்தக நிலையம்,**

142, ஜாலன் இட்ரீஸ்; கம்பார், (மலாயா)

உரிமையாளர்:—கோ. வரதராசன். டெலிபோன் நெ. 22

AVVAI BOOK STALL

142, JALAN IDRIS, KAMPAR. PERAK, MALAYA.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்:- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது